

# பாவம்

க.சட்டநாதன்

JPL
C13401

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
27 JAN 2021
மாநகர சபை
யாழ்ப்பாணம்

# சுபாவம்

க.சட்டநாதன்

KOHA
JPL

13401 CC

281264

ஜீவநதி வெளியீடு

281264 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
94.811301

KOHA
JPL

சுபாவம் (சிறுகதைகள்)/ க. சட்டநாதன் /21, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்/ முதற்பதிப்பு: ஆனி 2020/ ©க.சட்டநாதன்/ அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன் / வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய் / பக்கம்: 106/ விலை: 350.00/ அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Subhavam (a collection of Short Stories) / K. Saddanathan/ 21, Saddanathar Road, Nallur, Jaffna/ First Edition: June 2020/ ©K.Saddanathan/ Cover Designed by K.Bharaneetharan/ Published by Jeevanathy, Kalai aham, Alvai / Pages: 106 /Price: 350.00/ Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-955-0958-38-2

ஜீவநதி வெளியீடு – 150



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நீண்டநாள்
இலக்கிய நண்பர்களான
ஏ.ஜெ.கனகரத்தினா
அ.யேசுராசா
குப்பிழான் ஐ. சண்முகன்
ஆகியோருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

- ந.குகபரன்
- தி. செல்வமனோகரன்
- க.பரணீதரன்
- ஜீவநதி
- கலைமுகம்
- தினக்குரல்
- நடு இணையம்
- பரணீ அச்சகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கனவு மெய்ப்பட வேண்டும்
- தீர்மானமாய்
- தடை
- சருகு
- குற்றமும் தண்டனையும்
- செல்லும் திசை
- சுபாவம்
- விபத்து
- ஆறுதல்
- கனவும் பொழுதுகள்
- தனியன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஜீவநதியின் 150 ஆவது வெளியீடாக ஈழத்து முதற்தர எழுத்தாளர் க. சட்டநாதனின் "சுபாவம்" சிறுகதைத் தொகுதி வெளி வருகின்றது. ஈழத்துச் சிறுகதை இலக்கிய வரலாற்றில் க.சட்டநாதனின் படைப்புகள் தனித்துவ மானவை; ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுபவை. மனித உணர்வுகளை, அன்பைச் சொரியும் பாத்திரங்களை உருவாக்குவதில் ஈழத்தில் சட்டநாதனிற்கு நிகரானவர்கள் எவரும் இல்லை எனலாம். தொடர்ந்து 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தனது படைப்புக்களை வெளியிட்டு வருகின்றார். சிறு கதை, கவிதை, நாவல், விமர்சனம், கட்டுரை எனத் தொடர் எழுத்துச் செயற்பாட்டாளராக விளங்கி வரு கின்றார். ஜீவநதியின் வெளியீடாக க.சட்டநாதன் அவர் களின் பொழிவு, தஞ்சம் ஆகிய சிறுகதைத் தொகுதிகள் வெளியாகின. அவை வாசகரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன; விருதுகளும் பெற்றுக் கொண்டன. இந்தத் தொகுப்பும் வாகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெறும் என்ற நம்பிக்கையுடன் இந்தத் தொகுப்பை வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்வு அடைகின்றோம். முதுமையைக் கண்டு அஞ்சாது இன்றும் தன் எழுத்துக்களால் இலக்கியச் சேவை புரிந்து கொண்டு இருக்கும் க. சட்டநாதன் பாரட்டிற்கும் மதிப்பிற்குமுரியவர். அவர் இன்னும் பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

க.பரணீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27 JAN 2021

# அகமன வெளிப்பாடு

ஈழத்துப் படைப்புலகில் 1970களில் இருந்து தொடர்ச்சியாக எழுதிவருபவர் க.சட்டநாதன். சிறுகதை, நாவல், கவிதை என இவரது வெளிப்பாட்டுத் தளங்கள் பன்முகப்பட்டன. இருந்தும் இவர் அடையாளம் பெறுவது சிறுகதையின் ஊடேயாகும். 1980களில் வெளியான மாற்றம் சிறுகதைத் தொகுப்பிலிருந்து இதுவரை ஏழு சிறுகதைத் தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன. சுபாவம் இவரது எட்டாவது சிறுகதைத் தொகுப்பாகும்.

சட்டநாதன் அவர்களின் சிறுகதையுலகம் தனித்துவமானது. அகமனப்போராட்டங்களை, குறிப்பாக ஆண் பெண் உறவுச் சிக்கலை, சமூகப் பிரச்சினைகளை எந்தச் சிடுக்குமில்லாமல் எளிமையாக முன்வைப்பதும் வாழ்வின் அனுபவங்கள் கதைகளில் உயிர்பெறுவதும் தனித்துவமாக இவரது கதைகளில் வந்துள்ளன. காதல், பிரிவு, ஏக்கம், காமம், போருக்குள் வாழ்தல் எனச் சுபாவம் தொகுதியில் பதினொரு சிறுகதைகள் உள்ளன. அவை பேசும் களங்கள் வித்தியாசமானவையாய் விரிகின்றன.

ஆசிரியர் பெண்கள் மீது மதிப்புக்கொண்டவர், அவர்களது அகமனப்போராட்டங்களை உணர்வுபூர்வ மாக வெளிப்படுத்தக் கூடியவர். கனவுமெய்ப்பட வேண்டும், செல்லும் திசை, கனவும் பொழுதுகள், தனியன்கள், தீர்மானமாய் முதலான சிறுகதைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், எதிர்பார்ப்புகள் துல்லியமாகப் பதிவு பெற்றுள்ளன. இவரது பெண்பாத்திரங்கள் அகத்தடைகள் எதுவுமின்றி தம் காதலை,காமத்தை வெளிப்படுத்துபவர்கள். தமது வாழ்க்கை தொடர்பாகத் தீர்மானமெடுக்கும் தற்றுணிவுமிக்கவர்கள். தனியன்கள் சிறுகதையில் வரும் மங்களம் என்ற பாத்திரத்தை இதற்கு வகைமாதிரியாகக் குறிப்பிடலாம்.

அகவாழ்க்கையில் பண்பாட்டு வரையறைகளின் செல்வாக்கினையும் சமூக அசைவியக்கத்தில் அடுத்த தலைமுறையினரில் ஏற்படும் மனமாற்றங் களையும் அவர்களது முற்போக்கான செயற்பாடுகளையும் தரிசனப்படுத்துவதில் ஆசிரியரின் கண்ணோட்டம் கவனிப்பிற்குரியது. சாதிய வேறுபாடுகளைக் கடந்து, தூய காதல் உறுதிபெறுவதை விபரிக்கும் தீர்மானமாய் கதை இதனோடு பின்னியது. ஈழத்து சிறுகதைகளில் போரின் பாதிப்புகள் குறித்த கருப்பொருள் பிரதான இடத்தைப் பெறுகின்றது. போருக்குள் வாழ்தல் என்பது வலிநிறைந்தது. அதன் வலி வாழ்வு நெடுகிலும் நீடிக்கும் தன்மைகொண்டது. போரில் நிகழ்ந்த அடக்குமுறை களையும் மனிதம் சிதைந்து போன அவலத்தையும் கதாசிரியர் உணர்வு பூர்வமாகப் பதிவுசெய்துள்ளார். போராட்ட இயக்கத்துக்குள் நிகழ்ந்த நெருக்கீடு களையும் தியாகத்தையும் குற்றமும் தண்டனையும் சிறுகதை உணர்த்துகிறது. தடை சிறுகதை போருக்குள் வாழ்தலின் பாடுகளை விபரிக்கிறது.

சமூக அவலங்கள் குறித்தான தனது நோக்கினை கதைமாந்தர்கள் ஊடாக ஆசிரியர் முன் வைக்கிறார். அத்தகைய இடங்களில் ஆசிரியரின் குரல் தெளிவாக ஒலிக்கிறது. "சகமனிதனை நேசிப்புடன் நிமிர்ந்து பார்க்கத்தெரியாத நலிவுற்ற மனிதம். இரத்தமுள்ளவரை ஒட்ட உறுஞ்சும் வணிக சமூக நடத்தை. பிஞ்சிலே பழுத்துப் புரையோடிய புண்ணாய் நொதிப்புக் காட்டும் விடலைகளின் மனச்சிதைவு என்று இந்த மண்ணில் எத்தனை தொந்தரவுகள்" என்ற ஆதங்கம் தடை சிறுகதையில் வெளிப்படுகிறது.

சட்டநாதன் அவர்களின் சிறுகதைகள் ஒரே வீச்சில் வாசித்து முடிக்கும் தன்மையன. அளவில் சிறியன. அவை உரையாடும் பரப்பும் பொருளும் வீரியம்மிக்கன. தனது அனுபவவெளியில் நிகழ்ந்த சம்பவங்களை, தான்காணவிழைந்த மாற்றங்களை எளிமையான மொழியினூடாக வாசகர் களோடு நெருக்கமாக உரையாடும் இச்சிறுகதைகள் அனைவருக்கும் நல்ல படையல்.

**சித்தங்கேணி** **ந.குகபரன்**

**15.05.2020**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு மெய்ப்பட வேண்டும்

ஏறக்குறைய மூன்று வருஷங்களின் பின்னர் அவன் அவளை நாடிச் சென்றான். அவளைப் பார்ப்பதிலும் பார்க்க அவளது குடும்பத்தாரைக் காண்பதில் தான் அவனுக்கு அதிக ஆர்வம் இருந்தது.

வீட்டின் உள்ளாக வந்தவன், வெளி விறாந்தையில் அவள் மட்டும் இருப்பதைக் கண்டு கொண்டான். மிகுந்த அலட்சியத்துடன் இருந்த அவளிடத்தில் அழகு கொட்டிக்கிடந்தது. தீட்சண்ணியம் மிக்க விழிகளால் அவளை விழுங்கி விடுவது போலப்பார்த்தான். கண்களில் நிரம்பிய பசி இருந்தது. கிட்டவாக வந்தவன் அவளை உற்றுப்பார்த்தான்.

முன்னைக்கு அவள் சற்றுத் தசைப்பிடிப் புடன் இருந்தாள். சற்று வெளிறிட்டுக் காணப் பட்டாலும் இனிமையும் வனப்பும் கூடியவளாக இருந்தாள். முன்னர் எப்பொழுதும் ஒரு குழந்தைத்தனம் அவளிடம் அபரிமிதமாக வழியும். அது மாயமாய் மறைந்திருந்தது.

வீட்டின் உள்ளாகப் பார்த்தவன், "வீட்டில் ஆரும் இல்லையா?" என்று கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை..."

"உன்ரை அம்மா...?"

"அவ கோயிலுக்குப் போயிருக்கிறா...!"

"அப்ப அப்பா..."

"அவரும் இல்லை."

அவளை நெருங்கி வந்தவன் அவளது நாடியைத்தொட்டு நிமிர்த்தி அவளது முகத்தைப் பார்த்தான்.

"என்ன எதுவுமே தெரியேல்லை..."

தீராத காதலுடன் இருந்த அவள் எப்படி மாற முடியும். அவனுக்குச் சப்பென்று ஆகிவிட்டது.

அவள் தன்னில் இருந்து தூரப்பட்டு விட்டதாகவே நினைத்துக் கொண்டான்.

இப்படி உயிர்ப்பு இல்லாத காதலை மீட்டு எடுத்திட முடியுமா? அவனுக்கு எதுவும் புரியவில்லை.

"நாம் இருவரும் கண்டு பேசி எத்தனை வருஷங்கள் இருக்கும் எனக்கேட்டவள் அவனது கரங்களை எடுத்துத் தனது கைகளுள் பொதித்துக்கொண்டாள்.

அவனது கரங்கள் உணரச்சிகள் எதனையும் பரிவர்த்தனை செய்யாது பச்சைத் தண்ணித்தனமாகக் குளிர்ந்து கிடந்தன.

'என்ன...?' என்பது போலப்பார்த்தவள் அவனைக் கேட்டாள்: "ஏன் இப்படி சுரத்தற்று உடல் சோர்ந்திருக்கிறாய்... குரல் கூட இனிமை இழந்து கரகரத்துக்கிடக்கிறது."

"முன்பு இருந்தவை எல்லாம் இப்பொழுது இல்லையென்றாகி விட்டது. சற்று முன்னர் உன்னைப் பார்த்ததும் உணர்ச்சி வசப்பட்டது கூட இப்பொழுது அசட்டுத்தனமாகத் தோன்றுகிறது."

"இல்லை இது பொய்... காதல் சலிப்புத் தருவதாகச் சொல்லாதே... உன்னைக் காண விரும்பிய போதெல்லாம் ஏதோ ஒன்று என்னைத் தடுக்கிறது."

"உன்னை எதுவும் தடுக்கவில்லை. என் மீது சாய்வு கொள்ளாது - பிரியம், அன்பு, காதல் என்று ஏதேதோ அடுக்கிக் கொண்டு போகிறாயே அதை நம்பும்படி கூறுகிறாயா...?"

"........................"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அவனது உள்ளத்தில் சிலிர்த்துக் கிடந்த காதலும் அவளைக் கிளிர்ச்சியுறச் செய்த நம்பிக்கைகளும் அவனது நினைவுக்கு வந்து அவனைச் சிரமப் படுத்தின.

அவள் அவனைப்பார்த்தாள். வெளியே அழைத்துப் போவா னென அவள் எதிர்பார்த்தாள். ஆனால், அவன் அதில் ஆர்வமில்லாத வனாக இருந்தான்.

"ஏன் இப்படி ஆணியடிச்ச மாதிரி ஒரே இடத்தில். எழும்பு வெளியில போய் வருவம்"

அவனது வலது கரத்தைப்பற்றினாள். அது குளிர்ந்து போய்க் கிடந்தது. அத்துடன் ஒரு மரத் தன்மை கூடவே.

"ம்... இப்படி ஜீவனில்லாமல் சடலமாகி விட்டாயே!"

அவள் நடக்க, இவனும் அவள் அருகாக நடந்தான்.

மெல்லிய மழைத்தூறல். இருவரும் நனைந்த படியே நடந்தார்கள்.

வளைவில் அடர்ந்த மரக்கூடல். அங்கே அவள் நகர்ந்தாள். அவனும் இழுபட்டான்.

விறாந்தையை விட அந்த இடம் இருட்டாக இருந்தது. அந்த இருட்டில் அவள் அதிக இளமையாகத் தோன்றினாள். அத்துடன் அந்த அறியாப்பிள்ளை முகத்தோற்றமும் திரும்பவும் வந்து விட்டதாக அவனுக்குத் தோன்றியது.

நெருங்கி வந்தவள் அவனை அணைத்தபடி அவனது உதடுகளைக் கவ்வினாள்.

அவனது உதடுகள் வெதவெதப்பு ஏதுமில்லாமல் சப் பென்று இருந்தது. 'இவனுக்கு... இவனுக்கு என்ன வந்துவிட்டது...' கீறாலாய் அவளது நினைவுகள்.

"இது எதுவுமே வேண்டாம் சாந்தி... உன்னைச் சமனப்படுத்திக் கொள்..."

"அட என்னடா... எல்லாமே உனக்கு இவ்வளவு தானா...?"

"ம்..." அவனது 'ம்' இல் மிகுந்த சலிப்பு இருந்தது.

●

மூன்று வருஷங்களாக...! அதற்கு முன்பாகக் கூட அவளிடம் அவனுக்குப் பிரியம் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது அவளுக்குப்பதினாலு வயது. அவள் அந்தப் பெண்கள் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தாள். அவளே கதியென்று அவளையே சுற்றிச்சுற்றி அவன் வந்து கொண்டிருந்தான். அவளது கண்களில் படிந்து கிடந்த ஏதோவொன்று அவனை அதிகம் வசீகரப்படுத்தியது. வயதளவில் அவன் அவளை விட இரண்டொரு வயது கூடியவனாக இருந்தான்.

அவளுடனான பழக்கம் அவனை அவளது வீடுவரை இழுத்து விட்டிருந்தது.

அவளது அம்மா அவனிடம் அதிக வாரப் பாடோடு இருந்தாள். "ராசா என்ரை சாந்தியைக் கட்டன்ரா... வடிவான பெட்டை... உனக்கு நல்ல பொருத்தம்..." அவனைக்காணும் போதெல்லாம் அப்படிச் சொல்வது தான் அவளது வேலையாக இருந்தது.

அவளது பேச்சு அவனைச் சாந்தியின் மீது அதிக ஈடுபாடு கொள்ள வைத்தது.

பொசு பொசு என வளர்ந்திருந்த அந்தப் பெட்டையுடனான அவனது காதல் மனசோடு மனசாக ஆகிப்போனதாகவே அவன் நினைத்துக்கொண்டான்.

ஒரு சமயம் விஞ்ஞான பாடத்தில் - உயிரியல் பகுதியில் - சந்தேகம் கேட்க என அவனது வீடு தேடி வந்தவள்; அன்றைய நாள் முழுவதும் அவனுடனேயே செலவு செய்தாள்.

அவளது பளிச்சிடும் கண்களையும் கூரிய மூக்கினையும் உதடுகளிலிருந்து கசிந்து வந்த ஈரத்தையும் பளீரிடும் பற்களையும் நீளத் தளையும் கூந்தலையும் பார்த்துப்பார்த்துச் சொக்கிப் போனவன் அவளது கரங்களைத் தொட்டெடுத்து தனது கன்னங்களில் அழுத்தமாக வைத்துக் கொண்டான்.

"என்னடா இது... கெட்ட பழக்கம்... இதெல்லாம் வேண்டாம்..."

"என்னிலை உனக்கு விருப்பமா...?"

"விருப்பம் தான்! அதுக்காக இந்தச்சேட்டை எல்லாம் வேணுமா...?"

" இது கெட்ட பழக்கமா? அப்ப இதென்னவாம்..." என்று கூறியவன் அவளது கண்களில் மாறி மாறி முத்த மிட்டான்.

"போடா ரௌடி...!" சிணுங்கியவள் எழுந்து கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசர அவசரமாக அவனை விட்டு விலகி, வீட்டுக்குப் போவதாகக் கூறி நகர்ந்தாள்.

அவள் ஓ.எல். படித்த போது தான் அவளை அவன் பூரணமாக அறிந்து கொண்டான். இருந்த போதும் பல தயக்கங்கள் அவள் மீது மையல் கொள்ள அவனுக்குத் தடையாக இருந்தன.

அவளது முகத்தைப் பார்த்தால் வெகுநேரம் வரை அதனையே பார்த்துக்கொண்டிருக்க அவனுக்குத் தோன்றும். அத்துடன் அவளது கண்கள், புருவங்கள், நீண்ட கரங்கள் என்று எல்லாமே அவனை அதிகம் மருட்டின. அவளது பின்னல் போட்ட சடையை இழுத்து வைத்து முகர வேணுமென்ற வேட்கை அவனது மனதைக் குடையும்.

அவனது மன எண்ணங்களைப் புரிந்து கொண்ட அவள் அவனிடமிருந்து எப்பொழுதும் தூர விலகியே இருந்தாள்.

ஒரு சமயம் அவளை நெருங்கியவன் அவளிடம் தனது தீராத பிரியத்தைத் தெரிவித்தான்.

"அட இது தானா உன்ரை காதல்...? நன்றாகப் படி... ஒரு டிகிரியாவது உனக்கு வேண்டாமா...? உன்ரை வாழ்க்கையை நிதானப்படுத்திக்கொள்ள...!" கூறியவள் குலுங்கிச்சிரித்தாள்.

அந்தச் சிரிப்பு அவனுக்குப் பைத்தியக்காரத் தனமாகப் பட்டது.

'இவள்... இவள் எனக்கு எட்டாக்கனிதான்...! இவளோடு பிசங்குவதிலும் பார்க்கப் படிக்கலாம்... படித்துப்பட்டம் பெற்று உத்தியோகம் என்று ஏதாவது பார்க்கலாம்... எனது அந்தப் பொருளாதாரச் சுபிட்சத்தைப் பொருட்படுத்தியாவது அவள் என்னை நெருங்கினாலும் நெருங்கலாம்...!'

அந்த நினைப்புத் தந்த தூண்டுதலால் -அவன் படித்துப் பட்டதாரியாகி ஆசிரியராகப் பணிசெய்யத் தொடங்கினான். அப்பொழுதும் அவளது மனம் இசைவு கொள்ளாதது அவனுக்கு மிகுந்த எரிச்சல் தருவதாய் இருந்தது.

வசந்தி என்ற சக ஆசிரியையை காதலிப்பதாகவும் அவளை விரைவில் மணம் முடிக்கப் போவதாக வும் ஒருகயிறு விட்டான்.

அந்தக் கயிறுவிடுதலை அவள் நம்பவில்லை. அத்துடன் அவளுக்கு அவனில் பிடிமானம் எதுவும் ஏற்படவில்லை. இயன்ற அளவு அவனில் இருந்து விலகியே இருந்தாள். அதேசமயம் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பில் ஈடுபாடு கொண்டு, படித்துத் தானும் பட்டதாரியானாள். படித்து முடிந்ததும் வேலையாகி விட்டதால் ஏதோ எல்லாமே ஆகிவிட்டது போல நடந்துகொண்டாள்.

'காதல் கூதல் எல்லாம் இப்போதைக்கு வேண்டாமே...' என நினைத்துக் கொண்டாள். எல்லாவற்றையுமே இழந்ததான நிலை அவனுக்கு.

காலம் கனிந்து வரும் எனும் எதிர்பார்ப்பு மட்டுமே அவனிடம் அப்பொழுது எஞ்சி இருந்தது.

●

அந்தக் அதிர்ச்சி தரும் தகவல் அவளை அதிரவைத்தது. அதனை அவளது தாயார்தான் கூறினாள்.

அவன் சுகவீனமுற்றிருப்பதான செய்தி தானது.

அதீத காதல் வசப்பட்டவனாக நெருங்கி வந்த அவனை இளமையில் நிராகரித்தது. பின்னர் ஓரளவு அவனில் விருப்பம் கொண்ட பாவனை, எல்லாமே பொய்மை பூசப்பட்ட சாகசமாகவே அவளுக்கு இப்பொழுது நினைவு வந்தது.

அவனது சுகவீனம் அவளது ஈரலைப் பிழிந்தெடுத்தது. விரைவாகச் சென்றவள் அவனை அவனது வீடு வரை சென்று பார்த்தாள். அவன் நோயின் தாக்கத்தால் மெலிந்து தளர்ந்து போயிருந்தான். லேசான காய்ச்சல், அத்துடன் இடைவிடாத இருமல் வேறு அவனைத் தொந்தரவு செய்தது.

அவளைக்கண்டதும் "என் அன்புக்குரியவளே, இனியவளே என்னம்மா வந்தது" என்று சற்று ஆடம்பரமாக அரற்றினான்.

அவன் அவளை வீட்டின் உள்ளாக அழைத்துச் சென்றான். அவனது அறை மிகவும் அலங்கோலமாக இருந்தது. கண்பட்ட இடமெல்லாம் அழுக்கு மண்டிக் கிடந்தது. அவனுக்கு முன்னால் இருந்த மேசையில் சாப்பாட்டுத்தட்டுக்கிடந்தது; எஞ்சிய உணவுடன். தட்டில் ஈக்கள் போட்டிபோட்டுக் கொண்டு மொய்த்தன. தட்டை நீக்கி, மேசையைச் சுத்தம் செய்தவள், குழம்பிக் கிடந்த அறையை ஒழுங்குபடுத்தினாள்.

அலங்கோலங்களுக்கு மத்தியில் அவன் வாழ்ந்து வரும் வாழ்க்கை அவளுக்கு மிகுந்த துயரம் தருவதாய் இருந்தது.

அவன் இருமலுடன் கரகரத்த குரலில் ஏதோ பேசினான். அது அவளுக்குத் தெளிவில்லாமல் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைப் புரிந்து கொள்ளாமல் அவளும் பேசினாள்:

"வரது நீ எனக்கு வேணும்... நான் உன்னைக் கண்டு கொள்ளாமல் விட்டது இவ்வளவு தூரம் உன்னைக் காயப்படுத்தி விட்டதே! நீ கொண்ட காதலில் ஏற்பட்ட தடங்கல்கள்... இப்படி... இப்படி உன்னை நலிந்து போக வைத்திருக்கிறதே! நேரத்துக்குச் சாப்பிடாமல் நீ இப்படிக் கோலங்குலைந்து போக வேணுமா...? என்ரை பரிவும் பிரியம் உனக்கு என்றைக்கும் இருக்கும் செல்லா...!"

கூறியவள் மனம் கசிய, குலுங்கிக் குலுங்கிக் அழுதாள்.

"உன்னிலை ஆசையும் நேசமும் கொண்டவர் என்னை விட வேறு ஆர் இருக்கேலும்...? எனக்காகவெண்டாலும் நீ வாழ வேணும். நீ இந்த நோயில இருந்து மீள வேணும்"

"என்னாலை இது முடியுமா...? எனக்குத்தெரியேல்ல...?"

"இல்ல... இல்ல அப்படிக்கதையாதை. நல்ல டொக்ரராய்ப் பார்ப்பம். நல்ல மருந்து மாத்திரை யெண்டா சுகம் வரும்...!"

கூறியவளது கண்களிலிருந்து கண்ணீர் தாரையாய் வழிந்தது.

இளமையில் அவன் தொலைவுபட்டிருந்த போதும் இப்பொழுதைய நெருக்கமும் அவன் மீதான காதலும் திமிறிக் கொண்டு வருவது எதனால்?

அவளுக்கு ஆச்சிரியம் தாளமுடிவியல்லை.

தீராத பிரேமையுடன் அவனை அணுகிய போதும் அவனது மனமும் உடலும் அதனை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை என்பது அவளுக்கு மிகுந்த கவலையைத் தந்தது.

"எனது வாழ்வில் நீதான் எனக்கு மிகவும் நெருக்கமானவன். உயிருக்கு உயிரானவன். நீ என்னை ஏற்றுக் கொள்ள வேணும். என்றும் மடிந்து போகாதது இந்த அன்பும் காதலும் என்பதை உணர்ந்து கொள்வாயாடா...?"

தேம்பித் தேம்பி அரற்றியவளாய் மீளாத பரிதவிப்புடன் அவனை வாரி எடுத்து மார்புடன் அணைத்துக்கொண்டாள்.

அப்பொழுது அவனது ஒளியிழந்து கிடந்த கண்கள் தெளிவுடன் தளிர்ப்புக் கொண்டது. அது அவளது நெஞ்சை நீவியது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்மானமாய்

இரண்டு வருஷங்களுக்குப் பின்னர் அவளை அவன் மீளவும் கண்டான். அவனது உயிர்ப்பாக உயிர்மூச்சாக இருந்தவள், இருப்பவள் அவள். சதா சர்வ காலமும் அவளது நினைவில் தோய்ந்து கிடந்த அவனுக்கு வேறு நினைவுகள் எதுவும் இருந்ததாகத் தெரிய வில்லை. அவளுக்கும் அப்படித்தான்.

அவள் முன்னைக்கு இப்பொழுது மிகவும் தளர்ச்சி அடைந்தவளாக இருந்தாள். தளதள என்று செம்பொன் நிறத்தில் இருந்த அவளது உடல் உலர்ந்து கருமை படர்ந்திருந்தது. அவளது அந்தக் கண்கள் மட்டும் ஒளி உமிழ்ந்தபடி, பெரிதாய் இருந்தன.

அவனைக் கண்டதும் கிட்டவாக வந்து, 'என்ன...?' என்பது போலப் பார்த்தாள்.

அவளது அழகிய கண்களைப் பார்த்த படியே அவன் பேசினான்:

"கொழும்பில, இன்கம் ராக்ஸில இருந்து மாற்றலாகி வந்திட்டன். இனி யாழ்ப்பாணத் தோடதான். இப்ப ராக்ஸ் ஒஃபிசர் இல்ல... பதவி உயர்வு. உதவி ஆணையாளர்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெரியும்," கூறியவளது குரலில் லேசான மலர்ச்சி.

சயன்ஸ் அக்கடமியில் ஏ.எல். படித்த பொழுது ஏற்பட்ட அவர்களது நட்பும் தொடர்பும் -பத்து வருஷங்களுக்கு மேலாகியும் தொடர்கிறது.

அவனது வலது கரத்தைத் தனது கைகளில் வாங்கிக் கொண்டவள், அவனைப் பார்த்துக் கேட்டாள்:

"நீங்க ஒரு சமயம்... இரண்டொரு வருஷத்துக்கு முன்னாலை எங்கட வீட்டுப்பக்கம் வந்தது ஞாபகமிருக்கா...?"

"இருக்கு. அதையெல்லாம் மறக்க முடியுமா...? உங்கட அம்மா சாதிப் பெருமை கொட்டிக் கொண்டது. 'சோளாவத்தைப் பொடியனா...? கோவியச் சோமன்ரை மகனா...?' எண்டு நாக்கு வளைச்சது எல்லாம் இப்ப நடந்தது போல இருக்குது."

"அவவுக்கு விசர்... அதையெல்லாம் மனசில போட்டு இப்பையும் குழம்ப வேணுமா...?"

அவளது உறுதியைக் குலைப்பது போல அவனது பதில் இருந்தது.

"விசரில்லை...அவவுக்குச் சரியான சாதித்தடிப்பு. தாவாடிக் காரரிட்டை உள்ள இயல்பான மிதப்பு...!"

"ம்... அப்படி இல்லை..."

"இதென்ன சளப்பல்... உன்ரை அம்மான்ரை கதையளால... உன் மேல இருக்கிற பட்சம் கூடக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைஞ்சு வடிஞ்சு போகப் பாக்குது. ஏ.எல். படிச்சகாலத்தில எங்களுக்கு இடையில இருந்தது உடல் கவர்ச்சியா... இல்லைக் காதலா...? எண்ட குழப்பம் எனக்கு... அதை நான் விடலைத்தனத்துக்குரிய இன்ஃபாச்சுவேஷ னாகத்தான் நினைக்கிறன். கால நகர்வும் மன முதிர்ச்சியும் அதை முழுமையான காதலா இப்ப மாத்தியிருக்குது."

"காதலா...? இது... இந்தக் காதல் நிறைவேறுமா...?"

"நிறைவேறும்."

அவனது பதில் குளிர்ந்த சாரலாய் அவளில் இறங்கியது.

வாஞ்சையுடன், பிடித்த கரத்தை விடாதவளாய் அவனுடன் சேர்ந்து நடந்தாள். லிங்கம்ஸுக்குக் கிட்டவாக வந்ததும்:

"ஐஸ்கிறீம் சாப்பிடுவமா...?" என்றாள்.

குழந்தையின் குதூகலம் அவளது குரலில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிங்கம்ஸில் படியேறியவர்கள், நட்சும் பழங்களும் போட்ட ஐஸ்கிறீம் சாப்பிட்டார்கள். ஐஸ்கிறீம் சாப்பிட்டானதும் ஒரு 'பக்கெற்' மிக்ஸர் வாங்கிக் கொண்டாள். எல்லாவற்றுக்கும் அவனே பணம் தந்தான்.

"அவசரம் ஏதும் இல்லையே...?" என்று அவன் கேட்டதும் - "இல்லை", என்று அவள் பதில் தந்தாள்.

"இப்ப நாலுமணி... ஐஞ்சு மணிக்கெல்லாம் நீ வீட்ட போகலாம். பஸ் ஸ்ராண்ட் வரை வந்து, நானே கச்சேரி பஸ்ஸில ஏத்தி விடுறன்."

சரி என்று கூறியவள், அவனோடு இணைந்து நடந்தாள். இருவருக்கும் எங்கே போவதென்ற உத்தேசம் இருக்கவில்லை. அவன் தான் "நூல் நிலையத்துக்குப் போவம்... ரெவரன்ஸில இருந்து கதைக்கலாம்...!" என்றான்.

"வேண்டாம்... சுப்பிரமணியம் பூங்கா நல்லம்."

அவளது விருப்பத்துக்கு அமைவாகச் சுப்பிரமணியம் பூங்காவை நோக்கி இருவரும் நடந்தார்கள்.

எதுவும் பேசாமல் மௌனமாக நடந்த அவளைப் பார்த்து அவன் கேட்டான்:

"வசு... ஏதென் பேசுமன்...!"

"எதைப் பேசுறது... எதை விடுறது... நாம ஏமாந்து போகாமல் இருந்தால் போதும்... ஊர்ப்பட்ட வேம்பான் துணை இருக்க வேணும்..."

"இப்பயும் ஊர்ப்பக்கம் போறனீரா...?"

"சித்திரைப் பூரணைக்கு மட்டும் பட்ட வேம்படி வைர வரிட்டை போறதுண்டு..."

"கடவுள் நம்பிக்கை உன்னைக் காப்பாத்தும்."

"உங்களையும் தான்!"

பூங்காவின் உள்ளாகச் சென்றவர்கள் ஆள்நடமாட்டம் குறைவான தென்மேற்கு மூலையில், பூஞ்செடிகள் மறைப்புத்தர, நெருங்கி உட்கார்ந்து கொண்டார்கள்.

அவளது வெதவெதப்பான உடல், அவளைத் தீண்டுவதற்கு அவனைத் தூண்டியது. மெய்மறந்த நிலையில் இருந்தவன், அவளை அணைத்துக் கொண்டான். அந்த அணைப்பின் சுகத்தில் அவனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்களில் - கிறங்கிக் கிடந்த வசு அவனைப் பார்த்தபடி சொன்னாள்:

"அம்மா முன்னை மாதிரி இப்ப இல்ல... அவளில கொஞ்சம் பட்டும்படாத போக்குத் தெரியுது. தன்ரை கட்டுப் பெட்டித் தனத்தைக் கொஞ்சம் தளர்த்தின மாதிரியும் இருக்கு..."

"அட அவவின்ரை சாதிச் சள்ளையில தளர்ச்சியா...?"

"அப்படி எல்லாம் பெரிசாச் சொல்லேலாது; ஆனாலும் ஒரு மாற்றம் அவவில தெரியுது. எங்கட பெரியம்மான்ரை மகன் சிவியா தெருப்பக்கம் ஒரு பெட்டையைக் காதலிச்சுக்கலியாணம் முடிச்சவன். புறுபுறுத்தாலும் - அந்தக் கலியாணத்துக்கு என்னை அவ போகச் சொன்னவ... நானும் போனனான்...!"

"அவவின்ரை இந்த மாற்றம் சந்தோஷமாய்த்தான் இருக்குது..."

"ஆனால் நமக்கு ஒண்டெண்டு வரைக்க, மனிசி நாண்டு கொண்டு நிக்கிற போக்கில மாற்றமில்லை..."

"ஓம் ஓம் அவவிட தடிப்பும் இறுக்கமும் எனக்குத் தெரியும்."

அவளது காதோரமாகக் குனிந்தவன், அவள் சற்றுத் தடுமாறு வதைப் பார்த்துச் சிரித்தபடி அவளது கன்னத்தில் முத்தமிட்டான்.

"சீ... இதெல்லாம் இப்பவே வேணுமா...?" என்று கண்களைச் சுருக்கிச் சிரித்தாள். அவளது குரலில் ஒரு செல்லக் கெஞ்சல்.

அதில் அள்ளுண்ட அவன், அவளது நீண்ட கழுத்தோரம் - கைகள் படர அவளை இழுத்து வைத்துக் கண்களிலும் உதடுகளிலும் மீளவும் மென்மையாக முத்தமிட்டான்.

"இதென்ன குறும்பு... கள்ளத்தனம்", என்று குலுங்கியவள் எழுந்து கொண்டாள்.

இருவரும் இணைந்தபடி வெளியே நடந்து வந்தார்கள்.

வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக வந்த பொழுது, பஸ் வந்தது. அவசர அவசரமாக அவனைப் பார்த்து, "ஒருக்கால் வீட்டுப் பக்கம் வாருங்க... வந்து அம்மாவைப் பாருங்க..." என்றவள், அவன் "ம்..." சொல்லுவதற்கு முன்பாக பஸ்ஸில் தொற்றிக் கொண்டாள்.

பஸ் போவதையே பார்த்தபடி அவன் அங்கு நின்றான். அவனது மனசில் லேசான சங்கடம். பரபரப்பு.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொலைபேசியில் வசுமதியுடன் தொடர்பு கொண்ட சபேசன்; சனிக்கிழமை காலை ஒன்பது மணியளவில் அவளது வீட்டுப் பக்கம் வருவது பற்றிக் கூறினான். கூறியது போல அங்கு வரவும் செய்தான்.

வசுமதியின் வீட்டு முன் கதவு பூட்டிக்கிடந்தது. அழைப்பு மணியை அழுத்தினான். கதவு திறந்து கொண்டது. வசுமதிதான் முன்னே வந்தாள். அவளது முகம் கருமை கொண்டு, கண்கள் சிவந்த படி கிடந்தன.

"என்ன இது, அழுதனியா...? எதுக்கு...?"

குழம்பிய நிலையில், படியில் காலடி எடுத்து வைத்த போது அந்த உவப்பில்லாத பேரோசை அவனுக்குக் கேட்டது.

"ஆரது சோமன்ரை மகனே...? சொன்னது போல வந்திட்டான் போல...!"

கேட்டபடி வசுவின் அம்மா பர்வதம் முன்னால் வந்தாள்.

வந்தவள், சபேசனை "வா" என்று கூட அழைக்காமல் வாசலை அடைத்தபடி நின்றாள். நரை திரையுடன் காணப்பட்ட அவள் ஒட்டி உலர்ந்து வத்தலாய் இருந்தாள்.

வசுமதிதான் அவனை உள்ளே அழைத்து வந்து, செற்றியில் உட்கார வைத்தாள்.

இருப்புக் கொள்ளாமல் தவித்த அவனைப் பார்த்து அம்மா கேட்டாள்:

"இப்ப... இஞ்ச யாழ்ப்பாணத்தில வேலை எண்டு வசு சொன்னவ. உங்க... இன்கம்ராக்ஸில என்ன வேலை... பியோனா...?"

அவளது குரலில் இளக்காரம்.

"இல்ல... உதவி ஆணையாளராக இருக்கிறன்..."

"சாதி கெட்டதுகளெல்லாம் இப்ப... நல்ல உத்தியோகத்தில தான் இருக்குதுகள்...! எங்கட ஊர் விதானைகூட சாதியில அப்படிஇப்படித்தான். ஆனால் நல்ல மரியாதையான பெடியன்."

தொடர்ந்து பேசியவள்:

"தம்பி வந்த விஷயம் என்ன...? வசுவைப் பார்க்கவா... இல்ல என்னைப் பார்க்கவா...?"

"உங்களைப் பார்க்கத்தான். உங்களைப் பார்த்து ஒரு விஷயம் கேக்க வேணும் அது தான்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

281264



KOHA JPL

"என்ன விஷயம் பயப்பிடாமல் சொல்லும்."

"இல்ல... வந்து... வசுவுக்கு என்னில நல்ல விருப்பம்... அதுதான்..."

"என்ன பிசத்தல்... பத்து வருஷத்துக்கு முந்தி, ஏ.எல். படிக்கேக்கை தட்டுமறிச்சுத் தடுமாறினதெல்லாம் எனக்குத் தெரியும். அந்தக் கூத்தை யெல்லாம் திரும்பவும் என்னாலை பார்க்கேலாது. அப்ப சொன்னதைத்தான் இப்பயும் நான் சொல்லேலும். இது வேண்டா மடாப்பா...! கிரிசை கெட்ட கலியாணமாய்ப் போயிடும். சபை சந்தியில எங்களை மதிக்க மாட்டினம். நல்லது கெட்டதிலையும் நாம கலந்து கொள்ளேலாது. கை நனைக்க முடியாது."

"சரி... சரி அன்ரி...! வசு பாவம் - மனசுடைஞ்சு போவா எண்டதால தான் இவ்வளவு தூரம் வந்தனான். கதைச்சனான். அவவுக்கு என்னில சரியான விருப்பம். சாய்வு. அந்தச் சாய்வைத் தடுக்க உங்களாலை முடியுமா...?முடியாது. அவ உங்களுக்கு இசைவா, உங்கடை சொல் கேட்டு நடந்து கொள்ளிற தெண்டா நடந்து கொள்ளட்டும். நான் குறுக்க வரமாட்டன்."

கூறியவன் எழுந்து, கிடுகிடுவென நடந்து வெளியே வந்து, கண்டி வீதியில் ஏறினான்.

கண்களில் நீர் திரையிட, அவன் போவதையே வசுமதி ஆதுரத்துடன் பார்த்தபடி நின்றாள்.

●

இறுகிய மனசோடு இருந்த வசுமதி, பேச்சிழந்து ஒடுங்கிப் போனவளாய், அவளது தாயரைப் பார்த்தாள். குரோத உணர்வின் பளபளப்பு அவளது கண்களில்.

"அந்த சாதி கெட்ட தடியனோட ஓடுற தெண்டால் ஓடிப்போ...! உன்ரை அமர் அடங்க அது தான் சரியான வழி. என்னைப் பார்த்துக்கொள்ள, கொண்டு நடத்த எனக்குத் தெரியும்."

"இது பொய்... சுத்தப் பொய். உனக்கு என்னை விடேலாது. விட்டிட்டு இருக்கேலாது. கலியாண வாசமே இல்லாமல், முதிர்கன்னியா... வதங்கி வத்தலாய்ப் போறாளே இந்தப் பெட்டை எண்ட இரக்கம் கூட உனக்கு இல்லை. அதோட என்ரை வங்கி வேலை உனக்குப் பிடிக்காட்டிலும் சுளையா நான் எடுக்கிற சம்பளம் உனக்கு வேணும்; என்ரை சுக துக்கங்களுக்கு மேலாலை..."

"ஓம் ஓம் நல்ல வள்ளிசாய்க் கதைக்கிறை..."

13101 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உலகத்து நோயளை எல்லாம் உந்த நோஞ்சான் உடம்பில தேக்கி வைச்சு அல்லாடிற உன்னைப் பூப்போல ஏந்தி ஏந்திப் பார்க்கிற எனக்கு, இதுவும் வேணும் இன்னமும் வேணும்."

மனம் வெதும்பிய வசுமதியின் சொற்கள் சற்றுக் கடுமையாகவே வெளிப்பட்டன.

"உன்ரை இந்தச் சுயநலமும்-சுய இழப்பு எதுவும் வந்து விடக்கூடாதே எண்ட பதகளிப்பும் தான்-சாதியின்ரை பேரால... சபேசனை என்னிடம் இருந்து தூர விலத்தி வைச்சிருக்கு..."

"ம்... ம்... இதையும் சொல்லு, இன்னமும் சொல்லு..." வசுவின் பகைமை உணர்வை அவளது முகக்குறிப்பில் கண்டு கொண்ட பர்வதம் அவளைப் பார்த்து மேலும் சொன்னாள்:

"நாம தாவாடிக்காரர்... சுண்டி எடுத்த சாதி வெள்ளாளர். அந்தப்பெருமையை நீ மறக்கப்படாது... உன்ரை பெரிய மாமா, சின்ன மாமா, அவையட பிள்ளையளெண்டு எல்லாரும் வெளி நாட்டில இருந் தாலும் சாதி சனத்தோடதான் அவையின்ர கொள்வினை கொடுப்பினை எல்லாம் இருக்குது."

பேசாமல் மௌனியாக இருந்த வசுமதிக்கு பர்வதத்தின் சீண்டல் மிகுந்த கோபத்தைக் கிளறியது.

"ஓம்... ஓம் அவையின்ரை வண்டவாளம் எல்லாம் எனக்கு நல்லாத் தெரியும். பெரிய மாமான்ரை மூத்த மகன் ஒரு சுவிஸ் காரியையும் இன்னொருத்தன் இந்தியாக்காரியையும் சின்ன மாமான்ரை மகள் ரேவதி சபேசன்ரை உறவுக்காரப் பெடியனையும் சடங்கு செய்திருக்கினை."

"இல்ல... அப்படி இருக்காது. இதை யெல்லாம் உனக்கு ஆர் சொன்னது... எங்களுக்கு அவையளோட கடிதத்தொடர்பு கூட இல்லையே ... அப்படியிருக்கேக்கை...!"

"எங்கட இந்தப் பீத்தல் வங்கிச மகிமை எல்லாம் கடல் கடந்து, காத்தோட வந்த செய்திதான். கொஞ்சம் கொஞ்சம் சபேசனும் சொன்னவர்."

"அதுக்காக எங்கட சவங்காவியளின்ரை சாதியில நாம கரைஞ்சு போகேலுமா...? அந்த வடுகப்பயலின்ரை சங்காந்தமே இனி உனக்கு வேண்டாம் பிள்ளை."

"வடுகனோ...? சபேசனை அப்படிச் சொல்லாத அம்மா. வக்கணையான உன்ரை பேச்சுக்கு நீ பெரிய அளவில விலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப் போறை... பார்த்துக் கொண்டேயிரு...”

குரல் உயர்த்தி இரைந்த வசுமதி, தனது அறையில் நுழைந்து, கதவை இழுத்துச் சாத்திக் கொண்டாள்.

வசுவின் செயல் பர்வதத்துக்கு முகத்தில் உரப்பாக அறைந்தது போலிருந்தது. அதோடு லேசான ஒரு பயமும் படபடப்பும் அவளுள் படர்ந்தது.

பதைப்புடன், தனது அறையை நோக்கிச் சென்ற பர்வதம் - அவளது மருந்துகள் இருக்கும் சிறிய அலுமாரிக்குக் கிட்டவாக வந்தாள். அலுமாரியின் இழுப்புலாச்சியை இழுத்துப் பிரெஸர், கொலஸ்ரோல், நீர் இழிவு, மூட்டுவலி ஆகியவற்றுக்கான வில்லை களை எடுத்து வாயினுள் போட்டு, தண்ணீர் ஊற்றிக் கொண்டாள். எப்பொழுதும் தூக்க மாத்திரைகளை லாச்சியின் அடிப்பகுதியில் வைக்கும் அவள், லாச்சியைத் துளாவினாள்.வில்லைகளைக் காண வில்லை. பதட்டமடைந்த பர்வதம்: ‘இவள்... இவள் வசு... விசர்த்தனமாய் தொகையாயிருந்த அந்தத் தூக்க மாத்திரைகளை எடுத்து விழுங்கித் தன்னை மாய்த்துக் கொள்ளப் போறாளா...?’

மன உளைச்சலில் மிதந்தவள், இயல்பு தப்பிய வேகத்துடன் வெளியே வந்தாள். வந்தவள், பூட்டப்பட்டிருந்த வசுவின் அறையைப் படபட எனப் பலங்கொண்ட மட்டும் தட்டினாள்.

அயர்ந்து போய்க்கிடந்த வசுமதி, விழித்தெழுந்து கேட்டாள்:

“என்ன... என்ன வேணும் உனக்கு...? குளிக் கிறதுக்கு வெந்நீர் போட்டிருக்கு. போ... போய்க்குளி. குளிச்சிட்டு, குயாக்கர் ஓட்ஸ் காய்ச்சி வைச்சிருக்கிறன், அதை எடுத்து மண்டு!”

வசுவின் குரலில் கோபம் இருந்தாலும் அவள் ஏதும் இசக்குப் பிசக்காய்ச் செய்யவில்லை என்று அறிந்ததும் அவள் மனம் சற்று ஆறுதல் அடைந்தது.

குளித்த பர்வதம் - காலை உணவை முடித்துக் கொண்டு, கட்டிலில் சரிந்தாள். நீண்டநேரம் தூங்கி யிருக்க வேண்டும். திடீரென விழித்துக் கொண்டவள், சுவர்க்கடிகாரத்தைப் பார்த்தாள். பிற்பகல் ஒரு மணிக்கு மேலாகி இருந்தது. திடுக்கிட்டவள், வசுவின் அறையை எட்டிப் பார்த்தாள். அங்கு ஆள் சிலமனில்லை. அடுப்படிப் பக்கத்திலும் அவளைக் காணவில்லை. பரபரப்படைந்தவள்; வீடு, வளவு என்று எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தாள். வசுவின் மூச்சுக் காற்றுப் படிந்ததற்கான அடையாளம் எங்கும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தங்கச்சி திலகத்திடம் போயிருப்பாளா...? அல்லது அவளது சிநேகிதப்பெட்டையள் யாரிட மாவது...? சரணி, லாவண்யா, சசி...' குழம்பியவள், நடுங்கியபடி திலகத்தைத் தொலைபேசியில் அழைத்தாள். அவளிடம் வசுமதி பற்றி விசாரித்தாள்.

"இல்ல... இஞ்ச அவள் வரயில்லை..." என்று கூறிய திலகம் - தமக்கையின் குரலில் விரவிக்கிடந்த தடுமாற்றத்தையும் துயரத்தையும் உணர்ந்தவளாய்:

"நான் அங்க வாறன்... வந்து நடக்கிறதை யோசிப்பம்..."

திலகத்தின் குரலிலும் பீதியின் அழுத்தமான கீறல். வழுவழுப்பு.

தொலைபேசியின் ரிஸீவரை உரிய இடத்தில் வைத்த பர்வதம், கொந்தளித்துக் கிடந்த தனது மனதைத் தணித்துக்கொள்ள, கைகளை மேலும் கீழுமாக வீசிப் பலதடவைகள் நடந்தாள். அந்த நடை அவளை ஓரளவு சமனப்படுத்தியது.

'மதியம் போடிற பிரஸர் குளிசைகளைப் போடேல்லையே' என்ற நினைவு திடீரென அவளுக்கு வர, அறைக்குச் சென்று லொசாற்றின் வில்லைகளை எடுத்தாள்; அப்போது தூக்க மாத்திரைகள் அடங்கிய சரை கூடவே வந்தது. 'அட வசு தூக்க மாத்திரைகளை எடுக்கேல்லை...! என்ரை பெட்டை கோவக்காரி எண்டாலும் மிகவும் நிதானம் தப்பாதவள்.'

மனசு முட்டமுட்ட வசுமதியின் நினைவு களோடு இருந்த பர்வதத்திற்கு, அவளது துயரத்தைப் பகிர்ந்து கொள்ள, ஆராவது வேணும் போல இருந்தது.

தங்கை திலகத்தின் வருகைக்காக அவள் ஆவலுடன் காத்திருந்தாள்.

●

திலகம் விதவை. வாடகை வீட்டில்தான் இருந்தாள்.

நோயாளியான பர்வதம் வசுமதியைப் பிரிந்து தனியாகத் தவிப்பது அவளுக்கு அதிக துயரத்தைத் தந்தது. வாடகை வீட்டை விட்டு வந்து, தமக்கையுடன் அவள் நிரந்தரமாகத் தங்கினாள்.

திலகத்தின்அந்தச் செயல் பர்வதத்துக்கு வரப் பிரசாதமாக இருந்தது. ஆனாலும், வசுவை அவளால் முழுமையாக மறக்க முடியவில்லை. வீட்டின் ஓரமாக ஒதுங்கி மகளை நினைத்துக் குமுறிக்குமுறி அழுதாள். அவளது இதயத்தின் அடியாளத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கிவிட்ட அந்தத்துயரம் அவளைப்பாடாய் படுத்தியது.

அந்தச் சமயங்களில் அவள் வசுவின் அறைவரை வந்து, அவள் தொட்டளைந்த பொருட்களைஎல்லாம் தானும் தொட்டுத் தொட்டுப் பார்த்து பரவசமுற்றாள். அது அவளுக்கு ஆறுதல் தருவதாய் இருந்தது.

அவள் பாவித்த தேநீர்க் கோப்பை, நீர் ஜாடி, உடுத்திய இரவு உடைகள், அவள் அடிக்கடி ஆசையுடன் அணிந்து கொள்ளும் அடர் நீல வண்ணச் சேலை, ஓய்வாக இருக்கும் வேளைகளில் அவள் புரட்டிப் பார்க்கும் தி.ஜானகிராமனின் நாவல்கள், தந்தத்தாலான மீராவின் அழகிய பொம்மை என்று எதையும் விட்டு வைக்காது தனது அறைக்கு எடுத்து வந்து அவற்றை ஆசையுடன் பாவிப்பதிலும் அணிந்து கொள்வதிலும் மகிழ்ச்சி அடைந்தாள். அவள் பாவித்த 'இன்ரிமேற்' பெர்ஃபியூமையும் விட்டு வைக்கவில்லை. அதை எடுத்து வந்து தனக்காக வைத்துக் கொண்டாள். அவளது இந்தச் செய்கைகள் வசுவுடனான தனது இருப்பின் ஒருவித தப்பித்தல் உணர்வையே அவளுக்குத் தந்தது.

சித்தம் கலங்கிய பைத்தியக்காரி மாதிரி நடந்து கொள்ளும் தமக்கையைப் பார்த்துக் கொண்ட திலகம் ஒருசமயம் அவளைப் பார்த்துக் கேட்டாள்:

"இவ்வளவ மறுகி மறுகி கனிந்து கரைந்து அவளை நினைக்கும் நீ அவள் விரும்பிற மாதிரி நடக்கலாமே...! கனடாவில் இருக்கிற, சபேசன்ரை அண்ணற்ரை மகன் எங்கட மச்சாளின்ரை பெட்டையை முடிக்கலாம் எண்டால், சபேசனை இந்தப் பெட்டை வசு சடங்கு முடிச்சால் குடியா முழுகிப் போயிடும்...? உன்ரை உந்தச் சாதிச் செடிலால எல்லாமே தலைகீழாய்ப் போச்சு..."

திலகம் பேசியதன் உண்மை பர்வதத்தின் உள் மனதில் உறைத்தது.

"எனக்கே எனக்கான இந்தச் சொந்தம். பார்த்துப் பார்த்துப் பட்டுப்போல வளர்த்த என்ரை செல்லம். என்ரை அருமை மகளுக்கு நான் இழைத்த கொடுமை கடுமையானது தான். பொல்லாத இந்த உலகத்தில் அவள் வடுபடாமல் வாழத்தானே நான் இந்தப்பாடெல் லாம் படிறன். அந்தக் குடிகார மட்டி, அவளின்ரை அப்பனிட்டை நான் மனசாலையும் உடலாலையும் காயப்பட்டதுபோல என்ரை... என்ரை பிள்ளையும் லோல் படவேணுமா...? கூடாது."

"இந்த ஆண்தனம், அதன் வக்கிரம் - அதில் கருகி வதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுதல் எண்டு என்ரை பிள்ளைக்கு எதுவும் வேண்டாம் எண்டுதான் நான் அப்படி நடந்து கொண்டன். அடி ஊறலாய் என்னட்டை சாதி உணர்வு இருந்தாலும் அதைப் பெரிசு படுத்திப் பூச்சாண்டி காட்டினதெல்லாம் மனசார நினைச்சுச் செய்ததா...? இல்ல... இல்லத் திலகா! என்னவிலை கொடுத் தெண்டாலும் என்ரை பிள்ளையைக் காப்பாத்த வேணும் எண்ட வெறியில தான்! அது மட்டுமில்ல என்ரை கள்ளத்தனமும் கொஞ்சம் இருக்கத்தான் செய்யுது. என்ரை சொத்து துணை எல்லாம் அவள் தான். அவளை ஆருக்கும் விட்டுக் கொடுக்க என்னாலை ஏலாது..."

பனித்த கண்களைத் துடைத்துக் கொண்ட பர்வதம் - மெல்லிய முறுவலுடன் தன்னையே பார்த்த படி இருந்த திலகத்தை, நேருக்கு நேர் பார்க்க விரும்பா தவளாய்த் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

●

வீட்டை விட்டுப் போன வசுமதி எங்கே போனாள். என்ன செய்கிறாள் என்பது சகோதரிகளுக்குத் தெரியாமலே இருந்தது.

பர்வதத்தின் யோசனையின் பேரில், வசு வேலை பார்க்கும் ஸ்ரான்லிவீதி மக்கள் வங்கிக் கிளைக்குச் சென்ற திலகம், வசுமதி பற்றி அங்கு விசாரித்தாள்.

அவளது விசாரிப்புக்கு அங்கு பணியாற்றியவர்கள் தந்த பதில் அவளுக்குத் திருப்தி தருவதாயில்லை:

"அவ ஒரு மாத லீவில... சுகவீன லீவில நிக்கிறா...!" என்று சொன்னார்கள். திலகம் அதை நம்பவில்லை. நம்பிக்கை இழந்த திலகம் சபேசனைச் சந்தித்து விபரம் அறியவே அதிக ஆர்வம் கொண்டாள்.

சபேசனை இறைவரித்திணைக்களத்தில்தான் அவள் சந்தித்தாள்.

சபேசன் எதுவித தடங்கலும் இல்லாமல் கந்தோருக்கு வந்து போவது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. எதற்கும் அவனிடமே விசாரித்து விடுவ தென்ற உத்தேசத்துடன் வசுவைக் பற்றி அவள் அவனிடம் கேட்டாள்:

"அப்படியா... எனக்கு எதுவும் தெரியாது. தாயுடன் சரியான பிடுங்கலோ...? வீட்டைவிட்டு வெளியேறிற்றாள...? பர்வதம் மாமி கொஞ்சம் அநுசரிச்சுப் போயிருக்கலாம். சாதி பற்றிப் பாராயணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து அவ கெந்தி அடிச்சதுக்கு அவ இப்ப கொடுத்திருக்கிற விலை அதிகம் தான்!"

"இல்ல... அவ இப்ப ஓரளவு அடக்கி வாசிக்கிற மாதிரித்தான் தெரியுது. வசுபோனதில இருந்து சரியாச் சாப்பிடறதில்ல. மருந்து மாத்திரையும் ஒழுங்கில்லை. நல்லா ஆடிப்போனா...! வசு பற்றி எனக்கோ இல்ல அவளுக்கோ ஏதும் தெரியேல்லைத் தம்பி...! உங்களுக்கு ஏதென் தெரிஞ்சால் என்ரை கையடக்கத் தொலை பேசியில தொடர்பு கொண்டு கதையுங்க ராசா...!" கூறிய திலகம், தனது தொலைபேசி எண்ணை அவனுக்குத் தந்தாள்.

தொலைபேசி எண்ணைப் பெற்றுக் கொண்ட சபேசன் கொடுப்பிற்குள் குமிழிடும் சிரிப்புடன் அவளுக்கு விடை தந்தான்.

அந்தச் சிரிப்பு அவளுக்கு ஏதேதோ சொல்லியது. அதைக் கண்டு கொள்ளாதவளாகத் திலகம் அவனைவிட்டு விலகிச் சென்றாள்.

ஏறக்குறைய ஒரு மாத காலத்துக்குப் பின்னர் தான் பர்வதத்துக்கும் தங்கை திலகத்துக்கும் அச் செய்தி கசிந்தது.

"ஸ்பெசல் நொத்தீஸ்" போட்டு, சபேசனும் வசுமதியும் தமது நண்பர்களும் நண்பிகளும் உடனிருக்கப் பதிவுத் திருமணம் செய்து கொண்டார்களாம். திருமணம் கரவெட்டி விவாகப் பதிவுகாரர் கந்தோரில் நடந்ததாம். வசுமதியின் நெருங்கிய தோழி லாவண்ணியா தான் திருமணத்தை முன்னின்று நடத்தினாளாம் என்பது தான் அந்தச் செய்தி. அது பர்வதத்துக்கும் திலகத்துக்கும் பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

"அப்ப இவள் வசு கரவெட்டியிலயா போய்ப் பதுங்கினவள்... இந்த ஒரு மாத காலமும் லாவண்ணியாவோட..., அவளின்ரை வீட்டில தான் இருந்திருப்பாள் போல...! சரியான அமுசடக்கி... இனி இந்தப் பக்கம் வங்கி வேலைக்கு வந்தாலும் வருவாள்...!

"அமுசடக்கி எண்டு சொல்லாத... அவள் காரியக் கெட்டி. அவளின்ர துணிவும் ஆதுரமும் சபேசனுக்குப் பிடிச்சிருக்கும் போல... அதால தான் அவள் கண்ணை மூடிக் கொண்டு, அவனுக்குப் பின்னாலை போயிருக்கிறாள். இனி உன்ரை சாதி, தாவாடிப் பெருமை எல்லாத்தையும் குப்பையில கொண்டு போய்ப் போடு..."

"....................."

பர்வதத்தின் மௌனம் அர்த்தம் பொதிந்ததாக இருந்தது. அந்த மௌனத்தைக் கலைப்பது போலத் திலகத்தின் கைத்தொலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசி ஒலி எழுப்பியது.

"ஆரது..." பர்வதம் தான் கேட்டாள்.

"வசு... வசு...!" உதடுகள் உடையாமல் மெதுவாகத் திலகம் முனகினாள்.

"அவள் கதைக்கிறதை நானும் கேக்கிறன். ஸ்பீக்கரில விடு...!"

"சித்தி...! அம்மாவை எதிர்த்துக் கதைக்க எனக்குத் தெரியாது... அப்படி அவ என்னை வளக்கேல்லை. சபேசன் என்ரை உயிர். அவரை, அவ வேண்டாமெண்டு சொல்லிச் சாதிப்பூச் செல்லாம் பூசினது எனக்குப் பிடிக்கேல்லை. என்ரை குரல் அவவுக்கு எதிரா உயர்ந்ததுக்கு அதுதான் காரணம். எல்லாம் என்ரை குடிகாரக் குப்பன் ஐயாவால வந்ததுதான். அந்தச் சென்மத்தோட அவ வாழ்ந்த நரக வாழ்க்கைதான்-அவற்ரை சாவுக்குப் பின்னரும் அவவை விடாமல் ஒரு கெட்ட கனவாத் தொடருது. அந்த அழுத்தமும் மனக் கிலேசமும் தான் ஆம்பிளை வாடை பட்டாலே அவவுக்கு வெப்பி யாரமாய் இருக்கு. சபேசன் என்ன எந்த ஆம்பிளையாயிருந்தாலும் என்ரை மனலயிப்பு அவவுக்கு நெருப்புத்தணல் பட்ட கதையாத்தான் இருக்கு. அது தான் நான் திருமணம் செய்யாமல் இருந்தாலும் பரவாயில்ல எண்ட மனநிலைக்கு அவவை விரட்டியிருக்கு...!"

"என்ரை உடனிருப்பும் அநுசரிப்பும் அவவுக்குக் கட்டாயம் தேவை. அது எனக்கு நல்லாய்தெரியும். பூசை புனஸ்காரம் எண்டு தெய்வ பக்தியில் திளைத்துக் கிடக்கும் அந்த மனிசி இப்படி ஆனது தான் எனக்கு ஆச்சரியம்...! காலம் அவவின்ரை கொந்தளிப்பை அடக்கிச் சாந்தப்படுத்தும். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு..."

"அவவுக்குச் சொத்துப்பத்தெண்டு ஏதுமில்லை. ஊர்க்காணி யளில இருந்து வாற குத்தகைப் பணம் மட்டும் தான். அதிலை... அதிலையும் ஐயா அந்தக் குடிகார மட்டி சுவடினது எனக்குத் தெரியும். கால்வயிறு அரை வயித்தோட தன்னை ஒறுத்து என்னை ஏ.எல். வரைக்கும் படிக்க வைச்சா... எனக்கு வங்கி வேலை கிடைச்சது என்ரை முனைப் பாலையும் நற்பேறாலையும் தான்..."

"சித்தி! காலம் கனிய அம்மான்ரை கோவம் தணியும். அப்ப நான் அவவை வந்து பார்ப்பன். சபேசன் கொஞ்சம் பின்னாலை வருவார்..."

"சித்தி முக்கியமான ஒரு விஷயம். அம்மான்ரை தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கில் ஒரு இருபத்தைஞ்சு போட்டிருக்கிறன். அதை, அவவை எடுக்கச் சொல்லுங்க. மருந்துச் செலவு அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதெண்டு அவவுக்கு இருக்கும். நானும் சபேசனும் அவவோட வீட்டில வந்து இருக்கத் தான் விரும்பிறம்... ஆனா அது பட்ட வேம்பான்ரை கிருபையால தான் நடக்க வேணும். அது வரைக்கும் நீங்க தான் அவவுக்குத் துணையா இருக்க வேணும்."

குலுங்கி அழும் குரல்! திலகம் திரும்பிப் பார்த்தாள்.

ஸோபாவில் சோர்ந்து போய்க் கிடந்த பர்வதம் நலிந்த குரலில் அரற்றினாள்:

"என்ரை... என்ரை பிள்ளை என்ன மறக் கேல்லை. நான் தான் கடும்பிடி பிடிச்சிட்டன் பிள்ளை. அந்தப் பெடியன் சபேசனை அருவருப்போட பாக் கிறதை... அவதூறு செய்யிறதைக் கொஞ்சம் நான் விட வேணும்பிள்ளை. அவனை நான் எவ்வளவு அவமானப் படுத்திப்போட்டன். அவன்ரை முகத்தில நான் இனி முழிக்க முடியுமா...?"

"இல்ல... இல்ல... அக்கா...!"

"ஆச்சி திலகம்...! அந்த ஃபோனை ஒருக்கால் தாரும்."

திலகம் ஃபோனைத்தர, அதை வாங்கிய பர்வதம் அதனைப் பட்சமாகத் தடவிக் கொடுத்தாள்.

அவளது அருமந்த மகளின் அன்புமயமான செய்தியைக் காவி வந்த கருவி அது; அதில் அவள் அதீத பிரீதி கொண்டதில் வியப்பேதுமில்லைத்தான்.

விழி மலர்களில் நீர் சொரிய அவள் முறுவலித்தது தங்கை திலகத்துக்கு மிகவும் பிடித்திருந்தது.

அவளையே பார்த்தபடி இருந்த திலகம் "கடவுள் கருணை உள்ளவர்..." என முணுமுணுத்தாள். அவளது முணுமுணுப்பு பர்வதத்தின் காதிலும் லேசாய் விழுந்தது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசனநூலகம்
27 JAN 2021
மாநகரசபை
யாழ்ப்பாணம்

# தடை

"மிக்ஸ்ராட் 30 இருந்தா பார்த்து வாங்கி வாருங்க... ஜெகன் பார்மஸியில இருக்கு."

"ம்...சரி..."

முனகிய இராமலிங்க வாத்தியார், உடுத்திக் கொண்டு, தனது சைக்கிளை எடுத்தார். அப்பொழுது அவள் தொடர்ந்து சொன்னாள்:

"கவனமப்பா... அவங்கள்... அந்த ஆள் விழுங்கியள் வீதியெல்லாம் தடை போட்டிருக் கிறாங்களாம். ஸ்பீட்ப்றேக்கர்களும் - சின்னச் சின்ன மலையா வீதியளில இருக்காம்! சைக்கிளில் போறனீங்க விழுந்திடாமப் பார்த்துப் போங்க. மெயின் றோட்டுகளால போகாமல், சின்னவீதி களால போங்க. போனமாம் வந்தமாம் எண்டு இருக்க வேணும். மருந்து வாங்கின கையோட உடனதிரும்புங்க..."

வாத்தியார் சைக்கிளை உருட்டியபடி வீதிக்கு வந்தார்.

அவரது மனைவிக்கு நீரிழிவு நோய். மாத்திரைகள் பலன் தராததால் இப்பொழுது இன்சுலினுக்கு மாறியிருந்தாள். A9 பாதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடியதிலிருந்து, குடாநாட்டில் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப் பாடு. உயிர் காக்கும் மருந்துகளும் அப்படி இப்படித்தான். அதுவும் இன்சுலின் மிக அருந்தலாகவே கடைகளில் கிடைத்தது. கையில் ஒரு 'வயல்' மருந்து இருந்த போதும் - மேலதிகமாக இன்னொன்று என்ற மனைவியின் முன்யோசனை அவருக்குப் பிடித்திருந்தது.

கவனம் கருதி, வீதியின் இருபக்கமும் பார்வையைச் செலுத்தியவர், சைக்கிளில் ஏறி உட்கார்ந்து கொண்டார். மெதுவாக மிதந்தார். மேற்குப் பார்த்துச் சென்றவர், கோவில் வீதியால் திரும்பினார்.

அவருக்கு எதிராக தீபா வந்து கொண்டிருந்தாள்; இதழ் உடைய, மென்மையான சிரிப்புடன். பூப்பந்து உருண்டு வருவது போல இவரது அருகாக வந்தவள், ப்பிறேக் போட்டு, சைக்கிளில் இருந்து இறங்கினாள். அப்பா இல்லாத பெண். அம்மாவின் முறிவில் தான் தனது படிப்பைத் தொடர்கிறாள். அவளது கைகளில் கனமான பை; புத்தகப்பையாக இருக்க வேணும். ரியூசன் முடிந்து வீடு திரும்பு கிறாள் போலும்.

"ஸேர்... சுகமா...? எனக்கு 'ஓ.எல்.' இல எட்டு டிஸ்ரிங்ஸன்... எல்லாம் உங்கடை கவனமும் கொடையும்..."

"தெரியும்... சர்வேஸ் சொன்னவர்..."

பெருமையும் பூரிப்பும் இழைய அவளையே பார்த்தபடி நின்றார்.

ஆறாம் வகுப்பிலிருந்து ஓ.எல். வரை ஆங்கிலமும் விஞ்ஞான மும் அவரிடம் படித்தவள். அவரது நிழலில் வளர்ந்தவள்.

அவள் மனுஷியாக மாறிக் கொண்டிருந்தாள். அவளது கண்களில் பரவி நின்ற ஒளியும் கருணையும் அவரைத் தொட்டன.

'இந்த நெருக்குவாரத்திலும் உணர்வுகள் சிதைவடையாமல் மனதில் வெண்ணெயாய் திரளும் ரசிப்புகளுடன், மனிதனாக நிமிர்வது இந்த நெகிழ்சிகளினால் தான்...'

தீபாவிடம் விடை பெற்றுக் கொண்டவர், கோவில் வீதிச் சென்றியில் இருந்த ஸ்பீட்ப்றேக்கரின் உயரத்தைப் பார்த்துப் பயந்து, இறங்கிச் சைக்கிளை உருட்டினார்.

"ஏய்... சைக்கிளில ஏறிப்போ... போ ஐயா...!"

சென்றியில் நின்றவனின் கனிவு அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிளில் அவர் ஏறிக் கொள்ளவில்லை. நடந்தே சென்றியைக் கடந்தார்.

"அரசடி வீதிச் சந்தியில... பாரதி சிலைக்குப் பக்கத்தில... ஆரோ கிரனேட் வீசீற்றாங்கள். கவனம். பார்த்துப் போங்க..."

சைக்கிளில் விரைந்த பெடியனொருவன் இவருக்குச் செய்தி சொன்னான்.

மூச்சடங்கி நின்றவர், 'வீட்ட திரும்புவமா...?' என நினைத்தார்.

'கோயில் வீதியாலை போறது பாதுகாப்பில்லை... நாலடிக்கு கொரு ஆமிக்காரன் நிக்கிறான். அவையட வாகன அணிகளுக்குப் பாதுகாப்பாம்...! எங்களைப் பாதுகாக்க வந்ததாகச் சொல்லும் அவங்களுக்குத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளிற அவசரம். It's really Paradoxical...'

அந்த ஆபத்திலும் - அந்த முரணை எண்ணி அவரால் மிக மெலிதாக முறுவலிக்க முடிந்தது.

கோவில் வீதி மட்டுமல்ல - கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதி என்று எல்லா இடங்களிலும் அவங்கள் துப்பாக்கிச் சனியனை ஏந்திய நிலையில், விசையில் விரல் அழுந்த, போவோர் வருவோரைக் குறி வைத்து நிற்பது அவருக்குத் தெரியும். அந்த வீதி களையெல்லாம் - பாதுகாப்புக்கருதி - அவர் தவிர்த்துக் கொள்ளவே விரும்பினார். ரவுணுக்குப் போவதானால் அந்தத் துர்த்தேவதைகளின் அநுக்கிரகம் அவசியம் என்பது அவருக்குத் தெரியும்.

'அந்தக்காலத்தில்... இளமையில... இப்படி... இப்படி யொரு நெருக்குவாரம் இருந்ததா...?'

அவர் நினைத்துப் பார்த்தார்.

'சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் ஊர் அமைதியாகத் தான் இருந்தது. தேசிய இனப் பிரச்சினை நீறடி நெருப்பாக இருந்ததென்னவோ உண்மைதான். ஆனாலும், இரத்தம் சிந்துதலும் இன அழிப்பும் இப்படி இருந்ததில்லை...'

'ஊரில, தாவாடியில இருந்தபொழுது அம்மாவுக்கு மருந் தெடுக்க சுதுமலையாரிடம் கூடாரவண்டியில் போனது. பச்சைப் பசளையாய்ப் பயன்பட, வண்டில் வண்டிலாய் பூவரசங்குழை ஏத்தி ஐயாவுடன் மருதனார் மடம் சென்றது. சற்றுப் பின்னர், ஐந்தாம் வகுப்போடு பட்டணத்துக்குப் படிக்க வந்தது. நிலவில் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

281264



தவத்துடனும் சிவத்துடனும் அம்பல அண்ணருடனும் சைக்கிள் மிதித்து, வின்ஸரிலும் வெலிங்டனிலும் படம் பார்க்க வந்தது. சித்திரை நிலவில் புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோயிலுக்குச் சப்பறம் பார்க்க - மறுநாள் தேர் பார்க்க என்று அலைஞ்சது. பட்டப் படிப்பு முடிஞ்சு வேலை கிடைக்காமல் - பல கனவுகளோடை மாட்டுப் பண்ணை வச்சது. பண்ணைக்கு, சீமைப்பசுக்கள் சிலதை, இரவு வேளையில் ஊர்வரை சாய்த்து வந்தது. எல்லாமே இப்ப நடந்தது போல இருக்கு... அப்படி ஒரு காலமது... அது இனி வருமா...?'

நினைவுகளில் தன்னை இழந்தவர், கைலாய பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில் - சொக்கர் கடைக்கு அருகாக வந்தபோது, 'இராமலிங்கம்' என அழைப்பது கேட்டு, கடைப்பக்கம் திரும்பிப் பார்த்தார்.

'செல்லத்துரை மாஸ்ரர்!', சிரித்தபடி எதிரே வந்தார்.

"பென்சன் எடுத்தாச்சா தம்பி!"

"ஓம் ஸேர்...! இந்த ஜனவரியிலதான் பேப்பர் கொடுத்த னான். கொமியூரட் வந்திட்டுது... பென்சன் அடுத்த மாதம் வரையில கைக்கு வரும்"

அவரது பதிலில் மிகுந்த மரியாதை இருந்தது.

"அவவிட பென்சனும் வரும்; அதுபோதும். அது சரி ரீச்சர் சுகமாக இருக்கிறாவா...?"

"ஏதோ வருத்தங்களோட தட்டு மறிச்சபடி சுகமாக இருக்கிறா. இப்ப, அவவுக்கு மருந்தெடுக்கத் தான் ரவுணுக்குப் போறன்."

"பார்த்துப் போம்... றோட்டெல்லாம் அவங்கட ஆட்சி, கவனம்."

"ம்" கொட்டியவர் சைக்கிளை அழுத்தி மிதித்தார். சைக்கிள் சிறிது வேகம் கொண்டது. நாவலர் வீதியில் திரும்பியவர், நேராகச் சென்றார். ஆனைப்பந்தி உபதபாற் கந்தோரடியில் அவரது சைக்கிள் தானாக நின்றது. எதிரே சந்திரா. அவரது அருமைத் தங்கை. அவர் பார்த்திருக்க வளர்ந்த பெண். அவள் அவரைவிட பத்துவயது இளையவள். ஐயாவும் அம்மாவும் அவளைப் பொத்திப் பொத்தி வளர்த்தார்கள். பசுந்தளிராக இருந்தவள் - இளந்தருவாகி, வீச்சங் காட்டிய போது...

பேராதனைப் பல்கலைக்கழகம். சங்கமித்த ஹோால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதாசன். அவன் மீதான பிரேமை என அவளது உலகம் விரிவு கொள்ள... ஐயா அவரது இயல்புகளுக்கு ஏற்ப அவதிப்படாமல் இருந்தார். அம்மா தான் அந்தரப்பட்டாள். அவளுக்குத் தாவாடிப் பெருமை. 'சாதி சனத்தை விட்டிட்டு ஏன் இப்படி... இப்படி...' என்று புலம்பினாள். அவள் உரசி உரசிப் பார்த்து - 'சிவதாசன் அப்படி இப்படித்தான்... சொட்டு மாற்றுக்குறைவு... அத்தியடியில இருந் தாலும் அவனது அடியூற்றென்னவோ ஊர் அம்மன் கோயிலடி தான்...' எனப் புறுபுறுத்தாள்.

இது விஷயத்தில் சந்திரா காட்டிய தீரமும் தீவிரமும் அம்மாவை அசரவைத்தன. அம்மா எதுவும் பேசாமல் ஒதுங்கிக் கொண்டாள். அதைத் தவிர வேறு எதையும் அவளால் அப்பொழுது செய்ய முடியவில்லை.

ஐயாவின் இஷ்ட தெய்வமான இலந்தை வனப்பிள்ளையார் கோவிலில் தான் அவர்களது திருமணம் நடந்தது. ஊரே திரண்டு வந்து அவர்களை வாழ்த்தியது. ஐயா மிகுந்த சந்தோஷப்பட்டார். அம்மாவும் மனக்கிலேசம் நீங்கிய நிலையில் ஆறுதல் அடைந்த மாதிரி இருந்தது.

சந்திரா, சிவதாசனது தாம்பத்தியம் ஆறேழுவருஷம் தான் நிலைத்தது. அந்தக் குறுகிய கால அவகாசத்தில், காதலின் அர்த்தத்தை யும் ஆழத்தையும் அவர்களால் அறிந்து அநுபவிக்க முடிந்தது. அதுமட்டுமல்ல, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள, அநுசரித்து உதவ, தீர்மானம் எதுவாயினும் இணைந்து எடுக்க அந்த வாழ்வு அவர்களுக்குப் பெரிதும் உதவியது.

ஒத்த தடத்தில் இசைவு கொண்ட, பட்சமான அந்த வாழ்வு, சடுதியாக முடிவடைந்த போது, சந்திரா மிகுந்த தளர்ச்சியடைந்தாள். இராமலிங்க வாத்தியாரையும் அது மிகவும் பாதித்தது.

நாவாந்துறைப் பக்கம் மீன் வாங்கவெனப் போன சிவதாசன் வீட்டுக்குச் சடலமாய்த் தான் வந்தான். படையினருக்கும் போராளி களுக்கு மிடையிலே ஏற்பட்ட துப்பாக்கிச் சமரில் அவனது உயிர் காவு கொள்ளப்பட்டுவிட்டது. செய்தி அறிந்து ஓடி வந்த வாத்தியார், அவனது நெற்றிப் பொட்டிலும் இடது மார்பிலும் சூட்டுக்காயங் களைக் கண்டு பதறிப்போனார்.

மரணவீட்டில் - அடி ஆதாரம் அழிந்து, அரை மயக்கத்தில் கிடந்த சந்திராவுக்கு, அவரும் அவரது மனைவி ரதியும் உடனிருந்து உதவினார்கள். ஆறுதல் அளித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதாசன் காலமான போது, கையில் ஒன்றும் வயிற்றி லொன்றும் என அலமந்து மறுகிய அவளுக்கு, அண்ணரும், அண்ணியும் தான் எல்லாமாக இருந்தார்கள்.

சிறுகச் சிறுக மனசு தேறிய நிலையில், சந்திரா பிள்ளைகளுக் காக வாழத் தொடங்கினாள். சிவதாசன் வசதியான குடும்பத்துப் பிள்ளை. ஒரே வாரிசு. அவனது சொத்து சுகமும் அவளது ஆசிரியத் தொழிலும் அவளை ஓரளவு சொந்தக்காலில் நிற்க உதவின. எல்லாவற்றுக்கும் அண்ணை, அண்ணி என்று ஓட வேண்டிய நிர்ப்பந்தம் காலப் போக்கில் அவளுக்கு இல்லாமல் போனது. அது அவளுக்கு ஓரளவு ஆறுதலாய் இருந்தது.

“அண்ணை... ஒரு நிமிஷம்” கூறியவள், அவர் அருகாக வந்தாள்.

பூசியது போன்ற உடல்வாகு. பாந்தமுடன் பார்க்கும் அந்தக் கண்களில் சுரந்து நிற்கும் கருணை. பரிவு. அவள் சிரிக்கும் பொழுது தெரிந்த பல்லீறுகளின் ஆரோக்கியம் என்று எல்லமே அவருக்கு மகிழ்ச்சியைத்தந்தன. ‘பிள்ளை மனசு தேறீட்டாள். எல்லாம் அந்த நல்லூரான் அருள்... வதங்கி வத்தலாகிக்கிடந்தவளிலை ஒரு உயிர்ப்பும் தெளிவும் கூடியிருக்கிறது...’

அன்புடன் அவளைப் பார்த்தபடி கேட்டார்:

“என்ன... என்னாச்சி...?”

“சுதன் ஸ்கொலஸிப் பாஸ் பண்ணாததாலை நல்ல பள்ளிக் கூடம் கிடைக்கேல்லை அண்ணை...! மடத்துப் பள்ளிக்கூடத்திலை தான் மட்டையடிக்கிறான்.”

“இந்து அதிபரோடை கதைச்சனான். அவனுக்கு வாற தையிலை இடம் கிடைக்கும். இனி அவன் ஏழாம் வகுப்பு... அது சரி, பெரியவன் சதீஸ் இந்துவிலை எட்டுத்தான படிக்கிறான்.”

“ஓம்... ஓம்...”

“அண்ணிக்கு மருந்தெடுக்க ரவுணுக்குப் போறன். வரேக்க வீட்டுப் பக்கம் வாறன்.”

“அண்ணி எப்படி இருக்கிறா...? நானும் அங்கால வந்து ஒரு கிழமையாகுது... வரவேணும். பிள்ளையள், பள்ளிக்கூடம் எண்டு அடிபடுறதில நேரம் மட்டுமட்டாய் போயிடுது...”

“நேரமுள்ள போது வாவன் பிள்ளை... அப்ப நான் வரட்டா...”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்..."

அவளிடம் விடைபெற்றவர், பருத்தித்துறை வீதியால் திரும்பினார். பலாலி வீதியைத் தொட்டு, ஆரியகுளச் சந்தியில், ஸ்ரான்லி வீதிப்பக்கம் திரும்பும் உத்தேசம் அவருக்கு.

சிறாம்பியடிச் சந்தியில் ஆமி குவிந்து கிடந்தது.

அவரது மனதில் பயப்பிராந்தி. லேசாக உடல் பதறுவது போன்ற உணர்வு. மனதைத் திடப்படுத்திபடி, காயத்திரி மந்திர முணுமுணுப்போடு, சைக்கிளை மெதுவாகச் செலுத்தினார். விக்னா ரியூசன் சென்ரர், வெலிங்டன் சந்தி எனக் கடந்தவர் - முன்னர் லிடோத் தியேட்டர் இருந்த இடத்தை அடைந்த போது:

"ஏய்...! நில்லு... நில்லுடா... எங்க போறது...? இதில போக இல்ல... திரும்பு... திரும்புடா...!"

மரியாதை ஏதுமில்லாத காட்டுக்கத்தல்.

"ரவுணுக்கு..."

இராமலிங்கத்தாரின் பலவீனமான குரல்.

சைக்கிளில் இருந்து இறங்கிய இராமலிங் கத்தார், தெருவோர மாக எக்ஸ்போ எயருக்கு முன்பாக இருந்த இடைவெளியால், கஸ்தூரியார் வீதிப்பக்கம் நொழுந்தப் பார்த்தார்.

அவரது முயற்சியை தூரத்திலிருந்து பார்த்த - அவரை ஏற்கனவே தடுத்த அதிமேதாவி பாய்ந்து வந்து, அவரையும் அவரது சைக்கிளையும் தனது சப்பாத்துக் கால்களால் உதைத்துத் தள்ளினான். அவனது கண்களில் படர்ந்த குரோதமும் பகைமை உணர்வும் அவரை நிலைதளர வைத்தன. அவர் கால் இடற விழுந்தார்.

கரங்களில் ஏற்பட்ட சிராய்ப்பைத் துடைத்தபடி எழுந்தவர், 'அருந்தப்பு மண்டை கிண்டை உடைந்திருந்தால்...' என அனுங்கினார்.

தெரு நாய் போல உதைபட்டு அடிபட்டது அவருக்கு அவமானமாயிருந்தது. சுய வெறுப்பு மேலிட, வெட்கப்பட்டவராய்த் தனது உடலைக் குறுக்கிக் கொண்டார். அப்பொழுது அவரை நெருங்கி வந்த இன்னொரு சிப்பாய் அவரது சைக்கிளை எடுத்துத் தந்தபடி, அவருடன் ஆதரவாகப் பேசினான்:

"ஐயா எங்க வேலை பாக்கிறது..."

அந்த சமயத்தில் அவனது குசலமும் விசாரிப்பும் பொருத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லாமல் இருந்த போதும் - ஏதோ காரணம் பற்றியே அவன் அவ்வாறு கேட்கிறான் என அவர் நினைத்துக் கொண்டார்.

"வாத்தியார். இப்ப பென்சன்."

"ரீச்சர்...? எங்க அக்காவும் ரீச்சர்... அவ அம்பாறையில இருக்கு ஐயா..." சொற்களை விழுங்கி விழுங்கிப் பேசியவனது முகத்தில் ஒரு வகைப் பெருமிதமும் ஒளியின் தளதளப்பும்.

ஆச்சரியத்துடன் அவனை அவர் பார்த்தார்.

"அந்த ஆள் கெட்டது. பொல்லாதது. வில்லங்கம் செய்யும். திரும்பிப் போ... போ ஐயா...!"

அவன் கூறியதையே, அவர் அருகாக வந்த இளைஞனும் கூறினான்.

சைக்கிளை உருட்டியபடி அவர் திரும்பி ஸ்ரான்லி வீதி வழி நடந்தார். ஏதேதோ நினைவுகளின் சடைப்பு அவரது மனதை அலைக் கழித்தது.

தளர்ச்சியடைந்தது போல "பாவ்லா" காட்டும் சாதி உணர்வு. பழமை பேணும் சமய நம்பிக்கைகளின் பிரதி கூலம். சகமனிதனை நேசிப்புடன் நிமிர்ந்து பார்க்கத் தெரியாத நலிவுற்ற மனிதம். இரத்த முள்ள வரை ஒட்ட உறிஞ்சும் வணிக சமூக நடத்தை. பிஞ்சிலே பழுத்துப் புரையோடிய புண்ணாய் நொதிப்புக் காட்டும் விடலை களின் மனச்சிதைவு என்று இந்த மண்ணில் எத்தனை தொந்தரவுகள்.

'இவை போதாதென்று. இரண்டு தசாப்த காலத்துக்கு மேலாக இனங்களுக்கிடையிலான பகைமையும் முரணும் சொல்லி மாளாத துன்பமாக, நீளும் துயரமாக நம்மை வருத்துகிறதே...'

'சனங்களுக்கு படையினரின் கெடுபிடி பழக்கமாய்ப் போன போதும் - இந்தக் நெருக்குவாரம் உச்சத்தைத் தொட்ட தென்னவோ இரண்டொரு வருஷமாகத்தான். விடுதலை, சுதந்திரம் என்பதெல் லாம் கனவா...? கானலா... கண்ணி கண்ணியாய் விழுந்து நம்மை இறுக்கும் இவ்விலங்குகள் உடை படாமலே போய்விடுமா...?'

மனம் பேதலித்தவராய், கன்னாதிட்டி வீதி வழி வந்தவர். அருளின் அக்கடெமி, காளிகோயில் எனக் கடந்து, கஸ்தூரியார் வீதியில் இடது கைபார்த்துத் திரும்பினார்.

எங்கு, எப்பொழுது சைக்கிளில் ஏறினார் என்பது அவரது ஞாபகத்துக்கு வரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டணம் சன நெரிசல் இல்லாமல் இருந்தது. 'ஏன், எங்கேன் குண்டு கிண்டு வெடிச்சுதோ...? கிரேனேட் ஏதாவது வீசியிருப் பாங்களோ...?'

பயத்துடன் ஆஸ்பத்திரி வீதியில் மிதந்தார். ஒரு சில கடைகளைத்தவிர, அனேகமாக எல்லாக் கடைகளும் பூட்டிக் கிடந்தன. ஜெகன் பார்மஸியும் பூட்டிக் கிடந்தது.

பட்டணம் பம்மிப்போய் இருந்தது. அந்த அசாதாரண நிலைமை அவருக்குப் பீதியூட்டியது. முகத்திலும் கழுத்தோரத்திலும் முத்துமுத்தாக அரும்பிய வியர்வைத் துளிகளைத் துடைத்தவர், 'மருந்துக்கு இன்னுமொரு முறை இந்த நரலுக்கை வரேலுமா...?' என நினைத்தவர், எரிச்சலுடன் சைக்கிளைத் திருப்பினார்.

அப்பொழுது அந்தப் பாரிய குண்டுச்சத்தம் கேட்டது.

'இதென்ன கிளேமோரரா...? வடக்காலயா... கிழக் காலயா...? எங்கை கேக்குது...? நல்லூரடி... கல்வியங்காடு...?'

அவரது உடல் வெடவெடத்தது. கால்களில் லேசான உதறல். மனசைத் திடப்படுத்திக் கொண்டு சைக்கிளில் தாவி ஏறினார்.

'பலாலி வீதி கடந்தால்தான் வீடு போய்ச்சேர்ந்த மாதிரி... இராணுவ வாகன அணி, முகமாலையில வெளிக் கிட்டாலே, இங்க யாழ்ப்பாணத்தில இந்தத் தொடை நடுங்கியள் - மரக் குற்றி களையும், முள்ளுக் கம்பிகளையும் போட்டு - பலாலிவீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி என அவற்றைத் தொட்டுச் செல்லும் குச்சொழுங்கை களையும் குறுக்கு வீதிகளையும் மறிச்சுப் போடிறாங்கள். இந்த அபத்த நாடகம் எப்பதான் முடியுமோ...? எதுக்கும் கந்தர்மடச்சந்தியால போறது தான் லேசு...'

அழுத்தமான நினைவுகளோடு கஸ்தூரியார் வீதியால் வந்தவர், அரசடி வீதியில் திரும்பினார். கந்தர் மடச்சந்தியில் தடை ஏதும் போடாததால், சுலபமாக அவரால் அதைக்கடக்க முடிந்தது.

பாரதிசிலையடி, நல்லூர் மேற்கு வீதி என வந்தவர், துர்க்கா மணி மண்டபத்துக்கு முன்பாக வந்த போது, வசீகரமான சிரிப்புடன் - தனது ரீக்கடையி லிருந்து வெளியே வந்த ஈசன் தடை சொன்னான்.

"சட்டநாதர் வீதியல தான் கிளேமோர் வெடிச்சதாம்... மேற்படியானில பத்துப்பன்ரெண்டு முடிஞ்சு தாம்... அதனாலை வீடு பூந்து பெண்புரசுகள், பிள்ளைகளெண்டு பாராமல் சுட்டுத் தள்ளியிருக்கிறாங்களாம்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முருகா", என தலைக்கு மேலாகக் கரம் குவித்துக் கூவியவர்: 'சங்கிலியன் வீதிச் சென்றி வரை போய்ப் பாப்பமே...' என நினைத்துக் கொண்டார்.

சென்றியில், ஆமி - ட்றக்குகளிலும் கவச வாகனங்களிலும் வந்து குவிந்து கொண்டிருந்தது.

இவரைக் கண்ட படையினர் துப்பாக்கிச் சனியனை கரங்களில் ஏந்தியபடி ஓடிவந்தார்கள்.

"இருபால... கல்வியங்காடு எல்லாம் போக இல்ல... நில்லு... அதெல்லாம் ஹை செக்கியூரிட்டி ஸோன்; இப்ப இருந்து. என்ன...? விளங்க இல்ல... உயர் பாதுகாப்பு வலயம். போகாத... திரும்பு... திரும்புடா... அங்க எல்லாம் ஆள் இருக்க இல்ல..."

பேசியதென்னவோ சாதாரண சிப்பாய்தான். ஆனாலும் அவனது பேச்சிலிருந்த மிடுக்கும் தோரணையும்...

'அட இங்கு தடி எடுத்தவனெல்லாம் தண்டல் காரனா...?'

அவர் அசந்து போய் நின்றார்.

திடீரென அவருக்கு, அவரது மனைவியின் ஞாபகம் வந்தது.

'ரதி எங்க போயிருப்பாள். பாவம் அவளுக்குக் காலு மேலாது... பக்கத்து வீட்டில் பிள்ளைக்கு பிள்ளையாயிருக்கும் பாஸ்கரன், லட்சுமி, அந்தச் சின்னஞ்சிறு தவ்வல் தாரணி எல்லாரும் எங்க போயிருப்பார்கள்... கொண்டலடியான் தான் அவர்களைக் காப்பாற்ற வேணும்...'

திகைத்துப் போன அவருக்கு எங்கு போவதென்று தெரிய வில்லை. தளர்ந்து மெதுவாக நடந்தார்.

அவருக்குத் தலை சுற்றுவது போலிருந்தது. தொகையாக வேர்த்தது. சைக்கிளை வீதியின் அருகாக விட்டவர். சற்று ஒதுங்கித் தரையில் உட்கார்ந்து கொண்டார்.

அவருக்கு அழவேண்டும் போலிருந்தது. மனதை அழுத்தும் துயரமனைத்தையும் துடைத்து எறிந்து விடுவது போல. அவர் குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினார்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சருகு

காற்றில் அதிக அசைவில்லை. அது லேசாகச் சலனித்தது. பின்னர், மேற்கு நோக்கி உருண்டது. என்ன இலை? எந்த இலையின் சருகு. சருகு மஞ்சளாக இருந்தது. அதில் வெள்ளைப் புள்ளிகள் சிலவும் கறுப்புப் புள்ளிகளும் இருந்தன. சருகின் நடு நரம்பை ஒட்டி ஒரு ஓட்டை இருந்தது. அதை எடுத்து முகர்ந்து பார்த்தான். செரி மரத்தின் இலை என்பதை அவன் இனங் கண்டு கொண்டான்.

மேற்குப் பக்கமாக உருண்ட சருகு, மரவேரின் அடியைத் தொட்டுத் தடைப்பட்டு நின்றது. அது அசைந்து தரவேண்டும் என்று அவனது மனசு அடித்துக் கொண்டது. காற்றின் அசைவு பலமாக இருந்ததால் வேரினடியைத் தழுவிக் கிடந்த சருகு பறந்து சென்று அங்கு வந்து கொண்டிருந்த இளம் பெண்ணின் சட்டையினுள், மார்புப் பக்கமாகச் செருகிக் கொண்டது. அசூயை யுடன் வலது கையை மார்பினுள் விட்டு அந்தச் சருகை எடுத்த அவள், அதனை வெளியே விட்டாள். அவளது கரம் பட்டுச் சருகு சற்று ஓரம் உடைந்து காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறந்து சென்ற சருகு, மரத்தடிப் பிள்ளையாரைத் தழுவியபடி கிடந்தது. காலதாமதமாக வந்த குருக்கள் இரண்டு குடம் நீர் எடுத்து விநாயகப் பெருமானுக்கு அபிஷேகம் செய்தார். நீரின் பின்னால் பால், தேன், விபூதி, சந்தனம், குங்குமம், மலர்கள் எனக் கொட்டி அபிஷேகம் நடந்தது. தீப ஆராதனையின் பின்னர் அவன் அந்தச் சருகை எடுத்தான். சருகில் இருந்து நீர்பிரளயமாய்க் கொட்டியது. அந்த நீரை எடுத்து அருந்தினான். தீர்த்தம் தேவாமிர்தமாக இருந்தது. அங்கு நின்ற அனைவரும் அவனிடம் தீர்த்தம் வாங்கி அருந்தினார்கள்.

அங்கு ஓடி வந்த சிறு பையனும் தீர்த்தம் வாங்கி அருந்தினான். என்ன அதிசயம்! அந்தச் சிறுவன் பேருருப்பெற்று ஆண் அழகனாகத் தோன்றினான். நறுக்கு மீசை, குவிந்த உதடுகள், நீண்ட கழுத்து, நீண்ட கரங்கள் என அவனை வசீகரமாக்கின. அங்கு கூடிய இளமை ததும்பும் பெண்கள் வைத்த கண் அகற்றாமல் அவனையே விழுங்கி விடுவது போலப் பார்த்தார்கள்.

அப்பெண்களில் வாசுகி என்பவள் அவனிடம் தன் காதலைத் தெரிவித்தாள். வாழ்க்கை பரியந்தம் அவனுடன் வாழவிரும்புவதாகக் கூறினாள்.

விநாயகரது கழுத்தில் சாத்தியிருந்த மாலைகளில் ஒன்றை எடுத்து அவளுக்கு அவன் அணிவித்தான். புளகமுற்ற அவள் பாய்ந்து சென்று வெட்கம் கெட்டதனமாக அவனைத் தழுவினாள். முத்தமிட வும் செய்தாள்.

சருகை வைத்த கண் தூக்காது பார்த்தபடி இருந்த அவன் அதைக் கையில் எடுத்தான். கைபட்டதும் அது சுடர் விட்டு எரிந்தது. கையில் நெருப்புச்சுட்ட தகிப்பு அவனுக்கு ஏற்படவில்லை. அந்தச் சருகு அதே வடிவப்பேற்றுடன் பொற்கட்டியாக மாறியது. அதை தரையில் வைத்தான். பிறிதொரு பொன் கட்டி தோன்றியது. அதை இடம் பெயர்த்தி வைத்த போது - வைத்த இடங்களிலெல்லாம் பொற் கட்டிகள் ஜனித்தன. அப்பொற்கட்டிகளை எடுத்துக் கண்களில் ஒன்றிக் கொண்டவன். மடியில் கட்டிக் கொள்ளவும் செய்தான். மடி கனத்தது.

அலாவுதீனுக்கு அவனது அற்புத விளக்குப் போல அவனுக்கு அந்தச் சருகு இருந்தது. அவன் கேட்பதையெல்லாம் தரக்கூடிய வல்லபம் உடையதாக அது இருந்தது. அவன் வசிப்பதற்கு ஏற்ற மாளிகையொன்றைக் கோரினான். பொன் வேய்ந்த கூரையுடைய மாளிகை அவன் கண் முன் தோன்றியது. மனை கிடைத்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மனையையாள்வதற்கு ஒரு மனைவி வேண்டுமே என நினைத்தான். நினைத்த மாத்திரத்திலேயே அப்ஸரசான ஒரு கன்னி தோன்றினாள். பிடித்துப் பிடித்து வைத்தது போல அவளது அங்கங்கள் இருந்தன. கூர்த்த நாசி, அகன்ற கண்கள், அடர்ந்த புருவங்கள், குவிந்த வாய், தேன் பிலிற்றும் உதடுகள், நீண்ட பசிய கழுத்து, பிருஷ்டத்துக்குக் கீழாகத் தளையும் கூந்தல், நீண்ட கைகளில் பொன் வண்ண விரல்கள்.

அப்ஸரசான அவளை அவன் ஆடைகளைந்து பார்த்தான். அவள் அவனைப் பைத்தியமாக்கினாள். பாய்ந்து சென்றவன் அவளை நெருங்கி ஆரத் தழுவி முயங்க முயற்சித்தான்.

"இப்ப வேண்டாம்... கொஞ்சம் பொறுங்க... தாலி கழுத்தில ஏற வேணும்." என்றாள்.

அவளது கனிவான சொற்களுக்கு அமைவாக பொசு பொசு பட்டுச் சேலைகளையும் ஆடை ஆபரணங்களையும் அவன் அவளுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தான்.

அவளுக்குப் பொற்தாலியும் அணிந்தான்.

பூரித்துப் போய் நின்றவளை அவன் ஆரத்தழுவி, முத்த மிட்டான்.

கால நகர்வில் இரண்டு மழலைச் செல்வங்களை அவள் ஈன்றெடுத்தாள். ஆண்குழந்தைக்கு செந்தில் என்றும் பெண் மகவுக்குச் செந்திரு எனவும் பெயர் சூட்டி அவர்கள் இருவரும் மகிழ்ந்தார்கள்.

அவனுடன் அந்தப் பொன் இலையும் கூடவே இருந்தது. அதில் அவனுக்கு மிகுந்த கவனமும் பத்திரமும் இருந்தது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றமும் தண்டனையும்

ரவிதான் அவனது இயற்பெயர். இயக்கப் பெயர் குமணன். குமணனுக்கு இருபது இருபத்தி ரண்டு வயதுக்கு முன்பின்னாக இருக்கும். அனுராதபுரம் பழைய ரவுணில் பஸ்ஸில் இருந்தவர்களை இயக்க உறுப்பினர்கள் சுட்டுக் கொலை செய்தார்கள். போராளியான குமணனும் அதில் பங்கு கொண்டிருந்தான். அந்தப் படு கொலை யில் அவனது பங்களிப்பு மிகமிகக் குறைவு. குறைவு என்பதிலும் பார்க்க முற்றாக இல்லை என்றே கூற லாம். அங்கே அந்த பஸ்ஸில் ஏராளமான பெண்களும் குழந்தைகளுமே இருந்தார்கள். அவர்களுக்கு எதிராக அவனது A.K. 47 உயரவில்லை. அங்கிருந்த பெண்களின் முகங்களில் தனக்கு உயிர் தந்த அருமை அம்மாவையே கண்டான். குழந்தைகள் அவனது தம்பி தங்கை களாகவே காட்சி தந்தனர்.

ஊர் பட்டவேம்பு வயிரவரை நினைத்த படி அவன் பேசாமல் இருந்தான். அதனைக் கவனித்த குறூப் லீடர் வேந்தன்: "அந்த ஆமிக்காரன்களை யாவது சுடடா..." என்று சத்தம் வைத்தான்.

அவன் சிப்பாய்கள் இருவரை நோக்கிக் குறி வைத்தான். அதில் நெட்டையாக இருந்த ஒருவன் சுட்டு வீழ்த்தப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேந்தனுக்கு அது போதுமானதாக இருக்கவில்லை. தனது கோபத்தை பஸ்ஸில் இருந்தவர்கள் மீது காட்டினான். இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர் என அறுபதுக்கு மேற்பட்டவர் கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். பஸ்ஸில் இரத்த வெள்ளம் குமிழிட்டு ஓடியது. குமணனுக்கு உள்மன ஓரங்கள் கசிந்து உருகியது. நெஞ்சு படபடக்க மயங்கி விழுந்தான். அந்தக் கொலைக் களத்தில் அவனது பங்கு மிகமிகக்குறைவானது என்பது மேலிடத்துக்கு அறிவிக்கப் பட்டது. வேந்தன் தான் அந்தக் காரியத்தைச் செய்தான்.

●

அவனுடைய செயல் தண்டனைக்குரிய குற்றமாக மேலிடத் தில் கருதப்பட்டது. கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப் பட்டான். முதலில் அவன் சிறையில் அடைக்கப்பட்டான். சிறை ஐந்து தர ஐந்தடி பரப்புள்ளது. மலசலகூடம் அந்தச் சிறிய அறையில் தான் இருந்தது. அவன் அங்குதான் மலசலங்கழித்தான்.

கைகளும் கால்களும் நிலத்தோடு நிலமாகப் பிணைக்கப்பட்ட நிலையில் அவன் கிடந்தான். காலை உணவு அவனுக்குத்தரப்பட வில்லை. மதியம் இரவென்று ஏதாவது தருவார்களா...? அவனுக்குப் பசியேதும் இல்லை. அதனால் அவன் கவலை கொள்ள வில்லை.

இரண்டு நாட்களாக அவன் மிகுதியான மன அழுத்தத்துடன் இருந்தான். மூன்றாம் நாள் காலை - அது காலையா மாலையா அவனுக்குத் தெரியவில்லை. வேந்தனுடன் உயர் தரத்திலிருந்த போராளியான வேங்கையன் வந்தான்.

வந்த வேங்கையன் அவனை நிர்வாணமாக்கி அவன் கிடந்த நிலையில், சவுக்கால், இரத்தக் கண்டல், ஏற்படும் வரை அடித்தான். அவன் மூச்சுப்பறிந்த நிலையில் மயங்கினான். அவன் மயக்கம் தெளிந்த பின்னர் கூட அடிகள் தொடர்ந்தன. காயங்களின் மேல் அடி விழுந்த போது அவன் உயிர்க்குலை சிதைந்து துடிதுடித்தான்.

மாலையில் அவனுக்கு உணவு தரப்பட்டது. காய்ந்து போன கோதம்பை ரொட்டியும் பருப்பும். அவன் அவற்றை உண்ட போது விக்கல் எடுத்தது. ஒரு குவளை அவனது கையில் தரப்பட்டது. அதை அவன் பருகினான். உப்புக்கரித்தது. 'என்ன இது. இது மூத்திரமா?' அவன் ஓங்காளத்துடன் வாந்தி எடுத்தான். களைப்பு மேலிட நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

'இந்தத் தண்டனை எத்தனை நாள் வரைக்கும் நடைபெறும். இதிலிருந்து மீண்டு வருவது எப்படி...?' திகைப்புடன் அவன் கலங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது ஆணுறுப்பையும் விதையையும் ஒரு சேர கொதி நீரில் வைத்தெடுத்தார்கள். நெருப்புச் சுட்டது போன்ற பொக்களங்கள் அவற்றில் ஏற்பட்டன.

ஏறக்குறைய இரண்டு வாரத்துக்கு மேற்பட்ட சித்திரவதைகளின் பின்னர் அவன் விடுவிக்கப்பட்டான். அவனுக்கு இரண்டு விருப்புரிமை வழங்கப் பட்டது. இயக்கத்தை விட்டு விலகிப்போவது அல்லது இயக்கத்திலேயே தொடர்ந்திருப்பது. அவன் இயக்கத்திலேயே தொடர்ந்து இருப்பதற்கு விருப்பம் தெரிவித்தான்.

அவன் சமையல் அறையில் வேலை செய்ய அமர்த்தப் பட்டான். சமைப்பதில் அவனுக்கு ஆரம்ப அறிவு கூட இல்லை. அவன் சமைத்தவை வாயில் வைப்பதற்குக் கூட முடியாமல் இருந்தன. கறிகளில் உப்பு அதிகமாக இருந்தது. அல்லது காரம் அதிகமாக இருந்தது.

அவனது தண்டனை குறைக்கப்பட்டு மீளவும் படையணியில் சேர்க்கப்பட்டான். படையணியில் அவன் கடை நிலை ஊழியனாக இருந்தான். அவனது மன உரத்தை அதிகமாக்குவதற்கு கடுமையான பயிற்சி அளிக்கபட்டது. அவற்றில் ஓரளவு தேறிய நிலையில் யுத்த முனைக்கு அவன் அனுப்பப்பட்டான்.

யுத்தமுனையில் அவனுக்கு அறிமுகமான அந்தச்சிறு பையனின் - பதினாலு வயது கூட அவனுக்கு இருக்காது என்பது அவனது கணிப்பு - முகம் அவனுக்கு மிகவும் பரிச்சயமானதாக இருந்தது. இவனைக் கண்டதும் அவனது கண்கள் தன்னிச்சையாகப் பனித்தன. இவனையே அவன் பார்த்தபடி இருந்தான்.

'இது ஏன்... ஏனெ.' இவன் குழம்பினான். அந்த இளவயதிலும் அவன் A.K.47 துப்பாக்கியை மிகவும் லாகவமாகப் பயன்படுத்தியது இவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

பரந்தனுக்குக் கிழக்காக நடந்த சமரில் அந்த இளம் வீரனின் சாகசங்கள் இவனை மலைக்க வைத்தது. இடது தோளில் சூடு பட்டுத்துடித்து விழுந்த போது இவன் தான் ஓடிச்சென்று அவனை அணைத்துக் கொண்டான். காயம் சிறியது ஆனாலும் இரத்தம் பீறிடவே செய்தது. காயத்துக்குக் கட்டுப்போட்டு ஆசுவாசப்படுத்தியவன் அவனைப்பார்த்துக் கேட்டான்:

"தம்பி எந்த இடம்.!"

"கோப்பாய் குருக்கள் மடம்."

இவனுக்குத் திக்கென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா பெயர்...?"

"நல்லையா."

"அம்மா...?"

"விசாலட்சி."

"எனது பெயர் கமலன் இயக்கப்பெயர் காண்டீபன்."

இவனது கண்கள் பனித்துவிட அவனை அணைத்துக் கொண்டான்.

அவனது சொந்த இரத்தம், அவனது இளவல் என்பதை அவன் புரிந்து கொண்டான்.

"தங்கச்சி எங்கைய டா...?"

"அம்மாவோட தான் இருக்கிறாள். அப்பா செல்லடியில் செத்துப்போயிட்டார்."

"தங்கச்சி படிக்கிறாளா...?"

"படிக்கிறாள்... ஆறாம் வகுப்பு."

"ஏன் இயக்கத்துக்கு வந்தனி."

"நீ வந்ததாலை தான் நானும் வந்தனான்."

"அம்மா பாவம்.. அவவை நீ அங்கேயே இருந்து பார்த்திருக்கலாம்."

"எல்லாம் தங்கச்சி பார்த்துக்கொள்வாள்."

அவனது முதிர்ச்சியான பேச்சு இவனை மலைக்க வைத்தது. அந்த யுத்தமுனைப் போராட்டங்களின் பின்னர் அவனைச் சந்திப் பதற்கான தருணங்கள் எதுவும் அவனுக்கு வாகாக அமையவில்லை.

அடுத்து வந்த இரண்டு வருடமும் காண்டீபன் எங்கே போனான் என்ற போதமில்லாமலே கழிந்தது.

மீளவும் பரந்தனின் மேற்கு அரங்கில் யுத்தம் நடந்தது. தொடர் துப்பாக்கி வேட்டுக்கள் அந்தக் குளிர்ந்த இரவில் ஒன்றுக் கொன்று பதில் சொல்வது போல விட்டுவிட்டுக்கேட்டுக் கொண்டிருந்தன.

அந்தப் போராட்டத்தின் நிச்சயமின்மை அவனுக்குத் தெளிவாகவே தெரிந்தது.

"இந்த யுத்தமுனையிலாவது காண்டீபனைக் காணமுடியுமா?" என்ற அவலாதி அவனுக்கு இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறடிக்கப்பட்ட அந்தப் போராட்டத்தின் சாட்சியாக அவன் இருந்தான்.

சில இயக்கப்போராளிகளை ஒரு சுற்றி வளைப்பின் போது அரசபடை மடக்கிப் பிடித்தது. அந்தப்போராளிகளில் குமணன் பிடி பட்டான். காண்டீபனும் சிறைப்பட்டிருக்கக் கூடும் என அவன் நினைத்துக் கொண்டான்.

●

போராட்டத்தின் போதுஇருந்ததை விடவும் அது முடிந்த பின்னர் தான் வெறுப்பின் ஈனத்தனமான பக்கங்கள் புரட்டப் பட்டன.

படுகாயமடைந்த காண்டீபன் முகம் சிதைக்கப்பட்ட நிலை யில் இவனுக்கு அண்மையிலேயே கிடந்தான். அரச படையினர் யுத்தத்தின் போது சரமாரியாகச் சுட்டிருக்கலாம். அதனால் அவனுக்கு இந்த நிலை என நினைத்துக்கொண்டான்.

பதினைந்து வயதுக்கும் குறைவான அந்தப் பாலகன் போராட்ட களத்தில் எதிரிகளைத் துவம்ஷம் செய்தது இவனுக்கு மிகுந்த பூரிப்பைத் தந்தது.

“சக்கரவியூகத்துள் சிறைப்பட்டுச் சமர் செய்த அந்த இளம் வீரன் அர்ச்சுன புத்திரன் அபிமன்யு மாதிரி இவனும் யுத்தம் செய்திருப்பானா?”

மனங்கலங்கியவனாய் மீண்டும் பக்கத்தில் கிடந்த காண்டீ பனைப் பார்த்தான்.

துக்கத்தின் அழுத்தம் அவன் தோலிலும் எலும்பிலும் ஊடுருவியது, இரக்கமற்ற சர்ப்பம் போல அவனைச் சுற்றி வளைத்து இறுக்கி அவனை மூச்சுத் திணற வைத்தது.

‘இங்கு காயப்பட்டுக் கிடப்பவன் எனது சொந்த இரத்தம் தான்... அவனது சிவந்த தாமிர நிறம் அதை உறுதி செய்கிறது.’

மன உறுதியை வரவழைத்துக் கொண்டு கம்பீரமாக எழுந்து நின்றவன், தனது தம்பியை ஈவிரக்கமற்று வதைத்த அந்தப் படைத் தளபதியை குறி வைத்தான். அவனது மார்பைக் குறி வைத்து இரண்டு வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. தளபதி சுருண்டு விழுந்தான். அதே சமயத்தில் இவனது மார்பிலும் சரமாரியாகக் குண்டுகள் பாய்ந்தன.

திரும்பிப் பார்த்தான், அவனது தம்பியின் உடலில் உயிர்ப்பு அடங்கி இருந்தது. இவன் சுருண்டு அவனுக்குப் பக்கத்திலேயே சரிந்தான்.

அப்போராளிகளது உயிர்கள் சங்கமித்து, ஒரு பேரொளிப் பிளம்பாய் அங்கு நிலை கொண்டது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லும் திசை

இரண்டு பெண் குழந்தைகள். புனிதம், திலகம் எனப் பெயர் சூட்டினார்கள். அடுத்துக் கருவுயிர்த்ததும் அவள் நினைத்துக் கொண்டாள். 'இது ஆண் குழந்தை தான் என...' மருத்துவிச்சி முத்தாச்சியும் "வயிறு சிறுப்பமா இருக்கு, இது ஆண் தான்" என்று கூறினாள்.

உருவாகி வரும் குழந்தை ஆணாகிவிட வேணும் என்பதில் அவளுக்குப் பெருவிருப்பம் இருந்தது. வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டினாள். போகாத கோயில்களுக்கெல்லாம் போனாள். எல்லாமே பிறக்கப்போகும் குழந்தை, ஆண் குழந்தையாக இருக்க வேணும் என்பதற்குத் தான்.

அவள் விரும்பியது போல எல்லாமே நடக்கும் என நம்பினாள். திரண்டு வந்த மகிழ்ச்சியில் கரை புரண்டவள், கருவுயிர்த்த குழந்தையின் வரவை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள்.

பிறந்த குழந்தை ஆண் தான்! ஆனால் கறுப்பாக இருந்தான், தகப்பனின் சாயல், ஆனாலும் அவரது நிறம் அவனுக்கு வரவில்லை . அப்பா கொஞ்சம் சிவலை. பட்டவேம்பான் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து உதித்திருக்கிறான் என்று அல்லும் பகலும் பிசத்தித் திரிந்தாள் அவள். வயிரவர் மாதிரி அவனும் கறுப்பாகத்தான் இருந்தான்.

கால நகர்வில், அவன் வளர்ந்து, பாடசாலைக்கு போக ஆரம்பித்தான். கல்வி கற்பதில் அவனுக்கு நிரம்பிய ஆர்வம் இருந்தது. சக மாணவ மாணவிகளுடன் சகஜமாக பழகும் இயல்பு அவனுக்கு இருந்தது. சிறு வயதிலேயே அவனுக்குப் பெண் பிள்ளைகளில் அதிக ஈர்ப்பு இருந்தது? ஒரு சமயம் வதனி என்ற பெண் குழந்தையைப் பாடசாலைக் கழிப்பறை வரை இட்டுச் சென்று அவளை முத்த மிட்டான்.

அவளுக்கு இவன் முத்தம் தந்த மாதிரி இருந்தது. அப்படி அல்ல, அவளது கைகள் தான் அவனது கன்னத்தை ஸ்பரிசித்தது என்பதை அவளது உள்ளுணர்வு அவளுக்கு உணர்த்தியது. அவளுக்கு அது புல்லரிப்புடனான ஒரு சிலிர்ப்பை வரவழைத்தது.

வதனி மட்டுமல்ல, தாரகை, சுமதி, சுவேதா என்று பல பெண் பின்ளைகளும் அவனுடன் சிநேகமாக இருந்தார்கள். எல்லாரையுமே முறைவைத்து அவனால் தொடமுடிந்தது. சுவேதா தான் கொஞ்சம் பிகு பண்ணிய மாதிரி இருந்தது. அவளையும் அவனால் வழிக்குக் கொண்டுவர முடிந்தது.

அவனது இடது தாடையில் அந்தச் சிறுபொட்டளவான மச்சம். பெட்டையளுக்கு அது பிடித்திருந்தது. அந்தச் சிறு மச்சத்தைத் தொட்டுத் தொட்டு சிறுமிகள் மாய்ந்து போனார்கள்.

படு சுட்டியான அவன், படிப்பில் விண்ணனாக இருந்தான். புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளுடன் சித்தி யடைந்தவன், இந்துவில் சேர்ந்து கொண்டான்.

எப்பொழுதுமே ஒரு தலைமைத்துவப் பண்பு அவனை தலை நிமிர்ந்து நடக்க வைத்தது. வதனிக்கு அவனது நிமிர்ந்த நடையும் நேரிய பார்வையும் சுறுசுறுப்பை வழிய விடும் அவனது உடல் மொழியும் நிரம்பப் பிடித்திருந்தன. தனது மன உணர்வுகளை அவள் அவனுக்குப் பட்டும் படா மலும் உணர்த்தத் தவறவில்லை.

அந்தப் பிஞ்சுப் பருவத்திலேயே அவளில் மையல் கொண்டு விட்டதான பிரமை அவனுக்கு. இதெல்லாமே வளரிளம் பருவக் கோளாறு தான் என்பதைக்காலம் அவனுக்கு உணர்த்தியது.

ஓ.எல். படித்தபோது கணித பாடத்தில் ஏற்படும் சந்தேகங் களைப் போக்குவதற்கு அவளிடம் அவன் சென்று வந்தான். அவளது பொன்னொளிர் மேனியின் தகிப்பில் அவன் தன்னை மறந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் பெரியவளாகி விட்ட செய்தி அறிந்து அவளைப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொண்டான். அதனைத் தாளாத அவள் அவனது வீடு தேடி வந்து குசலம் விசாரித்தாள். அவனது படிப்புப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டதோடு, கணக்குப் பாடத்தில் ஏதாவது விளங்காத பகுதிகள் இருந்தால், தன்னிடம் வந்து படிக்கும்படியும் கேட்டுக் கொண்டாள்.

அவளை நேர்க்கண் கொண்டு பார்த்த அவன், அவள் கூச்சப்படுவது கண்டு, அவளது கரத்தை எடுத்து முத்தம் தந்தான்.

அவனது கண்களில் காமம் ஏதும் இருக்கவில்லை . காதலே அருவியாய்ச் சொரிந்தது.

கிழமையில் இரண்டு நாட்கள் அவன் அவளிடம் சென்று வந்தான். அவளைப் பார்க்கும் தோறும் அவனது மனம் குதூகலம் கொள்வதை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

அவளது அகன்ற கண்கள் அவனது உயிர்க் குலைவரை சென்று உரசி அவனுக்கு ஏதேதோ சொல்ல முயன்றன. அவளது மார்பின் சிறு திரட்சி, முகத்தில் சேர்ந்து விட்ட பளபளப்பு என்று எல்லாமே அவனைக் கிறங்க வைத்தன.

மூச்செறிந்து மூச்செறிந்து அவளைப் பார்க்க மட்டுமே அவனால் முடிந்தது.

"என்ன சேயோன் என்னிலை உனக்கு விருப்பமா? எல்லாம் தன் பாட்டில் கிடக்கட்டும். படிப்பம். படித்து ஒரு டிகிறியாவது வாங்க வேணும், அதுக்குப் பிறகு மற்றதையெல்லாம் பார்த்துக் கொள்ளலாம்" கூறியவள் அவனை இழுத்து அணைத்து அவனது உதடுகளை, பரிவுடன் லேசாக வருடினாள்.

'போதுமா...?' என்பது போல ஒரு பார்வை பார்க்கவும் செய்தாள். அவனது உதடுகளில் இருந்து பிரிந்த சிரிப்பின் குளிர்ச்சி அவளைத் தொட்டது.

திடீரெனத் தான் வதனி நோய்வாய்ப்பட்டாள், என்ன என்பதை அறிவதற்கு முன்பாக அவளது உயிர் பிரிந்து விட்டது. டெங்கு எனப் பின்னர் அவன் அறிந்து கொண்டான். அவனது முதல் காதல் இப்படி ஆகிவிட்டதால் உலர்ந்து போன அவன், தன்னளவில் நொந்து போவதைத் தவிர வேறு எதனையும் அவனால் செய்ய முடிய வில்லை. அவளது நினைவுகளும் அவளோடு கண்ட கனவுகளுமே அவனுக்குத் துணையாக இருந்தன. காலம் அவனது துயரைச்சிறுகச்சிறுகக் கரைத்தது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஏ.எல். படித்த போது தான் அவளை, துளசியை சயன்ஸ் அக்கடமியில் கண்டான். அவள் இவனைப் போல உயிரியல் பிரிவில் படித்தாள். ஒரே பாடங்கள், ஒரேநேர வகுப்புகள். வதனியின் நினைவுகளை துளசியைப் பார்ப்பதன் மூலம் அவன் தொலைத்துக் கொண்டான். எப்பொழுதுமே அவளது மூச்சுக் காற்றுப் படும் தூரத்திலேயே அவன் இருந்து கொண்டான். அவளது உடலில் இருந்து வீசும் சுகந்தம் அவனைக் கிறங்க வைத்தது. தன்னிலை இழக்க வைத்தது. அவளில் கிறங்கிப் பாட நேரத்தில் கூட, பாடத்தில் கவனம் கொள்ளாது, அவளைப் பார்ப்பதிலேயே நேரத்தை அவன் தொலைத்தான். ஒருவகை Obsession அவனுக்கு அவளில் ஏற்பட்ட நிலையில், மனதில் நிறைந்து நின்று அவள் மிகுந்த தொந்தரவு செய்தாள். கள்ளப்பட்ட மனதின் அழுத்தங்களுடன் அவள் பின்னால் அலைந்தான். அவனது தொந்தரவுகளால் நிரம்பிய வருத்தமுற்ற அவள் அவனைப் பார்த்து வார்த்தைகளினால் குத்திக் கிளறினாள்.

"சேயோன் என்ன இது . . . Am I a flirt...? என்ன பரத்தைத் தனத்தை என்னில கண்டிட்டயள்... பிளீஸ் எனக்குத் தொந்தரவு தராதீர்கள்... நான் படிக்க வேணும். உங்கட படிப்பும் இதுகளாலை குழம்புது. உங்க அப்பா அம்மாட்ட வந்து என்னை முறையிட வைச்சிராதை யள்..." அவளது ஆணித்தரமான குரலில் எதுவிதமான இசைவும் இல்லை என்பதைப் புரிந்து கொண்ட அவன், ஒதுங்கிக் கொண்டான். அவனது கண்ணியம் அவளுக்குப் பிடித்திருந்தது.

"நல்ல நண்பர்களாக இருப்பமே . . . !" என்று அவள் கூற அதற்கு இசைவாக அவன் நடந்து கொண்டான்.

துளசி தூரப்பட்டாலும் பெண்கள் மீதான அவனது பிரீதி குறையவே இல்லை. அவனது பாலிய காலச் சிநேகிதிகளை அவன் நாடினான். தாரகை, சுமதி, சுவேதா என்று அவர்களுடன் அவனது பொழுது போனது. அப்பெண்களில் சுவேதா மீது அவனுக்கு அதிக ஈர்ப்பும் கசிவும் இருந்தது. அவளது பசுமையான நீண்ட கழுத்து அவனுக்குப் பிடித்திருந்தது. இன்னும் அவளது கண்கள், பளீரிடும் பல்வரிசை, உதடுகள், தசைத்துக்கிடந்த பிருஷ்டம் என்று எல்லாமே அவனுக்குப் பிடித்திருந்தன.

"சுவேதா! நீங்க வதனிமாதிரி நல்ல வடிவு. உங்கட அந்த நீண்ட கழுத்தைத் தொட வேணும் போல இருக்கு" என்று அவளுடன் மிக நெருக்கமாக இருந்த சந்தர்ப்பமொன்றில் கூறினான்.

"ஆ.. அப்படியா... தொட ஆசை எண்டா தொட்டுத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருங்களன்”

அவளது கழுத்தைத் தொட்டு வருடியவன், அதில் முத்தமிடவும் செய்தான்.

அவனது மார்பைப் பிடித்துத் தள்ளியவள்: “சேயோன் திஸ் இஸ் ரூ மச். நான் அப்படி யொன்டும் ஊத்தைப் பெட்டை இல்லை.”

“ஸொரி... ஸொரி சுவேதா..! திஸ் இஸ் நொட் இன்ரென் ஸனல்.. ஏதோ கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டிட்டடன்.”

“உங்கட உணர்ச்சியைக்குப்பையில கொட்டுங்க”... என்றவள், தொடர்ந்து அவனிடம் பேசுவதையோ, பழகுவதையோ முழுமையாகத் தவிர்த்துக் கொண்டாள்.

உடைந்து போன சேயோன் இனிமேல் பெண் வெடிலே வேண்டாம் என்று படிப்பில் மிகுந்த கவனம் செலுத்தினான். அவனது அந்தக் கவனம் அவனுக்கு மருத்துவத் துறையைத் தரவில்லை. உயிரியல் பாடப் பிரிவில் தெரிவாகி, பல்கலைக் கழகம் புகுந்தான். பல்கலைக்கழகத்தில் கூட ‘கண்ணன் நடுவினியே கன்னியர் சூழவர...’ என்ற பாணிலேயே அவனது காலம் கழிந்தது.

●

பல்கலைக்கழகத்தில் அவனுக்குப் பிடித்த பெண்களின் மலர்ச்சியும் மதமதப்பும் மணமும் அவனைத் திக்குமுக்காட வைத்தன. குறித்த பெண் என்றில்லை, அவனது பாச்சில் இருந்த பெண்களிடம் அவன் நெருங்கிப் பழகவே செய்தான். இருப்பினும், சுட்டிப்பாக எந்தப் பெண்ணுடன் நெருங்கிப் பழகுவது என்ற தெரிதல் அவனுக்கு இல்லாமலே இருந்தது. ஒரு சமயம் பிரியா என்ற பெண்ணில் அவனுக்கு ஈடுபாடு இருந்தது. அவளது திரண்ட உதடுகளில் முத்தமிடவும் அவளது குழைந்த மார்பகங்களைத் தோயத் தோயத் தழுவவும் அவன் விருப்பம் கொண்டான். அவளும் அதற்குத் தயாரானவள் போலச் சமிக்கைகள் காட்டினாள். அந்தப் பிரியா தன்னுடன் மட்டுமல்ல, இன்னும் சில பெடியளோடும் குல்லி குத்துவ தாக அறிந்து மிகுந்த ஏமாற்றத்துடன் ஒதுங்கிக் கொண்டான். அவளோ அவனை விடுவதாயில்லை. ஒரு சமயம் அவன் விடுதி அறையில் இருந்த போது அவனை நாடிவந்து, தழுவி, முத்த மிட்டாள். அத்துடன், தன்னையே பூரணமாகவும் தந்தாள். அந்த முதல் முயக்கம் அவனுக்கு அருவருப்பையே தந்தது. விலை மகளைப் புணர்வதைப் போலவே அது அவனுக்கு இருந்தது. குழப்பத்துடன் அவளைவிட்டு ஒதுங்கியதுடன், அவளையும் ஒதுக்கினான். அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. 'இவன் இல்லை யென்றாலென்ன இன்னொருவன்...' என்ற சிந்தனைப் போக்கு அவளுடையது.

அறையை விட்டு வெளியேறிய அவன் அன்று முழுவதுமே அலைந்து திரிந்துவிட்டு, இரவு பதினொரு மணிக்குத் தான் தனது அறைக்குத் திரும்பினான்.

'நான் பழகிய எந்தவொரு பெண்ணுமே எனக்குத் திருப்தி தரக் கூடியவளாகவும் மனசைத் தொட்டு உரசி, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளக் கூடியவளாகவும், எனக்கே எனக்கானவள் என்று கொண்டாடக் கூடியவளாகவும் இல்லையே, இது ஏன்..? பெண்கள் விஷயத்தில் நான் இவ்வளவு அதிஷ்டம் கெட்டவனா என்ன.?'

'அந்தப் பெட்டை... என்னில் அன்பைச் சொரிந்த சௌந்தரியம் - வதனி கூட ஏன் என்னிடம் இருந்து அகாலத்தில் பிரிய வேண்டி வந்தது...'

மனது உலர்ந்து தவித்தான்.

விடுதியில் இருப்பதற்கு அவனுக்குப் பிடிக்கவில்லை. பெண் களின் தொல்லை ஏதுமில்லாமல் பாதுகாப்பாக இருக்கலாமே என்று அவனது தூரத்து உறவினரும் அப்பாவின் நண்பருமான திருலிங்கத் தாரின் வீட்டுக்கு இடம் மாறவிரும்பினான். அவர் புதிதாகத் திருமணம் செய்து கொண்டவர். அவரது திருமணம் திருமலையில் நடந்ததால் அவன் போகவில்லை. அவரது மனைவி அப்ஸரஸ் என்று அம்மா சொல்லி அறிந்திருந்தான். அவரையும் அவரது அப்ஸரஸை யும் பார்ப்பதற்கு அவர்களது வீடு தேடி அவன் போனான். அவனைப் புரிந்து கொண்ட திருலிங்கத்தார் அவனுக்கு இசைவாகவே பதில் தந்தார். அவரது மனைவியை அவனால் அன்று பார்க்க முடிய வில்லை. அவள் எங்கே என்று கேட்காது திரும்பினான். வரும் திங்கள் வருவதாகக் கூறி அவரிடம் விடை பெற்றுக் கொண்டான்.

அவன், திங்கள் அவரது வீடு வந்த போது மனைவி மட்டும் தான் வீட்டில் இருந்தாள். அந்தப் பிஞ்சுப் பெட்டை அவனுக்கு நிரம்பப் பிடித்த மாதிரி இருந்தாள்.

'இவ்வளவு இளமையா...? சுடர் கொடிபோல அழகாக இருக்கிறாளே!' வியப்புடன் திக்குமுக்காடியவன், அவளில் மொய்ந்த கண்களை அகற்ற முடியாமல் அவளை விழுங்கி விடுவது போலப் பார்த்தான்.

அவளது உதடுகள் தேன் பிலிற்றியபடி சிவப்பாக இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மெலிதாகச் சிரித்தாள். மலர் மொட்டு உடைவது போல அது இருந்தது. அந்த மலர்தலில் கூட ஒரு கசங்கல் அவனுக்குத் தெரிந்தது. அத்துடன் ஓர் ஆழ்ந்த துயரத்தின் ரேகைகள் அவளைச் சூழ..!

'இது ஏன்... ஏன்?' அவனது உள்மனதில் குடைச்சல்

அவள், அவனை அழைத்துச் சென்று அவனது அறையைக் காட்டினாள். அறை அவனுக்குத் திருப்தி தரும் வகையில் இருந்தது. படிப்பதற்கு ஏற்ற வகையில் ஒரு மேசை. மேசையில் ஷேட்டுடனான மின் விளக்கு. மேசையை ஒட்டிக் கதிரை. அத்துடன் சற்றுத் தள்ளி கைப்பிடியுடன் கூடிய மற்றொரு கதிரை. கிழக்குப் புறமும் மேற்குப் புறமும் ஜன்னல்கள். ஜன்னல்களுக்கு இள நீல வண்ணத் திரைச் சீலைகள், கதவுச் சீலை கூட கரு நீலப்பச்சையில் காற்றில் படபடத்த படி... எல்லாமே அவனுக்குப் பிடித்திருந்தது. அந்த அழகிய பெட்டை உட்பட.

அவளை மீண்டும் பார்த்தான். அவளது கண்கள் சிறிது படபடத்த போதும் அவளும் அவனை நேராகப் பார்த்தாள். அவள் கண்களில் படித்திருந்த துயரத்தின் அடியாக எதையோ யாசித்துப் பெறத்துடிப்பது போல இருந்தது. அந்த உணர்வு அவனை உள் இழைவரை சென்று உசுப்பியது.

"அம்மா...!" என்று அவன் முனகினான்.

"என்ன.. என்னராசா..." கமறியவள் அவனை அணைத்துக் கொண்டாள்.

அந்த ஸ்பரிசம் 'இவள்... இவள்தான் எனக்கு உரியவள்...' என்று கோசமிட்டது. மனத்தடைகள் ஏதுமில்லாமல் அவனும் அவளை அணைத்துக் கொண்டான்.

"இது பாவம். சரியில்லை"

அவன் சடுதியாக அவளைவிட்டு விலகிக் கொண்டான். மனம் குழம்பிச் சஞ்சலப்பட்டது.

●

லிங்கத்தார் ஒரு வகையான - பித்துக்குளி -அவரது அறையில் மேசை மணி இருந்தது. அதை அழுத்தும் ஓசை கேட்டதும் அவள் அவரை நாடி ஓடுவதை அவன் பலவேளைகளில் பார்த்திருக்கிறான். அந்த நடைமுறை அவனுக்கு எரிச்சல் தருவதாய் இருந்தது. அவள் வருவதற்குச் சிறிது தாமதமானால் அவர் அவளைப் பார்த்துப் பொரிந்து தள்ளுவதை அவன் பல சந்தர்ப்பங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்திருக் கிறான். அந்தப் பொரிதல் பொதுவாக இப்படித்தான் இருக்கும். 'உறண்டை... தேவடியா முண்டை!' இதெல்லாமே அவர் இந்தியா வில் பட்டப்படிப்பை மேற்கொண்ட காலத்தில் அவருடன் வந்து ஒட்டிக் கொண்டவை.

அந்தப் பேச்சுக்கும், ஏச்சுக்கும் பின்னர் அவள் வீட்டு மூலை முடுக்குகளைத் தேடிச் சென்று விக்கி விக்கி அழுவதை அவன் பார்த்திருக்கிறான். எப்பொழுதெல்லாம் அனுதாபத்துடன் அவன் அவளை நாடிச் சென்று ஆறுதல் கூறுவானோ அப்பொழுதெல்லாம் அவனது ஆறுதல் வார்த்தைகள் அவளை நிலைகுலைய வைத்து விடுகிறது. அந்தச் சந்தர்பங்களில் எல்லாம் தன்வசம் இழந்தவளாய் அவனது மார்பில் சாய்ந்து குலுங்கிக் குலுங்கி அழுவாள். வெப்பியாரம் மீதூர வேகம் கொண்டவளாய் அவனை முத்தமிடவும் செய்வாள். அம்முத்தங்கள் மிக அழுத்தமானவையாக இருக்கும்.

எந்த பெண்ணிடமும் பெற்றுக் கொள்ளாத முத்த மழை அது!

அவன் திகைத்துப் போய் எதிர்வினை ஏதுமில்லாமல் நின்றால்: "கொஞ்சடா... ஒண்டும் தப்பில்லை கொஞ்சு..." என்று கரைவாள். தொடர்ந்து வரும் பேச்சுக்கள் லிங்கத்தார் பற்றியதாக இருக்கும்.

"உன்ரை ஆள் ஆம்பிளையே இல்லையப்பு. அவர் ஆண்மை இழந்த நபுஞ்சகன். கலியாணம் எண்ட பேரில ஏதோ செய்தோம் - ஆனால் அந்த மனுஷன் என்னைத் தொட்டுப்பார்க்கக் கூட இல்லை. அப்பன் என்னை ஏந்தி எடடா...! இந்த நிலமை என்ரை பகையாளிக் குக் கூட வரப்படாது. இந்த உலகத்தில எந்த மூலைக் கெண்டாலும் நாம இரண்டு பேரும் ஓடிப் போய்ச் சீவிப்பம். இந்த ஜென்மம் உனக்கே உனக்கானது. இது கடவுள் தந்த வரம். என்ரை இந்த முழிப்பு... பொய்யில்லை... உண்மை உண்மையடா...!"

சேயோன் திகைத்துப் போய் நின்றான். அதைத் தவிர வேறெதையுமே அவனால் செய்ய முடிய வில்லை.

பெண்கள் விஷயத்தில் அதிஷ்டமில்லாதவன் என்ற எண்ணம் தவறானது என்பதை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அந்த வாழ்க்கையில் மிகுந்த லயிப்பும், ஈடுபாடும் ஏற்பட்டது.

அவர் இல்லாத வேளைகளில் அவள் அவனுடனேயே இருந்தாள். சில வேளைகளில் இரவிலும் கூட அவளால் அவனுடன் இருக்க முடிந்தது.

முதல் முதலாக அவள் அவனுடன் உறவு கொண்ட அந்த அந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையை அவன் நினைத்துக் கொண்டான். லிங்கக்தார் ஏதோ அலுவ லாகக் கிளிநொச்சி வரை சென்றிருந்தார். நாளை தான் அவர் வீடு திரும்புவார் என்பதை அவள் சொல்லி அவன் தெரிந்து கொண்டான்.

அவள் எதுவிதமான தயக்கமும் இல்லாமல் அவனது அறைக்கு வந்தாள். முன் கதவு பூட்டி இருப்பதை உறுதி செய்து கொண்டு வந்தவனை அவள் இரு கை கொண்டு இறுக்கமாகத் தழுவினாள். அவளது இதழ்களில் ஆழ்ந்த முத்தத்தைப் பதித்தவன், அவளது உதடுகள் பிரிந்து இடம் தர தனது நாவினால் அவளது நாவை ஆசை தீரச் சுவைத்தான். ஈறுகளில் ஊறிய தேன் சுவை நீரைக் கிறங்கிய நிலையில் இருவருமே மாறி மாறிப் பருகினார்கள். உணர்ச்சியின் உச்சத்தைத் தொட்டவர்களாய் ஆடை நெகிழக் கிடந்தார்கள். அம்மணமாக இருந்த அவள் அவனுக்குத் தேவதை போல இருந்தாள். வாரி எடுத்து அவளைக் கட்டிலில் கிடத்தியவன், மார்புக் குவுட்டினைச் சுவைத்தவாறு, அவள் மேலாகப் படர்ந்து, அவளது ஆர்வமும் பரபரப்பும் கூடிவந்த நிலையில் அவளது உடலில் ரசத் தடங்களைத் தொட்டுத் துடித்து அவளுடன் முயங்கினான். அந்த முயக்கம் மிகவும் வீரியத்துடன் நிலைத்தது. அழுத்தமாகவே இறுகிக் கிடந்தவர்கள், உச்சத்தைத் தொட்ட கிளர்வின் முடிவில் ஒதுங்கிக் கொண்டார்கள். அன்று இரவு முழுவதுமே ஒன்றாக இருந்த அவர்கள் விட்டு விட்டு விடியும் வரை முயங்கினார்கள்.

*'இது காமமா இல்லைக் காதலா...? இரண்டும் கலந்தது தான்!'*

உணர்வுச் சுழியுள் அகப்பட்டு தவித்த அவன் *'இவள்... இவள் என்னுடையவள், இவளை என்னால் இழக்க முடியுமா...? முடியாது.'*

அவனது மனதில் அலை புரளும் நினைவுகள்.

இந்த உறவு தவறானது என்று அவனுக்கு உள்ளுணர்வு உணர்த்தியபோதும் அப்படி அல்ல என்பது போல அவள் நடந்து கொண்டாள். "விருப்பமெண்டால் முறைகேடு அது இதெண்டு ஏது மில்லையடா!" என்று ஓயாது மந்திரம் போல அவளது உதடுகள் வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டே இருந்தன. அவை அவனுக்கு ஆறுதல் தருபவையாக இருந்தன.

*"நீ ஒளி விளக்கடா...! திசை காட்டிய திரவியம். எனது வாழ்வு சாபல்யமடையக் காரணமானவன் நீ தானடா... குஞ்சா உன்னோட வாழப் போற அந்த நாட்களை எண்ணிய படிதான் என்ரை காலம் கழியுதடா...!"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபலையாய், பாலை வெளியில் தகிக்கும் அவளைத் சேந்தி எடுத்து வாழ்வு கொடுப்பதற்கு அவன் சங்கற்பம் பூண்டு கொண்டான்.

இறுதியாண்டுப் பரீட்சை எழுதிய நிலையில், பரீட்சை முடிவுகளை அவன் எதிர்பார்த்திருந்தான். முடிவுகள் சாதகமாக அமைந்ததில் அவன் மகிழ்ச்சி அடைந்தான்.

விஞ்ஞானப் பட்டதாரியான அவனுக்கு உடனடியாகவே வட்டக்கச்சி மகாவித்தியாலத்தில் ஆசிரிய நியமனம் கிடைத்தது.

வட்டக்கச்சி சென்று, நியமனம் பெற்றவன் அவளை அங்கு அழைத்துக் கொண்டான்.

அவர்களது கனவுகள் நனவாகியதில் இருவருமே மகிழ்ச்சியில் திளைத்துப் போய்க் கிடந்தார்கள். அவர்களின் வாழ்க்கையில் முள்ளாய் உறுத்தியவர் லிங்கத்தார்தான். அவர் பிரச்சினைகள் ஏதும் தராமல் விவகாரத்துக்கு இசைந்து போனதால், இருவருமே மகிழ்ச்சியின் விளிம்பினைத் தொட்டுக்குதூகலித்தனர்.

வளை நண்டு போல வாழ்ந்த அவர்கள் 'இதெல்லாம் வேண்டாமே...' என்ற முடிவுக்கு வந்தவர்களாய், அவனது பெற்றோர்களுக்கு இது விஷயத்தைத் தெரியப்படுத்திய போது அவர்கள் பயந்தது போல எதுவும் நடக்கவில்லை. அவர்களது அங்கீகாரம் முழுமையாக அவர்களுக்குக் கிடைத்தது.

"திரிதூண்டப்படாது... எரியூட்டப்படாமல் கிடந்த அகல் விளக்கடா நான். அதை... அதை நீ சுடரவைத்து விட்டாய்...!"

அவளது புலம்பல்கள்.

தொடர்ந்தவள்:

"நா... நான் கருவுயிர்திருக்கிறனடா... எங்களுக்கு ஒரு குட்டிச் சேயோன் வரப்போறான்..."!

'ம்... அப்படியா...!' என்று ஆச்சரியப்பட்டவன் அவளை வாரி எடுத்து அணைத்துக் கொண்டான்.

அவள் அவனது கரங்களில் கனிந்து கரைத்தாள். மனசு லேசாகிவிட்டதான மனோ நிலை அவர்களை ஆக்கிரமித்துக் கொண்டது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபாவம்

கிழமையில் ஓரிரு முறையாவது என்னைச் சந்திக்காது விட்டால் அவளுக்குப் பத்தியப் படாது. அவள் என்னை வந்து காணும் போதெல் லாம் - உயர்பீடத்தில் இருந்தபடிக்கு, ஒரு மிதப் புடன் - சக படைப்பாளிகளையும் அவர்களது எழுத்து வல்லபத்தையும் நன்னித் துகள் துகளா கத் துப்புவாள். அதை அசிரத்தையுடன், எதுவித எதிர்வினையும் இல்லாமல் ஒரு சடங்காக,நல்ல பிள்ளைத்தனத்துடன் நான் கேட்டிருப்பேன். இது அவளுக்கு மிகவும் பிடிக்கும். எதிர்த்து எதுவும் சொல்வதை நான் தவிர்த்துக் கொள்வதுடன் இடைக்கிடை அவளது உரையாடலைக் குளிர் விப்பதற்காக "ம்..." கொட்டிக்கொள்வதுண்டு.

முழுமையான இலக்கியச் சூழலைத் தன்னுடைய கைக்குள் பொத்தி வைத்திருப்பதான நினைப்பு அவளுக்கு எப்பொழுதும் இருந்தது. அத்துடன்,தன்னை முழுமையாக முன்னிறுத்திக் கருத் துரைக்கும் புள்ளிகளில் அவள் முக்கியமான வளாக இருந்தாள்.

நீண்ட காலத் தொடர்புடைய எங்கள் இருவருக்கும் - நட்பு என அழுத்தமாகச் சொல்லக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய எதுவும் இருந்ததில்லை. இந்த நிலையைத்தான் அவள் பெரிதும் பேணி வந்தாள். ஆனால் நான் அப்படியல்ல,அவளிடத்தில் எனக்கு மதிப்பும் மரியாதையும் அன்பும் இருந்தது. இது அவளது ஆளுமை விகசிப்பால் ஏற்பட்டிருக்கலாம். நல்ல படைப்பாளியான அவள்,சில நல்ல கதைகளையும் கவிதைகளையும் எழுதியுள்ளாள். இவற்றை விடவும் - அவள் ஒரு சிறந்த சஞ்சிகையாளராகவே பலராலும் அடையாளப்படுத்தப்பட்டிருந்தாள். இதற்கு அவள் நடத்திய சஞ்சிகைகள் சான்றாக இருக்கின்றன. அத்துடன் நடத்தையில் கோணல் எதுவுமில்லாது நேர்மையாக இருக்க வேண்டு மென்ற அவளது விருப்பம் கூட, உண்மையும் பொய்மையும் சம விகிதத்தில் கலந்த ஒன்றாகவே எனக்குத் தோன்றுகிறது.

அவளை, அவளது இயல்புகளைச் சீண்டிப் பார்ப்பவர்களை, தனி ஒருத்தியாக நின்று நான் சாமாளித்திருப்பதுடன்,அவளது நன்மை கருதி அவர்களிடம் நீண்ட நேரம்-அவள் சார்பாக-வாதிடவும் செய்திருக்கின்றேன். இது பற்றி அவளுக்கு ஓரளவு தெரியும். அவள் அப்படி எனக்காக நடந்து கொண்ட சந்தர்ப்பம் ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவளது நடத்தை இது விஷயத்தில் எப்பொழுதும் ஒரு மறை பொருள்தான். நல்லதும் அல்லாததுமான பண்புகள் அவளிடத்தில் இருந்தமை எனக்குத் தெரியும். இது, அவளது மன இயல்பு சார்ந்த ஒன்றாகும். எந்த மனிதனிடத்திலும்-அவர் தேவனாக இருந்தாலும் அவள் தன் இயல்புக்கு மாறாக நடந்து கொண்ட சந்தர்ப்பங்கள் மிக மிகக்குறைவு.

எனது படைப்புகள் பற்றி அவள் சிலாகித்துப் பேசிய சந்தர்ப்பங்கள் இருந்த போதும்-சில சமயங்களில் ஒரு புழுவைப் பார்ப்பது போலப் பார்த்து நகையாடுவதிலும்என்னைச் சிறுமைப் படுத்துவதிலும் ஒரு வன்முறை மிக்கவளாகவே இருந்துள்ளாள். இவளது இந்தச் தீச் சொடுக்கல்கள் என்னை மட்டுமல்ல, சக இலக்கிய படைப்பாளிகளையும் அவர்களது படைப்புகளையும் தீண்டிப் பஸ்மமாக்கி விடுவதுண்டு. இவை எல்லாமே அவளது கருத்துப்படி விமர்சனம்!

அவள் ஒரு விமர்சனப் பிரம்மம். இத்தகைய பிறவியுடனான எனது தொடர்பு ஒரு வகையில் Paradoxical-லானது தான்.

எது எப்படி இருந்த போதும்-இவள் எனது நேசிப்புக்கு உரியவள். அவள் இரண்டு கிழமைக்கு மேலாகவே என்னிடம் வராதது எனக்கு லேசான பதகளிப்பையும் கவலையையும் தந்தது. எதையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்து விட்டதான தவிப்புடன், அவளை நாடி அவளது வீடுவரை சென்றேன்.

அவள் வீட்டு விறாந்தையில், சோர்ந்து போய் ஒரு ஸோபா வில் கிடந்தாள். கிழடு தட்டிய தோற்றம் அவளுக்குத் திடீரென வந்து விட்டது போல் எனக்குத் தோன்றியது. அது எனக்குக் கவலை தருவதாய் இருந்தது.

'என்ன ...?' என்பது போல அவளைப் பார்த்தேன்.

"சுகமில்லை... இரண்டு கிழமைக்கு மேலாகக் காச்சல்... அதுதான் ..." என்றாள்.

அவளது முகம் லேசாக வீங்கி இருந்தது. உதடுகள் வெடித்து, சிறு சிறு புண்களுடன் இருந்தன.

"என்ன இது... மருந்து எடுக்கேல்லையா?"

"எடுத்தனான்... மருந்தாலதான் வாய் அவிஞ்சு போச்சுது... வயிறும் எரியுது... காய்ச்சல் கொதியும் அடங்கேல்லை..."

"ஆர் டொக்டர்...?"

"சில்வெஸ்ட்டர்..."

"அவர் சரியாய் உம்மை Drug பண்ணியிருக்கிறார். மருந்துகளை இரண்டு நாளைக்கு எடுக்காமல் விடும்... விட்டுப் பாரும் ..."

"ம் ..." சொன்னவள் உள்ளே குரல் கொடுத்தாள்.

அவளுடைய சகோதரி தேநீருடன் வந்தாள். அவள் மிகவும் எளிமையும் இனிமையும் நிறைந்தவள். மிகவும் அன்பு பாராட்டும் குணம் அவளிடம் நிரம்ப இருந்தது.

"மயூரியை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்"என்றேன்.

"ம்..." என்றவள் இனிமையான மலர்ச்சியை முகத்தில் கசிய விட்டாள்.

"பேசிக்கொண்டிருங்கள். எனக்கு வேலை இருக்கு."என்று கூறியவள், உள்ளே சென்றாள். அவள் போன கையுடன் இவள் பேசத் தொடங்கினாள்.

"எழுத்தாளர் எல்லாரும் கொட்டிச் சிந்திறதைப் பொறுக்கிற பொறுக்கியள். உம்மையும் சேர்த்துத்தான் சொல்லிறன்."

'அய்யோ தொடங்கி விட்டாள்.' என்று எனது மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்துக் கொண்டது.

எனக்கு அப்பொழுது நாவேந்தன் இலக்கிய விருது-எனது நாலாவது சிறுகதைத் தொகுதியான "ஒதுக்கத்துக்கு" கிடைத்திருந்தது.

"இதில் யார் பொறுக்கி?, நானா இல்லை அந்த அருமந்த மனிதர் நாவேந்தனா ...?"

ஒன்றும் புரியாது விழித்தேன்.

"என்ன முழுசிறீர்..."?

"நான் முழுசேல்லை...இதையெல்லாத்தையும் விட்டிட்டு பதட்டப்படாமல்,மனசைப் பக்குவமாய் வைச்சிரும். அப்பத்தான் உம்மட வருத்தம் மாறும். முடிஞ்சால் நாளை வாரும் ... பின்னேரம் எண்டால் நல்லம்...என்ரை பெறாமகள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்தி யில H.O வா இருக்கிறாள். நல்ல ராசியான டொக்டர் எண்ட பேர் அவளுக்கு இருக்கு. அவவிட்டை ஒருக்கால் போவம்."

"ம்..." சொன்னவள்,அந்த இயலாத நிலையிலும் கேற் வரை வந்து என்னை வழியனுப்பினாள்.

அவளது கண்கள் லேசாகக் கலங்கி இருப்பதைக் கண்டேன். அதை மறைத்துக் கொள்ளும் பாவனை அவளிடம் இருந்தது.

"என்ன ...?" என்று அவளைப் பார்த்தேன்.

"இல்லை...ஒருவர் தானும் என்னைப் பார்க்க வரேல்லை... நீர் ... நீர் மட்டும்தான்!" என்றாள்.

அவளது குரலில் கனிவும் பட்சமும் இருந்தது.

"அட கல்லுக்குள் ஈரமா...?" அதிசயப்பட்ட நான், சைக்கிளில் தொற்றி மிதித்தேன். பிரதான வீதியில் ஏறும்வரை என்னையே பார்த்தபடி அவள் நிற்பது தெரிந்தது.

●

சனிக்கிழமை மாலை அவள் என்னிடம் வந்தாள். தந்த தேநீரை அரையும் குறையுமாகக் குடித்து விட்டு எழுந்தவளைப் பார்த்து நான் கேட்டேன்:

"வாய்க்கச்சல் மாறேல்லைப் போல ... ரீ குடிக்கேல்லைப் போல... காய்ச்சல்லெண்டா எதையும் ருசிச்சுக் குடிக்கேலாமல்த் தான் இருக்கும்."

என்னைப் பார்த்து மென்மையாகச் சிரித்தவள்,வேறு எதுவும் பேசவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர்மடத்துக்கு இருவரும் சைக்கிளில்தான் போனோம். டொக்டர் வீட்டில் தான் இருந்தார். என்னையும் அவளையும் கண்டதும் எங்களை வரவேற்று, "இருங்கோ ..." என்று கூறியவர் உள்ளே சென்றார். ஸ்ரெதஸ்கோப்பும் கையுமாக வந்தவர். மயூரியைப் பூரணமாகப் பரிசோதித்தார். பின்னர் அவளைப் பார்த்துக் கூறினார் :

"பயப்பட வேண்டாம்... நெருப்புக்காய்ச்சலாய்த்தான் இருக்கும்... எதுக்கும் இரத்தத்தை ஒருக்கால் சோதியுங்கள். நான் தாற மருந்தை காலையிலையும் மாலையிலையும் சாப்பாட்டுக்குப் பின்னாலை இரண்டு இரண்டு வில்லைகளாய் எடுங்கள்...!" என்று கூறியவர், சில மருந்து வில்லைகளைப் பொதியிட்டு அவளிடம் தந்தார்.

"தாங்ஸ்...!" என்று கூறிய மயூரி, டொக்டரிடம் விடை பெற்றாள். நானும் விடைபெற்றுக்கொண்டேன்.

"நல்ல முகராசியான டொக்டர். அன்பாக நடக்கின்றார். இப்படித் தான் டாக்குத்தர்மார் சினக்காமல், இணக்கமா, இனிமையா இருக்கவேணும்".

'அன்பா...? இணக்கமா...! இவைபற்றியெல்லாம் உனக்குத் தெரியுமா...?' மனதில் தோன்றிய அனுங்கலை வாய்வழி சொல்லத் தயங்கியபடி, அவளுடன் இணைந்து நடந்தேன்.

சூழலில் கவனம் ஏதும் கொள்ளாமல் நல்லூர் வரை இருவரும் வந்தோம். சைக்கிளில் இருந்தபடி, கால்களைத் தரையில் ஊன்றியவாகில் நின்ற மயூரி சொன்னாள்:

"அப்ப நான் வாறன்...இதால... வைமன் றோட்டாலை... போறது எனக்குச் சுகம்..."

"சரி..." எனத் தலையசைப்பில் விடைதந்தேன்.

சைக்கிளை மெதுவாகச் செலுத்தி வந்த எனக்கு அவளது நினைப்பே திரும்பத் திரும்ப மனதில் மிதப்புக்கொண்டது.

கனிவான, மலர்ந்த சிரிப்புடன்கூடிய அவளது தோற்றம். வேட்டைப்பற்கள் வெளித்தெரிய இரையைத் தாக்கிக் குதறும் துர்மிருகத்தின் குரூரமான முகம் என எனது மனக்கண் முன்னால் மாறி மாறித் தோன்றின. கிலேசத்துடன் சலனப்பட்ட மனதைச் சமனப் படுத்தியபடி, வீடு நோக்கிச் சைக்கிளைச் செலுத்தினேன்.

●

**கா**லையில் அல்லது மாலையில்-நேரம் ஒதுக்கி-அவளைப் பார்ப்பதற்குத் தினம் தினம் செல்வது எனது வழக்கம். அன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிலேயே அவளிடம் சென்றேன். அவள் உடல் நிலை தேறி வருவது தெரிந்தது. என்னை,தானாகவே வந்து,தனது படிக்கும் அறைக்கு அழைத்துச் சென்றாள். மேசைக்கு அருகாக இருந்த கதிரையில் அமர்ந்தவள், என்னையும் அமரச் சொன்னாள். நான் அவளுக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் உட்கார்ந்து கொண்டேன்.

அறையின் நான்கு சுவர்களுடனும் பொருந்தியமாதிரிப் பெரிய புத்தக அலுமாரிகள்.

என்னைப் பார்த்த மயூரி, “விருப்பமான புத்தகங்களை எடும் ...” என்றாள். இந்தச்சலுகை அநேகமாக எனக்கு மட்டும்தான் என்பது தெரியும். எந்தப் புதிய புத்தகம் என்றாலும் அவளுக்கு நான் படிக்கத் தருவதுண்டு. அந்தப் பெருந்தன்மையைக் கனம் பண்ணும் செயல் இது என்பதாய் நான் புரிந்து கொண்டேன்.

இரு புனைகதைகளை எடுத்துக்கொண்ட என்னைப் பார்த்து:

“Fiction எதுவும் நான் இப்ப படிக்கிறேல்லை...Non fiction, litearary polemics எனக்குப் பிடிக்கும். அவற்றைத்தான் இப்ப படிக்கிறன். வெ.ச. எனக்குக் குரு மாதிரி...அவருடைய ‘இலக்கிய ஊழல்கள்’ எனக்கு நிரம்பப் பிடித்த புத்தகம். மனிசன் என்ன மாதிரிக் கருத்துக்களை முனை மழுங்காத மொழியில் மிகக் கூர்மையாக முன் வைக்கின்றார்”.

எனக்கு அந்தத் ‘தேவவழிபாடு’ பிடித்திருந்தது.

தேநீர் வந்தது. அருந்திக்கொண்டிருந்த பொழுது அவள் சொன்னாள்:

“உம்மடை புதுத்தொகுதி படிக்கேல்லை. ஒதுக்கம் இப்ப தான் படிக்கிறன். எல்லாக் கதைகளையும் படிச்சு முடிச்ச மாதிரித் தான். கதைகள் எடுப்பாயில்லை. திசையில் வந்த பக்குவம், இன்னும் உலா, மாற்றம் கதைகள் பரவாயில்லை. உம்மை ஒரு எழுத்தாளர் எண்டு சொல்லுறதெல்லாம் ஒரு Myth...A.J. இப்ப எல்லாம் நல்ல கருத்துக்களைப் பதியிறேல்லை”.

‘ஒதுக்கம்’ தொகுதிக்கு A.J. முன்னுரை எழுதியிருந்தார், கதைகள் பற்றிய அவரது சிலாகிப்பு இவளைப் பாதித்திருக்க வேண்டும். அதனால்தான் ‘இந்தக்கொதிப்பா...?’ என நினைத்துக் கொண்டேன்.

குட்டக் குட்ட குனியிறவனும் மடையன், குட்டு வாங்கிறவனும் மடையன் என நினைப்பு வர, “எனக்கு முள் முடி வைக்கிறவையையும் தெரியும் பொன் முடி வைக்கிறவையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும்...” என்றேன்.

“அப்படியா லதா ...? இது என்ரை அபிப்பிராயம்; அவ்வளவு தான். ரூபன், மயூரன், ராஜி என்றெல்லாரும் என்னை மாதிரித்தான் சிந்திக்கின கதைக்கின ...”

மூளைச் சலவை செய்வதில் அவள் அரசி. சிறிசுகளாய் அவளை சூழ உள்ள இலக்கியக் குஞ்சுகளுக்கு,சிறுகச் சிறுக நஞ்சு தருவது போல ஏதேதோ ...சக எழுத்தாளர்களது ஆளுமையையும் பிம்பத்தையும் கருக்குவதில் அவள் அதி சமர்த்து. நானும் எனது எழுத்தும் அதில் அடக்கம் என்பது எனக்குத் தெரியும்.

உம்முடைய கருத்துகளை வேதவாக்காக எடுக்கிற தவ்வல்கள் தானே அவர்கள். உம்மை Role Model லாக எடுக்கிற அந்தப் பிள்ளைகளுக்கு வேறு என்ன தெரியும்”.

“இல்ல... அப்படி இல்ல... அதை ஓரளவு அவர்களாலை யும் கிரகிக்க முடிகிறது”. என்று ஏதேதோ சொல்ல முனைந்தாள்.

அப்பொழுது,அவளது முகத்தில் இயல்பாக இருக்கும் கனிவு உதிர்ந்தது, கண்களில் ஒருவித ஆழ்ந்த சந்தேகப் பார்வை படர்ந்தது.

“இந்தத் தொகுதியில இருக்கிற நகர்வு கதை பற்றி ஜெயமோகன் நல்லாய் சொல்லியிருக்கிறார்”.

“ஜெயமோகன் என்ன கொம்பா ..? அவர் ஒரு இந்துத்துவ ஊது குழல் தானே...? ஸ்தலபுராணங்களும் அதீத புனைவு என்ற பெயரில போலியா ஏதேதோ குப்பை கொட்டிக் கொண்டிருக்கிறார். அவரை எல்லாம் போய்ப் பெரிசாய் எடுக்காதேங்க. அவரைப் பற்றின உங்கள் மதிப்பீடு அபத்தமாய் இருக்கு ...”

அவள் முன்னால் இருப்பதற்கு அசௌகரியப்பட்ட நான் எழுந்து கொண்டேன். ஆனால், நாளையும் நான் வருவேன் என்ற எதிர்பார்ப்பு அவளிடம் இருந்தது. “நாளைக்கு வரேக்கை ஜெய மோகன்ரை ‘ஏழாம் உலகம்’ நாவலைக் கொண்டு வாரும்... படிக்கவேணும். அதைத்தான் அவர் எழுதினதிலை உச்சம் எண்டு இஞ்சை சிலபேர் புளுகிறாங்கள்.

“அப்படியா ...?” என்று சிரித்தபடி நான் வெளியே வர, உடன் வந்து என்னை வழியனுப்பினாள்.

●

தினந்தினம் அவளை நான் சென்று பார்த்து வந்தேன். அவளது உடல் நிலை ஓரளவு தேறி, பழைய கலகலப்பு அவளிடம் தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று புதன்கிழமை! நாலு மணியளவில், ஏறக்குறைய ஒருமாத கால இடைவெளியில் எனது வீடு தேடி அவள் வந்தாள். அவள் சற்று மகிழ்ச்சியாக இருந்தது போலத் தெரிந்தது. வந்ததும் வராததுமாக அவள் சளசளக்கத் தொடங்கினாள்:

"லதா ...எனக்கு உம்மைப் பிடிக்கும்... நிரம்பப் பிடிக்கும். ஏன் தெரியுமா ...? நீர் உம்மடை Image ஐ - அதாவது பிம்பத்தைக் கட்டி வளர்ப்பதில்லை. அதுக்கு எதுவிதமான முயற்சியும் எடுப்ப தில்லை."

நெஞ்சொடு நெருங்கி வந்த பேச்சல்ல அது என்பது எனக்குத் தெரிந்தது.

அவள் தொடர்ந்து பேசினாள் :

"நாலு வரி கிறுக்கிப் போட்டு மிதப்போடை தலைகீழா நடக்கிற அரைவேக்காட்டு எழுத்தாளர்களுக்கு மத்தியிலை நீங்க வித்தியாசம்".

"அப்படியா...இருக்கட்டுமே..."என்றேன். எனது அமைதியும் பக்குவமும் எனக்குப் பிடித்திருந்தது. அவளது பேச்சுக்கு எதுவிதமான எதிர் வினையும் என்னிடத்தில் இல்லாமல் போனது அவளுக்கு ஆச்சரியமாகவும் எரிச்சலாகவும் இருந்திருக்க வேண்டும்.

என்னை வைத்த கண் மாற்றாது பார்த்தபடி இருந்தாள்.

'சாகக் கிடந்த என்னை நல்ல ஒரு டொக்டரிட்டைக் கொண்டு போய்க் காட்டி, உயிரைப் பிடிச்சு தந்ததுக்கு நன்றி...' என்று சொல்லப் போகிறாள் எனும் எதிர்பார்ப்போடு இருந்த எனக்கு அவளது பேச்சு உயிர்ப்பு ஏதும் இல்லாது சப்பென்றிருந்தது. அத்துடன் ஏமாற்றம் தருவதாகவும் இருந்தது.

மற்றவர்களுடைய மனசைத் தொடுகிற மாதிரி, நெகிழ வைக்கிற மாதிரி எல்லாம் அவளால் எதுவும் சொல்ல முடியாது, செய்ய முடியாது என்பது எனக்குத் தெரியும். அது அவளது சுபாவம். அந்த இயல்பு அவளைப் பொறுத்தவரையில் தானாக மாற்றம் அடையும் என நினைப்பது தவறானது என்பது எனக்கு அப்பொழுது விளங்கியது.

வாழ்க்கை, இலக்கியம், நண்பர் தெரிவு என்று எதையுமே போட்டுக் குழப்பாது நிதானமாக வாழ்வது போல் பாசாங்கு பண்ணும் அவளுக்கு நான் என்ன புத்திமதி சொல்லிவிட முடியும்!! அவளது வாழ்க்கை முழுமையுமே, இட்டுக்கட்டுதலோடு கூடிய, நடத்தைக் கோலங்களின் தொகுதிதானே!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென எதையோ நினைத்துக்கொண்டவள் மீளவும் பேச ஆரம்பித்தாள்:

"இரவு உங்கடை 'தாம்பத்யம்' கதையைப் படிச்சன். கதை Near Perfection. பழைய கதை எண்டாலும் நல்லா வந்திருக்குது. பெரிய எழுத்தாளர் எண்டு பேரெடுத்த ஆக்களின்ரை கதைகள் எல்லாம் பிரதி நிலையில் அடைசலா இருக்கும். என்ரை ஆலோசனையால தான் அவையள் திரும்பத் திரும்ப திருத்தி எழுதி பேரெடுக்கினை. உங்க கதைகளில் பலது உருவ அமைப்பிலை Excellent. சில கதையளின்ரை உள்ளடக்கம் கூட அச்சாவா வந்திருக்கு..."

"சந்தோஷம்...".

"ஆனாலும் உந்த செக்ஸ் விசயங்களை, நீர் தூக்கலா எழுதுற மாதிரித் தெரியுது. இந்த விசயங்களை இப்பிடி...இப்பிடி எழுத வேணுமா...? கொஞ்சம் பட்டும் படாமலும் பாத்துக்கொள்ளும்."

"அப்படியா எனது கதையளிலை வாற செக்ஸ் எல்லாம் பச்சைத் தண்ணித் தனமாய் இருக்கிறதாத்தான் எனக்குப் படுகுது. அதோடை அந்த விசயங்களைக் கூர்ந்து படிச்சா அவை ஆக்க பூர்வமா வந்திருப்பது தெரியும்."

"Nonsense!" சற்று உரப்பாகவே கோபப்பட்டாள்.

அவளது அந்த ஆக்ரோஷத்தை,நான் காதில் போட்டுக் கொள்ளாமல் இருந்தது அவளைச் சீண்டியிருக்க வேண்டும். அவள் என்னைப் பார்த்துச் சொன்னாள்:

"நோஞ்சான்களோட எல்லாம் இலக்கியம் பேசுறதை நான் வெறுக்கிறன்".

"அட இது முதுகெலும்பு விஷயமா...?" என்ரை முதுகெலும்பு வளைசல் ஏதும் இல்லாமல் பலமாய்,பத்திரமாய் இருக்குது..."

"நல்லது..." என்று கூறியவள்,என்னிடம் விடைபெற்று செல்ல எழுந்தாள். அப்பொழுது அவளைப் பார்த்து நான் கூறினேன்:

"உம்மடை முதுகெலும்புதான் லேசா உள்வளைஞ்சிருக்கிற மாதிரித் தெரியுது. கவனம்."

கூறியபடி மென்மையாகச் சிரித்தேன்.

"..............."

மௌனமாக,எதுவும் பேசாமல்,இயல்பான அந்த வசீகரமான புன்னகையுடன் அவள் என்னிடமிருந்து விடை பெற்றுக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இந்த மனுசியைப் பற்றி, எவ்வளவு நல்லதும் அல்லாததும் சொல்ல முடியும், எழுத முடியும். அதையெல்லாம் இங்கு எழுத வேண்டுமா? வேண்டாமே.' என்ற நினைப்புடன் நான் எழுந்து கொண்டேன்.

வெளியே வந்த அவள், தனது நெடிந்துயர்ந்த உருவத்தையும் நீண்ட கால்களையும் பயன்படுத்தி சைக்கிளில் அநாயாசமாக ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

இந்த அருமந்த பெட்டையின் முசுட்டுத்தனமும் கொதி நிலையும் தணியுமா...? இசைவு கொள்பவரிடத்திலான இவளது விலகலும், விரிசலும் எனக்கு எப்பொழுதும் உவப்பானதாக இருந்ததில்லை. அவளது இந்த Alienation-னும் தான் ஒரு Introvert-அகமுகி-என்பதில் அவள் கொள்ளும் உவப்பும் பரிதாபத்துக்குரிய வளாகவே அவளை எனக்கு இனங்காட்டியது.

'அவள் இப்பொழுதெல்லாம் நேருக்கு நேர் பேசுவதற்குத் தயங்குவதோடு- கருத்தைக் கருத்தால் உடைக்கும் பக்குவமும் இழந்து, வளை நண்டு போல உள்ளொடுங்கி உறைந்து போகிறாள். சமகாலக் கற்கை நெறிகளுடனான அவளது அழுத்தமான பற்றும் புரிதலும் தேய்ந்து வருவதால், சில இளம் படைப்பாளிகளின் கூர்மையான வாதங்களுக்கு முகங்கொடுத்துப் பேசுவதற்கு அவளால் இப்பொழுது முடியாமல் போய் விடுகிறது. இந்தப் பலவீனம் பூதாகாரமாக உருக் கொண்டு அவளைச் சிதைத்து விடுகிறது. அவள் மீளவும் கிளர்ந்தெழ-கிளர்ந்தெழும் வல்லபத்தைப் பெற்றுக்கொள்ள, அவளுக்குக் காலம் தான் கற்றுத்தர வேண்டும். கற்றுத்தரும் எனும் நம்பிக்கை எனக்கு உண்டு.'

நினைவுகள் தொடர, நான் வீட்டுக்குள்ளாகத் திரும்பி வந்தபோது எனது தங்கை கேட்டாள்:

"அந்த ஆட்டக்காரியோடை உங்களுக்கு என்ன குசலமும் விசாரிப்பும் ...பேசாமல் உள்ள வாருங்க ..."

அவளை நிமிர்ந்து பார்த்தேன்; அவளது முகம் கோபத்தில் சிவந்து கிடந்தது.

'அவளது கோபம் என்னிலா இல்லை அவளிலா...?' எனக்கு விளங்கவில்லை.

அவளது நடத்தை இயல்பு தப்பிய ஒன்றாகவே அப்பொழுது எனக்குத் தோன்றியது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்து

ஐம்பதுகளில் தான் அது நடந்தது. அப்பொழுது எனக்குப் பதிமூன்று அல்லது பதினாலு வயது தான் இருக்கும். ஸ்ரான்லி வீதியில் தான் அந்தப் புகைப்பட நிலையம் இருந்தது. சபாஸ்ருடியோ. அந்த நிலையத்தில் அக்கா தனது அடையாள அட்டைக்கு எடுத்த புகைப்படத்தை வாங்கி வரும்படி கேட்டிருந் தாள். புகைப்படத்தை எடுப்பதற்கு எனது சைக்கிளில் தான் நான் பட்டணம் போனேன்.

நிலையத்தை அடைந்ததும் புகைப்படப் பிரதியை எடுத்துக் கொள்வதற்குரிய ரிசீற்றை அங்கிருந்த நிர்வாகியிடம் தந்தேன்.

"தம்பி ஒரு நிமிஷம் இரும். படத்துக்கு final touches இருக்கு ரச் பண்ணீற்றுத் தாறன்."

அக்காவின் படம் அழகாக இருந்தது. தலை, கண்கள், புருவங்கள் என அவர் ஒரு மெல்லிய தூரிகையால் துல்லியமாகத் தொட்டுத் தொட்டு வருடினார். அக்கா மேலும் அழகானாள்.

என்னிடம் புகைப்படப்பிரதியைத் தந்தவர் பதினைந்து ரூபாயை வாங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். நான் உரிய பணத்தைத் தந்து புகைப்படத்தைப் பெற்றுக் கொண்டேன். அந்த வேளையில் தான் அந்த அதிசயத்தைக் கண்டேன்.

என்னை விட தவ்வலாக இருந்த பெடியன் ஒருவன் உயரமான சைக்கிள் ஒன்றில் பாருக்கு இடையில் ஒரு காலைச் செலுத்தி மற்றக் காலின் உதவியுடன் சைக்கிள் பெடலை அழுத்தி அழுத்தி மிதித்த படி வீதியில் மிதந்தான்.

சரியாக சபாஸூக்கு எதிராக வந்த பொழுது அவனது சைக்கிள் பகுதி பகுதியாகக் கழன்று விழுந்தது. அவனும் தார்றோட்டில் தொபுகடீர் என விழுந்தான். விழுந்தவன் வேகமாக எழுந்து - சைக்கிளின் ஹாண்டில், பாருடன் கூடிய நடுப்பகுதி, அச்சு, செயின் கவர், செயின் என்று எல்லாவற்றையும் கைகளில் ஏந்தி எடுத்த படி நின்றான். சைக்கிள் சில்லுகள் இரண்டும் பக்கவாட்டில் உருண்டோடிச் சரிந்து கிடந்தன.

பரிதாபமான அவனது பார்வை என்னில் தரித்தது. எனக்குச் சிரிப்பு வந்துவிடுகிறது. சிரித்தேன். என்னை விட நிலைய நிர்வாகி தான் வயிற்றையும் வாயையும் பொத்திப் பிடித்தபடி குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.

மிகுந்த வெக்கறையுடன் நின்ற பெடியனிடம் சென்ற நான் சைக்கிளின் பகுதிகளை, காவி எடுத்துச் சென்று பக்கத்தில் உள்ள சைக்கிள் கடையில் கொடுத்து அதனைப்பூட்டித்தருமாறு கேட்டேன். சைக்கிள் பூட்டப்பட்டதும் அதற்கான செலவை நானே சைக்கிள் கடைக்காரரிடம் தந்தேன்.

சைக்கிளை நன்றிப் பெருக்குடன் வாங்கியவன், மீளவும் பாரின் நடுவில் ஒரு காலை நுழைத்து மறுகாலால் பெடலை மிதித்தபடி சைக்கிளைச் செலுத்தினான்.

நான் அவன் போவதைப் பார்த்தபடி நின்றேன். ‘பிள்ளைக்கு அடிகிடி பட்டிருக்குமோ!...’ என்ற நினைவு மட்டும் எனது மனதில் திரும்பத் திரும்ப வந்து துன்பம் தந்தது.

●

அறுபத்தியிரண்டில் என நினைக்கிறேன். அப்பொழுது நான் பி.எஸ்.ஸி தாவரவியல் இரண்டாம் வருடத்தில் படித்துக் கொண்டிருந்தேன். கல்லூரி விவேகானந்தா.

நான் அக்கா இருவருமென மூவரும் மைலாப்பூரில் தெற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடவீதியில் இருந்தோம். அன்று மதியம் சாப்பிடுவதற்குக் கல்லூரியிலிருந்து வீடு போவதற்கு லஸ் கோணர் வரை வந்து விட்டேன். லஸ் கோணரில் தான் அந்த விபத்து நடந்தது. 12A பஸ் மாம்பலத்திலிருந்து திருவல்லிக்கேணியிலுள்ள ஐஸ் ஹவுஸ் போவதற்கு வந்து தரித்தது. பஸ்ஸில் வழமையான சனநெரிசல். அத்துடன் போக்குவரத்து நெரிசல் வேறு. வீதியைக் கடப்பதற்காக நான் சிறிது தாமதித்து நின்றேன்.

பஸ் புறப்பட்டது. ஓட்டுநர், பஸ்ஸை ஸ்ராட் செய்து வேக மாகவே செலுத்தினார். பஸ் முன்னால் பாய்ந்தது. அப்பொழுது ஒரு சிறு பையன் கால் எட்டாதவாகில், சைக்கிள் பெடலை மிதித்தபடி பஸ்ஸின் முன்னால் வந்தான். ரைவருக்கு என்ன செய்வது ஏது செய்வது என்று தெரியவில்லை. பஸ் வந்த வேகத்திலேயே நகர்ந்தது. சைக்கிளைச் செலுத்தி வந்த பெடியன் தரையில் சைக்கிளைத் தள்ளிவிட்டு விழுந்தான். அவனது சமயோசிதம் தான் அவனைக் காப்பாற்றியது. விழுந்தவன் நிலத்தோடு நிலமாக வீதியில் படுத்துக் கொண்டான். சிறிது தலையைத் தூக்கியிருந்தாலும் அவனது தலை சீவப்பட்டிருக்கும். தலை வேறு முண்டம் வேறு என்று கிடந்து அவன் துடித்திருப்பான். பஸ் அவனைக் கடந்து அப்பால் சென்றது. பையனைப்பார்த்தேன். அவன் எழுந்து பதட்டத்துடன் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க என்னை நோக்கி ஓடி வந்தான். அவனது முதுகைத் தடவி ஆசுவாசப்படுத்தி, நான் அவனது பதட்டம் தணியும் வகையில் குளிர் பானம் வாங்கிக் கொடுத்தேன். நன்றியுடன் என்னைப் பார்த் தவன் முழங்காலில் வழிந்த இரத்தத்தைத் துடைத்துக் கொண்டான். வீதியில் விழுந்ததால் அவனுக்கு உராய்வு ஏற்பட்டிருக்க வேண்டும். அங்கு நின்ற யாரோ ஒருவர் அவனது சைக்கிளைக் கொண்டு வந்து அவனிடம் தந்தார். சைக்கிள் ஹாண்டிலில் ஏற்பட்ட சிறு உடைவைத் தவிர ஓடக் கூடிய நிலையில் இருந்தது. அவனது கரங்களில் பத்து ரூபாய் நோட்டைத் தந்த நான் :

"ஏதாவது வாங்கிச் சாப்பிடடா..." கூறியபடி மாடவீதியை நோக்கி நடந்தேன். கபாலீஸ் வரரின் உயர்ந்த கோபுரம் தெரிந்தது. 'எல்லாமே இறைவனுடைய சித்தப்படிதான் நடக்கும். நமது கையில் எதுவும் இல்லை.' என்ற விசாரத்துடன் மனதைச் சமனப்படுத்தியபடி வீடு நோக்கி நடந்தேன்.

●

நடந்த இந்த விபத்துடன் எனக்குத் தொடர்புண்டு நான் ஒரு ஹொண்டா C50 மோட்டார் சைக்கிள் வாங்கி இருந்தேன். எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணத்துக்கு அது உதவியாக இருந்தது. ஆனாலும் சிறு சிறு விபத்துக்கள் நடக்கவே செய்தன. சைக்கிள் ஓடிய ஒரு சந்தர்ப்பத்தில் முடமாவடிச்சந்தியில் - ஆடிய பாதம் வீதியால் வந்த வாகனத்தைக் கண்டதும் திடீரென பிறேக் பிடித்தேன். எனது இடது கால் கால்வைக்கும் ரெஸ்ற்றின் முன்னால் இருந்ததால் சைக்கிளின் வேகம் காரணமாக பின்னங்காலின் தொங்கு தசையில் ரெஸ்ற் பலமாக அடித்து விட்டது இது போல இன்னும் சில...

இவ்விபத்துக்களுக்கெல்லாம் மகுடம் வைத்தது போல நல்லூரில் நடந்த விபத்து அமைந்தது. பருத்தித்துறை வீதியிலிருந்து பிரதேச செயலகத்துக்குச் செல்லும் ஒழுங்கையால் நான் திரும்ப வேண்டும். வீதி விளக்குகள் இல்லாமல் இருந்ததால் இருட்டாக இருந்தது. பின்னால் திரும்பிப் பார்த்தேன், விளக்கொளி எதுவும் தெரிய வில்லை. வாகனம் எதுவும் வரவில்லை என உறுதிப்படுத்திய படி, திடீரென ஒழுங்கைப்பக்கம் திரும்பினேன். பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் லைற் போடாது வந்திருக்க வேண்டும் அவர் எனது சைக்கிளுடன் படார் என மோதினார். சைக்கிளில் இருந்து வீசப்பட்ட நான் தெருவோரம் கிடந்தேன். தலைக்கவசம் கழன்று போய்த்தூரத்தில் கிடந்தது. சைக்கிளை நிமிர்த்தி எடுத்து ஒழுங்கைப்பக்கமாக உருட்டினேன். எனது சைக்கிளின் பக்கக் கண்ணாடிகளில் வலது பக்க கண்ணாடி உடைந்து போயிருந்தது. சைக்கிளுக்கு அதிக சேதராமில்லை ஆனால் என்னுடன் வந்து மோதியவர் பிலியனில் மனைவியை ஏற்றி வந்திருந்தார். அவரும் மனைவியும் எற்றுண்டு பக்கத்திலிருந்த சலூனின் வெளித்திண்ணை யில் மோதுண்டு கிடந்தனர். மனைவியை யும் அவரையும் பக்கத்தில் சென்ற யாரோ ஒருவர் தூக்கி விட்டார்.

நான் பதட்டப்படாமல் நிதானமாக நின்றேன். “ஸேர்..! இஞ்ச நிக்கவேண்டாம் பொலிஸ் அது இதெண்டு பிரச்சினை வந்தாலும் வரும்...”

“ஆரது எனக்குத் தெரிந்த பெடியனா...! என்னிடம் படித்தவனா”

மனம் அங்கலாய்த்தது.

நான் அவனது ஆலோசனையை வேதவாக்காக ஏற்றுக் கொண்டு சைக்கிளை “ஸ்ராட்” செய்து வண்டியில் தொற்றிக் கொண்டேன். அங்கு நின்றவர்கள் எவரும் நான் போவதைக் கவனிக்க வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த விபத்தின் போது எனக்குக் காயம் எதுவும் ஏற்பட வில்லை. ஆனால், அடிபட்டு விழுந்து கிடந்த மனிதருக்கும் அவரது மனைவிக்கும் காயம் ஏதாவது ஏற்பட்டிருக்குமா? பார்க்காமல் வந்துவிட்டோமே...!

எனது மனது பரிதவித்தது.

சில நாட்கள் குற்ற உணர்வுடனும் தவிப்புடனும் நான் நடமாடியது எனக்கு மட்டும் தான் தெரியும்.

நாட்கள் சில செல்ல விபத்து நடந்த இரவு ஆபத்தாண்டவ னாக உதவிய பையன் எனது வீடு வரை வந்து நலம் விசாரித்தான். அத்துடன் அவன் தந்த தகவல் பாரதூரமாக இருந்தது. அடிபட்ட வருக்கு இடது கையில் முறிவு ஏற்பட்டதாகக் கூறினான். மனைவிக்கு எதுவித காயமும் இல்லை என்பதையும் தெரிவித்தான்.

எனக்கு அவரையும் அவரது மனைவியையும் கண்டு நலம் விசாரிக்க வேண்டும் போலிருந்தது. ஆனால் அந்தச் சந்தர்ப்பம் எனக்கு எப்பொழுதும் கூடிவரவில்லை.

●

அந்த விபத்து நடந்த சமயம் எனது மனைவியும் சைக்கிளில் உடன் இருந்தார். பட்டணத்தில் இருந்து கஸ்தூரியார் வீதி வழியாக நாம் வீடு நோக்கிப் பயணித்தோம். கஸ்தூரியாரின் கட்டத்தில் உதயன் பணிமனை இருந்தது. அதன் தென்புறமாக அந்தக் கை ஒழுங்கை. கஸ்தூரியார் வீதியின் வடபுறமிருந்து இருவர் துவிச்சக்கர வண்டியில் வேகமாக வந்து கொண்டிருந்தார்கள். அதில் ஒருவர் பெண். வீதி ஒழுங்குகள் பற்றி அதிக அக்கறையில்லாதவளாக இருந்தாள். விபத்துக்கு அவளது அலட்சியம் ஒருவகையில் காரண மாக அமைந்தது.

அவளுடன் வந்த பெடியன் எங்களைக் கண்டதும் தனது வண்டியை மெதுவாகச் செலுத்தினான். ஆனால் அந்தப் பெண் சடுதியாக எனது சைக்கிளுக்கு முன்னால் பாய்ந்து, கை ஒழுங்கையில் திரும்பினாள். அந்தத் திடீர் நிகழ்வு என்னை அலக்க மலக்க வைத்தது. அவளது சைக்கிளின் பின் பகுதியில் எனது மோட்டார் சைக்கிளின் முன் சில்லுப்பட்டது. நானும் மனைவியும் சைக்கிளுடன் புரண் டோம். எனக்கு அடிபலமானதல்ல. ஆனால் எனது துணைவியின் இடது காலில் காயம் ஏற்பட்டது. காய்த்திலிருந்து இரத்தம் வடிந்தது. சைக்கிளில் வந்த பையன் எனது மோட்டார் சைக்கிளைத் தூக்கித் தந்ததுடன், சில ஆறுதல் வார்த்தைகளையும் உதிர்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆரந்தப் பெட்டை... கண்மண் தெரியாமல் ஓடுகிறாள். நிதானம் ஏதும் இல்லை...!" என்றேன்.

"அவ என்ரை சிநேகிதிதான். அவவின்ரை கவனக் குறைவுக்கு நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளிறன்."

"அவவின்ரை பிழைக்கு நீர் ஏன் மன்னிப்புக் கேட்கிறீர்." கேட்ட என்னைப் பார்த்து அந்தப் பையன் புன்சிரிப்புடன் விலகிச் சென்றான்.

மனைவியை நிமிர்ந்து பார்த்தேன். அவள் காலில் வடிந்த இரத்தத்தைத் துடைத்தபடி நின்றாள். மனைவிக்கு நீரிழிவு. இந்தக் காயம் அவளுக்கு தொந்தரவாக வந்து விடுமோ என்ற பயம் என்னுள் தொற்றிக் கொண்டது.

மனதில் நல்லூர்க் கந்தனின் கோபுரகலசம் காட்சி தர, முருகனை வணங்கியபடி மோட்டார் சைக்கிளை ஸ்ராட் செய்தேன். நிதானமாகச் செலுத்தினேன்.

மனைவியைத் திரும்பிப் பார்த்தேன். அவள் சிரித்தபடி. அந்தச் சிரிப்பில் தோயத்தோய நனைந்தபடி நான்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுதல்

கௌசியின் மனதில் ஏற்பட்ட தவிப்பு அடங்குவதாயில்லை. கலக்கத்துடன் நின்றவனுக்குக் கண்ணீர் அருவியாகச் சொரிந்தது. தனியனாக, தனித்துவிடப்பட்டவனாக, உணர்வழிந்த நிலையில் அவன்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத நிலையில், யாழிலுள்ள கல்லூரியில் தொடர்ந்து படிப்பதற்கு அவனுக்கு நாதன் மாமாதான் இடம் எடுத்துத்தந்தார். அனுமதிக் கட்டணத்தைக்கூட மாமாதான் செலுத்தினார் என்பது அவனுக்குத் தெரியும்.

அப்பா, அம்மா இருந்தபோதும் அவன் அத்தை வீட்டில்தான் இருக்கிறான். அத்தை கூட அப்பாவைப் போல அவனது படிப்பில் அதிக அக்கறை இல்லாமல் இருந்தாள். பாஸ்கரன் மாமாவுக்கு கவனித்துக்கொள்ள - இவனை விட வேறு சோலிகள் இருந்தன.

நாதன் மாமா இவனுக்கு உறவு என்றில்லை. இருப்பினும், அவரும் அன்ரியும் அவனது கல்வியில் ஏன் இவ்வளவு அக்கறைப்படுகிறார்கள்? அவனுக்கு அது புரியாமலிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று மட்டும் அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. அது அவர்களது இயல்பு என்பதுதான். எப்பொழுதும் அதை அவர்களால் மீறமுடிய வில்லை.

பாடசாலை இன்று ஆரம்பம். காலையிலேயே பாட சாலைக்குப் போவதற்கான ஆயத்தங்களுடன் இருந்தான். வெள்ளைச் சேர்ட்டும் கறுப்பு அரைக் காற்சட்டையும் தான் அவனது சீருடை. உடைகளை எடுத்து அணிந்துகொண்டான். தவிர்க்க முடியாமல் அன்ரியின் ஞாபகம் அவனுக்கு வந்தது. அன்ரிதான் துணிவாங்கி - அவளுக்குப் பழக்கமான ரெயிலரிடம் கொடுத்துத் தைத்து, உடுப்புகளை இவனுக்கு வாங்கித்தந்தாள்.

சீருடையை அணிந்துகொண்டதும் - கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண்டான். காற்சட்டையும் சேர்ட்டும் அவனுக்குக் கச்சிதமாக இருந்தது. தலை சிலும்பிக் கிடந்தது. சீப்பை எடுத்துத் தலையை வாரிக்கொண்டான். முகத்துக்குச் சாதுவாய் பவுடர் கூடப் பூசிக்கொண்டான்.

'பாடசாலைக்கு எப்படிப் போவது... யாருடன் போவது...?' எல்லாமே அவனுக்குத் திகைப்பாக இருந்தது. அத்தையிடம் ஒரு ஐந்து ரூபாய் வாங்கிக்கொண்டான். அவன் கையில் மூன்று ரூபாய் இருந்தது. எட்டு ரூபாவையும் சேர்ட்டுப் பொக்கற்றில் பத்திரமாக வைத்துக்கொண்டான்.

வெளியே வந்தவன், அன்ரிக்குக் குரல் கொடுத்தான்: "மாமா எங்க...? பள்ளிக்கூடம் போக வேணும்...!"

"அப்பு ! மாமா திருநெல்வேலிப் பக்கம் போயிருக்கிறார். வர நேரமாகும்."

"உன்ரை மாமா பாஸ்கரன் எங்க...?"

"கொடிகாமத்துக்கு. லாண்ட் மாஸ்டரிலை போனவர். தேங்காய் ஏத்த...!"

"அப்ப நீ எப்படி ஸ்கூலுக்குப் போகப்போறை..."

"பஸ்ஸில..."

"இடம் தெரியுமா...?"

"போய்... ரவுணில இறங்கி, விசாரிச்சுப் போவன்.."

"சரி அப்பு...! பத்திரமாப் போயிற்றுவா..."

நல்லூரடிக்கு நடந்து வந்தவன், பஸ்ஸுக்காகத் தரிப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருந்தான்.

சனநெரிசலுடன் மினிபஸ் ஒன்று வந்தது. அவன் மறித்துப் பார்த்தான். அவனை மதிக்காமலே பஸ் அவனைக் கடந்து சென்றது. மிகுந்த ஏமாற்றத்துடன் அதையே பார்த்தபடி நின்றான். அரை மணி நேரத்தின் பின்னர் ஒரு போக்குவரத்துச் சபை பஸ் வந்தது. இடம் இருந்ததால் பஸ்ஸில் தொற்றிக் கொண்டான். முன்னர் அவன் பட்டணம் போனது கிடையாது...! புதினம் பார்த்தபடி, பஸ்ஸின் கோர்ணர் சீற்றில் உட்கார்ந்து கொண்டான். அவனுக்கு மிகவும் பரிச்சயமான வீரமாகாளி அம்மன் ஆலயத்தைக் கடந்த பஸ், ஆனைப்பந்தியில் தரித்தது. ஒரு சிலர் இறங்கினார்கள். “ஆனைப்பந்தி இறங்கு... ஆனைப்பந்தி இறங்கு...” என்ற பஸ் நடத்துநரின் குரலை வைத்துத்தான் அது ஆனைப்பந்தி என்பதை அவன் அறிந்து கொண்டான். அடுத்த தரிப்பு ஆரியகுளச்சந்தி என்பதை அவனுக்கு அருகில் இருந்தவர் கூறத் தெரிந்துகொண்டான்.

வீதிக்குக் கிழக்காக பச்சைப்பசேலென்ற நீர்ப்பரப்புடன் இருந்த குளத்தை விடுத்து விடுத்துப் பார்த்தான். பச்சைச் சிறு தாவரங்களின் அடர்த்தியாலா அப்படி ஒரு தோற்றம்! அது மட்டுமா...? அங்கொன்று இங்கொன்றாக நீரின் மேலாகத் தாமரை மொட்டுக்கள், வெள்ளையும் சிவப்புமாக...

ஆஸ்பத்திரி வீதியால் திரும்பிய பஸ் பட்டணத்தைத் தொட்டு, பஸ் நிலையத்தில் தரித்தது. அவன் இறங்கிக் கொண்டான். காட்டில் விட்டது போலத் திசை தெரியாத குழப்பம் அவனுக்கு!

அவனுக்கு முன்னால் சில பாடசாலைப் பிள்ளைகள். அவர்களைப் பார்த்து அவன் கேட்டான் : “கல்லூரி எங்க இருக்கு...?” ஒரு பையன் மட்டும் திரும்பி, இவனைப் பார்த்து ஏதோ சொன்னான். அவன் கூறிய விபரத்தைப் புரிந்து கொண்டவன், ஆஸ்பத்திரிப் பக்கமாக மீளவும் வந்தான். ‘கார்கில்ஸ்’ அங்காடிப் பக்கமாக வந்தவன், அவனைக் கவர்ந்திழுத்த படமாளிகைகளைப் பார்த்தான்.

பிளாட்டினம் தியேட்டரில் ரஜினியின் எந்திரன் படம் ஓடிக்கொண்டிருந்தது. ரஜினியை நிலைக்குத்தி நின்ற நிலையில் சில நிமிடங்கள் பார்த்தான். அசையாமல் நின்றவன், ரஜினிக்கு அருகாக நின்ற நடிகையைப் பார்த்தான். அந்த அப்ஸரசின் அழகு அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. தேவதை போல் நின்ற அந்த நடிகை யாரென்று அவனுக்குத் தெரியவில்லை. அவளையே விழியகற்றாமல் பார்த்தபடி நின்றவன், பாஸ்கரன் மாமாவுடன் இந்தப் படத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேணும் என நினைத்துக் கொண்டான்.

மணிக்கூட்டு வீதியைக் கண்டதும் வீதியில் இறங்கினான். தொலைவாக மணிக்கூட்டுக் கோபுரம் இருப்பது அவனுக்குத் தெரிந்தது. அதை நோக்கி விரைந்து நடந்தான். மணிக்கூடுகள் ஓடவில்லை. 'ஏன் ஓடாத மணிக்கூடு, அதை இடித்துச் சரித்து விடலாமா...?' அவனது மனசு துருதுருத்தது. நினைப்பே லேசான சிரிப்பை அவனுக்குத் தந்தது.

மணிக்கூட்டுச் சந்தியிலிருந்து சற்று மேற்காகச் சரிந்தவன், தெற்குப் பார்த்து நடந்தான். 'வீதியின் மேற்குச் சாய்வில் இருக்கும் இந்தக் கட்டடம் என்ன...?' நினைவுகளோடு கட்டடத்தின் முன்னாலுள்ள சரஸ்வதி சிலையைப் பார்த்தபடி நின்றான்.

"எனக்குப் படிப்புத்தா அம்மா...!" என்று கும்பிட்டான். கட்டடத்தின் உள்ளே போக விரும்பியவன் மனமாற்றம் கொண்டு, நேர் கிழக்கில் திரும்பினான்.

வீதியின் தெற்குச் சாய்வில் அந்தப் பூங்கா இருந்தது. பூங்காவில் நுழைந்ததும் இரு சிட்டுக்குருவிகள், சொண்டை உரசி உரசி காதல் செய்வதைக் கவனித்தான். தேன் சிட்டொன்று தனது நீண்ட கூரிய அலகால் செம்மை படர்ந்த பூவொன்றில் மதுவம் அருந்தி, மயங்குவதைக் கண்டான். இன்னும் புளினி, நாகணவாய், கிளிகள் எனச் சில பறவைகளைப் பார்த்தான்.

விதம்விதமான பூமரங்களும் அவற்றின் பூக்களும் அவனை மயக்கின. மிகுந்த ஆசையோடு, மலரொன்றைக் கொய்யப்போன பொழுது, அங்கு நின்ற காவலாளி, "பிடுங்காதை...!" என்று உரப்பி இவனை நடுநடுங்க வைத்தான். வந்த வேலையை மறந்தவனாய் பூங்காவிலேயே சில மணித்துளிகள் இருந்தான்.

வெளியே வந்தவன், வீதியால் நடந்து, வடக்குப் பக்கமாகத் திரும்பினான். கல்லூரியின் பெயர் ஆங்கிலத்திலும் தமிழிலும் இருப்பதைக் கண்டான். கல்லூரியினுள் நுழைந்தான்.

"மணி பத்து இருக்குமா...?" நினைத்தபடி கல்லூரிக் கேற்றைத் திறந்து உள்ளே சென்றான். அலுவலகம் பக்கத்திலேயே இருந்தது. அருகாக அதிபர் அறை. அலுவலகத்திலிருந்த லிகிதரிடம் "ஆறாம் வகுப்பு "B"பிரிவுக்கு எப்படிப் போறது...?" என்று கேட்டான்.

வெளியே வந்த லிகிதர், "என்ன இவ்வளவு லேற்றாய் வகுப்புக்கு வந்திருக்கிற... இந்தத் தாவாரத்தால போய், திரும்பினால் இரண்டாவதாக வரும் வகுப்புத்தான் 6 B..." என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் நிதானமாக நடந்து, அவனது வகுப்பறையை அடைந்தபோது - கீழ்ப்பிரிவின் பகுதித் தலைவர், ஆசிரியர் பால சுப்பிரமணியம் அவனைப் பார்த்துக் கர்ச்சித்தார், 'அட சிங்கம் எப்படி இங்கு...' என்று அவன் குழப்பிப்போனான். திடீரென அவர் கையில் வைத்திருந்த பிரம்பால் அவனைப் பளீர் பளீர் என விளாசினார். அவன் திகைத்துப்போய் செய்வதறியாது நின்றான். வினாடிக்கு ஒன்பது, பத்து அடி வீதம் - அவனது முதுகு, முகம், கண், முன்புறம், பின்புறம், பிருஷ்டம் என்று எல்லா இடங்களிலும் விழுந்தது. அடித்தவர், "ஏன்ரா லேற்..." என்று கேட்கவும் செய்தார்.

அவன் அழுதபடி: "நான் புதிசா அனுமதி பெற்றவன்... பாடசாலை இருக்கிற இடம் தெரியாமல் அலைந்து திரிஞ்சதால லேற்றாப் போச்சு... மன்னியுங்க ஸேர்...!" என்று கூறினான்.

அவர் அடித்த இடங்களில் இரத்தக் கண்டல் கண்டிருந்தது. சில இடங்களில் லேசாக இரத்தக்கசிவு வேறிருந்தது.

நாதன் மாமா அவன் பாடசாலைக்குப் போய்விட்டான் என்பதை அறிந்து, அரக்கப் பரக்கப் பாடசாலைப் பக்கம் வந்தார். வந்தவர், அவனது வகுப்பறையை, அலுவலகத்தில் விசாரித்து அறிந்து அங்கு விரைந்தார். பகுதித் தலைவரின் பிரம்படிப்பட்டு இரத்த விளாருடன் நின்ற அவனைக்கண்டு பதைபதைத்து "என்ன... என்ன நடந்தது?" என்று கேட்டார்.

அவன் விக்கித்துப்போய் நின்றான். விபரம் முழுவதையும் வகுப்பில் இருந்த ஆசிரியர் கூற, அவனை அழைத்துக் கொண்டு அதிபர் அறைக்கு அவர் சென்றார். அதிபர் அவருக்கு நன்கு பரிச்சய மானவர். மாமா அதிபரைக் கண்டதும் கேட்டார்: "இதென்ன ஸேர்... சின்னப் பிள்ளையை இப்படியா அசுரத்தனமா அடிக்கிறது..." "நான் பகுதித் தலைவரிடம் இதுபற்றிக் கதைக்கிறன். இது முரட்டுத்தனம் தான் எனக்குத் தெரியுது..."

அதிபரின் பதிலால் திருப்திப்படாத நாதன், பகுதித் தலைவரிடம் சென்றார். பகுதித் தலைவர் முகம் கறுத்தவராய் நாதனையும் கௌசியையும் மாறி மாறிப் பார்த்தார். மன்னிப்புக் கோரும் மனோநிலையில் அவர் இருந்தது போலத் தெரிந்தது.

"ஏதோ வேகம்... தெரியாமல் செய்துபோட்டன். மன்னியுங்க..." என்று கூறியதுடன் கௌசியை இழுத்து அணைத்த படி: "ஸொரியடா...! இனிமேல் நேரத்துக்கு வகுப்புக்கு வரப்பார்...!" என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதனுக்கு என்ன செய்வது ஏது செய்வதென்று தெரிய வில்லை. கௌசியை அணைத்தபடி, "இண்டைக்குப் படிச்சதெல்லாம் போதும் வாப்பு..." என்று கூறியவராய் அவனுடன் வெளியே நடந்தார்.

நெகிழ்ந்துபோன கௌசிக்கு வெதவெதப்பான நாதன் மாமாவின் தொடுகை இதமாக இருந்தது. தொடுகையின் மூலம் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள முடியுமா? அவர்களால் அது முடிந்தது. கண்களில் இருந்து கருணை கசிந்து பரவ மாமா அவனைப் பார்த்தார். கௌசி, மாமாவை அணைந்து நடந்தான். அவர் மீதான அவனது பிரியம் அவனது கண்களில் குளிர்ச்சியாய் வழிந்தது.

மாமாவின் மோட்டார் சைக்கிளில் தொற்றிக்கொண்ட கௌசி அவரை இருகைகளாலும் இறுகப் பற்றிக்கொண்டான். அது அவனுக்கு ஆறுதல் தருவதாயிருந்தது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவும் பொழுதுகள்

இரவு வானம் பட்டுக் கருநீலப் படுதா வைப் போர்த்திக் கிடந்தது. வைரச்சிதறல்களாக நட்சத்திரங்கள் ஒளிர்ந்தன. அந்த மோன நிலையில் அவளுக்கு அவனது நினைவுகள் நெஞ்சைத் தொட்டு நீவியவாறு இருந்தது. லேசான துயர ரேகைகளின் அழுத்தம் வேறு. திடீரென அவள் சிறிது சிரித்துக் கொண்டாள். இப்பொழுதெல்லாம் இயல்பாகவே அவனைப் பற்றிய நினைவுகள் அடிக்கடி அவளுக்கு வருகிறது. அதனை அடுத்துச் சலிப்பேதுமில்லாத அந்தச்சிரிப்பு.

'பத்து வருஷங்கள் இருக்குமா...? அவன் என்னை விட்டுப்பிரிந்து போய்... இன்னும் சற்றுக்கூடுதலாகக் கூட இருக்கலாம்!'

•

அவனது இயல்புகள் அற்புதமானவை. அவன் போகுமிடமெல்லாம் நல்லதே நடந்தது. அவனும் நல்லதையே எப்பொழுதும் செய்தான். அவனைச் சூழ உள்ள நறுமணம் அவளைச் சொக்க வைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடை மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. சாரலில் நனைவதற்கு அவன் விரும்பிய போதும் அம்மாவுக்குப் பயந்து அவன் வெளியே வரவில்லை.

மழை சிறிது ஓய்ந்து வெளிப்புக் காட்டியது. ராஜியையும் இழுத்துக்கொண்டு அவன் நவக்கை வயற் பரப்பை நோக்கி நடந்தான்.

முன்னொரு சமயம் ராஜி கேட்டது அவனுக்கு அப்பொழுது ஞாபகம் வந்தது:

"மழை வந்தால்... வயலில, காட்டுச் செவ்வந்திச் செடி களுக்குக் கீழாக உள்ள சப்பட்டைக் குருவிக் கூடுகள் தப்புமா...? முட்டையளும் குஞ்சு களும் நீரில் மிதக்குமெல்லா...?"

அதற்கு "ம்..." சொன்னது அவனுக்கு ஞாபகம் வந்தது.

வயற்பரப்பை அடைந்த போது மழைவெள்ளம் வயல்களை முழுமையாக நிரப்பி இருந்தது. நீர் தள தளத்தது.

நெடுமூச்செறிந்தபடி நகர்ந்த அவனது கரங்களைப் பற்றியபடி அவளும் நடந்தாள்.

தெற்குப் பார்த்திருந்த வயல்கள் சற்று மேட்டுப் பாங்காக இருந்தன. நீரை ஊடறுத்து நடந்து சென்றவர்கள், குருவிக்கூடுகளை யும் குஞ்சுகளையும் கண்டார்கள். குஞ்சுகள் நீரில் மிதந்தபடி...

"முட்டையளுக்கு என்ன நடந்திருக்கும்?" ராஜி தான் கேட்டாள்.

"முட்டையள் வெள்ளநீரிலை தாண்டிருக்கும்...!"

கூறியவன்,

அங்கு தத்தளித்தபடி மிதந்த குஞ்சுகளையும் கூடுகளையும் வாரி எடுத்து, மேட்டு வயல்களை நோக்கி நகர்ந்தான். கூடவே பதகளிப்புடன் ராஜியும்.

உயரமான வயல்களாகப் பார்த்துக் காட்டுச் செவ்வந்திச் செடிகளுக்குக் கீழாக கூடுகளைப் பொதித்து, குஞ்சுகளை அவற்றில் பாதுகாப்பாக விட்டான்.

"காப்பாத்தின அளவுக்கு மிச்சம்..."

"இவை தப்புமா டா...?"

"தப்பும்.. கடவுள் காப்பாற்றுவார்...!"

"நாம் அவையளுக்காகப்பட்ட வேம்பானைக் கும்பிடுவம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்..."

வயற்தடங்களைக் கடந்து, தீத்தாங் கூடல் பக்கமாக இருவரும் நகர்ந்தார்கள்.

"மரத்தில் கூடுகட்டியிருப்பதால் மணிப் புறாக்கள் தப்பியிருக்கும்!"

"மழையோட காத்தடிச்சதால அதுகளின்ரை கூடுகளும் சேதாரப்பட்டிருக்கும்..."

கூறிய ராஜி "அங்க பாரடா...! அந்த நாக தாளிப் பற்றையில கூடொண்டு தொங்குது!"

நிமிர்ந்து பார்த்த அவன், அதை... அந்தக் கூட்டை நோக்கி ஓடினான்.

கூடு ஓரளவு சிதைவடைந்திருந்த போதும் - குஞ்சுகள் அதில் பத்திரமாக இருந்தன. இரண்டு குஞ்சுகள் தோலிகளாய்...

கூட்டையும் குஞ்சுகளையும் ராஜியிடம் தந்தவன், "பத்திர மாய் வைத்திரு..!" என்று கூறியபடி, பக்கத்தில் உள்ள பூவரச மரத்தில் ஏறி, கூடு இருந்ததுக் கான தடயங்களைத் தேடினான். பிய்ந்த கூட்டின் தும்பும் துராலும் ஒரு கவர்த்தடியில் ஒட்டி இருப்பதை அவதானித் தான்.

மரத்திலிருந்து இறங்கியவன், ராஜியின் கைகளில் இருந்த கூட்டையும் குஞ்சுகளையும் பெற்று, மரத்தில் தொத்தி, கூடு இருந்த அதே இடத்தில் மீளவும் வைத்தான்.

மனத்திருப்தி அடைந்த அவன், ராஜியின் வலது கரத்தைப் பற்றியவனாய் வீடு பார்த்து நடந்தான்.

வீடு போனதும் ராஜி அவனது வலது கரத்தை எடுத்து முத்தமிட்டாள்.

"ஏன் இது...!" வியப்புடன் அவளைப் பார்த்தான்.

"செல்வா... உன்னிலை எனக்குச் சரியான விருப்பமடா... என்னை மறந்திடாத..."

"ஏன் விருப்பம்..!"

"விருப்பமெண்டால் விருப்பம் தான். நீ அச்சாப்பிள்ளை... உன்னாலை நல்லதையே பார்க்க முடியுது. செய்ய முடியுது. அன்பும் இரக்கமும் உனது சொத்தடா...!"

"நீயும் அப்படித்தான், அசல்பெட்டை.."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அசலா..உண்மையா...?”

கண்கள் உட்செருக உதட்டில் மலர்ச்சியை ஏந்தியவாறு அவள் சிரித்தாள்.

அவளது சிரிப்பு அவனை ஈர்த்தது. சற்று உற்சாகமடைந்த அவன் அவளது உதடுகளை ஆர்வத்துடன் ஸ்பரிசித்தான்.

“ம்...இதெல்லாம் வேண்டாம்...கூடாது...!”

அப்பொழுது அவளது வளர்ப்புச் செல்லம் - ரொமி அவனைப் பார்த்ததும் பாய்ந்து வந்தது. அதனை வாரி எடுத்து மடியில் போட்டுக் கொண்டான். குட்டிக்குக் கொண்டு வந்திருந்த பணிஸைச் சிறுசிறு துண்டுகளாகப் பிய்த்துப் போட்டான், அது உண்பதற்கு.

ரொமி அவனது மடியிலிருந்து இறங்கி, ஆர்வத்துடன் துண்டுகளை அவக் அவக்கென்று கவ்வி விழுங்கியது.

“இது சரியான அப்புலோதியடா... தின்னிற வேகத்தைப் பார்!”

“ராஜி அப்படிச் சொல்லாதையடி... குட்டி பாவம்.”

“ம்...”

●

திடீரென அவன் காணாமல் போய்விட்டது அவளுக்குப் பெரிய பரிதவிப்பை ஏற்படுத்தியது. அத்துடன் ஏமாற்றம் தருவதா யும் இருந்தது. அவனது வீடு வரை சென்றவள்; அவன் நின்ற இடம் பார்த்த இடம் சுவைபட கதை பகிர்ந்த இடமென்று எல்லா வற்றையும் தேடித் தேடிப் பார்த்து மறுகினாள்.

அன்பு மயமான அந்தச் செல்வனை இழந்து விட்டதான தவிப்பு, வாழ்க்கை பரியந்தம் இனி இருக்கும் என அவள் தவித்தாள்.

மன ஓரங்களை தொட்டு உசுப்பிய அவனது நினைவுகள் அவளைப் பிழிந்தெடுத்தது.

‘யாரிடம் போவது. யாரிடம் கேட்பது’ குழம்பியவள் அம்மாவிடம் கேட்டுப் பார்த்தாள்.

அதற்கு அம்மா, “அவன்ரை அப்பா தபாலதிபர், இடமாற்றம் பெற்றுப் போனதால அவனும் போயிருக்க வேணும்..” என்றாள்.

“எந்த ஊரராம்...?” அவளது கேள்விக்கு அம்மாவால் பதில் தர முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால நகர்வில் அவள் பலதை மறந்த போதும் அவனை மட்டும் அவளால் மறக்கமுடியவில்லை.

யாழ்.பல்கலைக்கழகத்தில், கலைப்பிரிவில் சேர்ந்து, முதலாம் ஆண்டு பயின்று கொண்டிருந்த சமயம் பரிச்சயமான அந்த முகத்தைக் கண்டாள். இளமையில் மனதில் பதியமிடப்பட்டுவிட்ட முகம். மறந்து போகுமா..? இடது கன்னத்தில், கண்ணுக்குக் கீழாக, சிறு பொட்டாக இருந்த அந்த மச்சம் அவளுக்கு அவனை இனம் காட்டியது. அவனது பெரிய கண்கள் அடர்ந்த புருவங்கள், படபடக்கும் இமைகள் என்று எல்லாமே அவளை முன்னரும் இப்பொழுதும் ஈர்ப்பவை.

கிட்டவாக வந்தவள் - அவனது அரும்பு மீசையைத் தொட்டுத் தடவ விரும்பினாள்.

நெருக்கத்தில் அவனது மூச்சுக்காற்று அவளில் பட்டது. புல்லரித்தவள், "செல்வம்" என்று பிரியமாக அவனை அழைத்தாள். அவளது குரல் அவளுக்கே கேட்காத மாதிரி மென்மையுடன் ஒலித்தது.

கண்களை அகலவிரித்தவன் "என்ரை ராஜிதான..!" என அவளைப் பார்த்து விழித்தான்.

என்ரை ராஜி என்ற அவனது அழைப்பு அவளுக்கு நிரம்பப்பிடித்திருந்தது.

பட்சமாகப் பார்த்தபடி மௌனித்து நின்றவளுக்கு அவனது கண்களில் படர்ந்த ஒளி ஏதேதோ சொல்லியது.

அவள் லேசாக முறுவலிப்பது போலிருக்கவே, அவளை நெருங்கி வந்தான்.

அவளது கண்களில் ஒளிர்ந்த குளிர்மை, நிதானம், உதடுகளில் நிலைத்து விட்ட அந்தக் குறுநகை எல்லாமே அவனைப் பைத்திய மாக்கியது.

"சின்னனில மட்டுமில்ல.. இப்பையும் நல்ல வடிவா நீ இருக்கிறை...!"

"ஓ!...அப்பிடியா...? பிடிச்சிருக்கா...?"

"உன்னையும்!.."

"உன்னையுமா...?" அவள் குழம்பினாள்.

"என்ரை பாச்மேற் மலர் கூட வடிவு... அவளின்ரை நினைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திட்டுது"

ராஜிக்கு கண்கள் பனித்துவிட்டன. அவள் மறு பக்கமாகத் திரும்பிக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"இண்டைக்குத் தான் யூனிவேர்சிற்றிப் பக்கம் வந்ததா...?"

"ம்..."

"Ragging ஏதுமில்லை...?"

"Ragging செய்த அண்ணை எங்க ஊராள்... அதால லேசா ஏதேதோ செய்யெண்டு உறுக்கிப் போட்டு விட்டிட்டார்..."

"ஸோ யூ ஆர் லக்கி.. நீ கலைப்பிரிவு தான...?"

"ம்..."

"நான் கணிதம். இரண்டாம் வருஷம்..."

●

ராஜிக்கு மலரைப் பிடித்திருந்தது. அது எதனால்..? அவள் அழகாக இருந்ததாலா...? அவள் நடந்து வரும் போது ஒரு நளினம் இருந்தது. ஒரு நர்த்தனம் இருந்தது. தோகை மயிலின் சோபிதத்தை அவளால் எந்தச் சந்தர்ப்பத்திலும் வழிய விட முடிந்தது. ஆனால், அவளது உளப்பாங்கு விகற்பங்கங்கள் மிகுந்ததாக இருந்தது. செல்வத்துடன் மட்டுமல்ல அவளது பிரிவு மாணவர்கள் அனைவருடனும் அவளால் நன்கு பழக, இணைந்து போக முடிந்தது. அம்மாணவர்களிடம் இருந்து பெறும் பயன்கள் அனைத்தையும் தனது கல்விக்கு அடியுரமாகப் பயன்படுத்திக் கொள்வதில் அவள் படுசமர்த்தாக இருந்தாள். செல்வத்துடன் பழகுவது கூட கல்வி நிலைப்பட்டது தான் என்பதை ராஜி உணர்ந்து கொள்ளவே செய்தாள்.

தளையத் தளைய இளம் வாழை போல வளர்ந்திருந்த அவள்-குளிர்ச்சியான பெரிய கண்களையும் கனிந்த இளம் நுங்காய்த் தளதளக்கும் உதடுகளையும் பிடித்துப் பிடித்து வைத்தது போன்ற நாசியையும் - நீண்ட கழுத்து, சிறிய மார்பகங்கள், பிருஷ்டத்தை தடவும் கூந்தல் என எல்லாமே அவளிடம் இருந்தன. அள்ளி எடுத்து மடியில் பத்திரப்படுத்தக் கூடிய அழகு அவளிடம் இருந்தது. இருப்பினும் அவள் Flirt அல்ல என்பது தெரிகிறது. ஆனால், குடும்பப் பாங்கான நளினமும் நாசுக்கும் அவளிடம் துளியும் இல்லை என்று துணிந்து கூறிவிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அனைத்தையும் கவனம் கொண்ட ராஜிக்கு செல்வம் தன்னை மீறிப்போய்விட மாட்டான் என்ற நம்பிக்கை முழுமையாக இருந்தது.

மலருடன் பேசமுடியும் பழகமுடியும் ஆனால் காதல் வசப் பட்டுக் கசிந்துருக முடியாது என்பது செல்வத்துக்குத் தெரிந் திருந்தது.

ஒரு சமயம் ராஜியைத் தனியாகச் சந்தித்த செல்வம் அவளைப் பார்த்துக் கேட்டான்:

"குட்டி...! டிகிறி முடிஞ்சதும் நாம சடங்கு செய்து கொள்ளலாமா...?"

நாணம் மிகுந்த நிலையில், முகத்தில் செம்மை படர ராஜி "ம்.." என்று சம்மதம் தெரிவித்தாள்.

"எதுக்கும் ஒரு தரம் அம்மாவையும் அப்பா வையும் கேட்டு அவையின்ரை சம்மதத்துடன் இது நடந்தால் எனக்குச் சந்தோஷம்..." - இது ராஜி..

"நானும் கேக்க வேணும்.. அதோட 'ஸ்பெஷல்' செய்யிற விருப்பம் எனக்கு இருக்கு..."

"மிஞ்சி மிஞ்சிப் போனால் இன்னும் மூண்டு வருஷம் தான... காத்திருக்க என்னால முடியும்."

"குட்... பின்னேரமா என்ரை ரூமுக்கு வாவன் கதைப்பம்..."

"வருவன்ரா சேட்டை ஒண்டும் விடக் கூடாது..." சிரித்தபடி கூறினாள்.

"என்ன பெரிய சேட்டை! தொட்டுப் பாப்பன்... ஆசையாக் கொஞ்சுவன் அவ்வளவு தான்!"

"அதெல்லாம் இப்ப வேண்டாம்.."

"சரி சரி எல்லாமே என்ரை தேவதையின் விருப்பப் படி தான் நடக்கும்"

●

இரண்டு நாள் கழித்து ராஜி செல்வத்தின் அறைக்குப் போவதற்கு உத்தேசித்தாள். மாலை ஆறு மணிக்கு மேல் குமாரசாமி வீதியில் இருந்த அவனது அறையை நோக்கி நடந்தாள். மழை மூட்டம். லேசான தூறல். அதை அவள் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. மெதுவாக நடந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் செல்வத்தின் அறையை அடைந்த பொழுது... அவன் அறையில் தான் இருந்தான்; கணணிக்கு முன்பாக. அவளைக் கண்டதும் குதூகலனாய் எழுந்தவன், பூரிப்புடன் அவளை வரவேற்றான்.

உள்ளாக வந்தவளை, கைகளில் தாங்கியவாறு அழைத்து வந்தான். அருகாக இருந்த கதிரையை இழுத்துப் போட்டான். அதில் அவள் அமர்ந்து கொண்டாள்.

மங்கலான லைற் வெளிச்சத்தில், அறை சொர்க்க புரி போல இருந்தது. ஜன்னல் சேலைகள், கதவுத்திரைச்சேலை என்று எல்லாமே இள நீலத்தில் அழகாக இருந்தன. அவனது மேசை மிக நேர்த்தியாக புத்தகங்கள் அடுக்கப்பட்ட நிலையில் இருந்தது... கட்டில் விரிப்பு, தலையணை உறைகள் இளம் பழுப்பு நிறத்தில் அழகாக இருந்தன.

“என்ரை பிள்ளை... எதையும் ரசனையோடு தான் செய்வார் போல...”

“பிள்ளையா...”

“என்ரை செல்வா...”

“போடி..!”

“அது சரி படிப்பெல்லாம் எப்படிப் போகுது...?”

“உன்ரை நினைவுகளோட அதுவும் நடக்குது.. மூண்டு வருஷம்தான... சடக்கென ஓடியிடும் ராஜி...”

“ம்...சட்டெண்டோ, டக்கெண்டோ போகட்டும் போனால் சரி.”

“ரீ...”

கேட்டவன், ஃப்பிளாஸ்கில் இருந்த ரீயை வார்த்து அவளிடம் தந்தான்.

அவள் குடிப்பதையே ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்த வன் அவளது உதடுகளில் வழிந்த ரீயைத் துடைத்து விட்டான்.

“என்னடா இது...” என்றவள் அவனது கரத்தைத் தட்டி விட்டாள்.

அவளை ஆர்வத்துடன் நிமிர்ந்து பார்த்தவன், சற்றுக் குனிந்து தனது விரல்களால் அவளது உதடுகளை வருடினான்.

“ம்...ம்...இதெல்லாம் வேண்டாம்..”

“ஏன்...ஏன்...?” என்றபடி அவளையே பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது அவள் எதற்கும் தயாரானது போல எழுந்து நின்றாள்.

அவளது கோலத்தைக் கண்டதும் அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. குலுங்கிச் சிரித்தவன், "என்ன பெட்டை எதுக்கும் ever ready யாப் போஸ் குடுக்கிற..."

"இல்ல... இல்ல... சும்மா... இரடா...!"

"இதெல்லாம் வேண்டாமெண்டால் பின்ன எதுவேணும்?"

நெருங்கி வந்தவன். அவளது கழுத்தில் தனது கரங்களைத் தவழ விட்டு, அவளது முகத்தைத் தனது முகத்துக்கு நேராக இழுத்து வைத்து அவளது உதடுகளில் முத்தமிட்டான்.

சிறிது மலர்ந்தவள், மென்மையாக "உன்ரை பல்லூறல் கூட இனிக்குதடா..!" என்றாள்

"அப்படியா...?" என்று இன்னும் நெருக்கமாக வந்தவனைப் பார்த்து:

"போதும்... போதுமடா இதெல்லாம்... இப்ப வேண்டாமே" என்று கூறியவள் ஒதுங்கிக் கொண்டாள்.

ஸொரி ராஜி இதெல்லாம் வேண்டாம் தான்.. மனசைக் கட்டுப்படுத்திக்கொண்டு, நாம படிச்சு பாஸ் பண்ண வேணும்..."

"பாஸ் பண்ணி, உத்தியோகம் அது இதெண்டு போக வேணும்..."

ராஜி கூறியதை ஆமோதிப்பது போல அவனும் குரல் கொடுத்தான்.

காலம் விரைந்து கரைய வேண்டும் என்ற எதிர் பார்ப்பு அவர்கள் இருவருக்கும் அப்பொழுது இருக்கவே செய்தது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
27 JAN 2021
மாநகர நூலகம்
யாழ்ப்பாணம்

# தனியன்கள்

இளங்காலை. காற்றில் கனத்துக் கிடந்த ஈரம் பட்டதும் அவள் புரண்டு படுத்தாள். எங்கோ தூரத்தில் ஒற்றையாய் ஒலித்த பெயர் தெரியாத பறவையின் குரல் அவளை விழிப்புக் கொள்ள வைத்தது. பறவையின் குரலில் இழைந்த விரகம் பூசிய துயரம் அவளைத் தொட்டது. விலகிக் கிடந்த மார்புச் சேலையைச் சரி செய்தபடி எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

சிவலிங்கத்தின் நினைவு சிலநாட்களாக அவளை மிகுந்த பாடுபடுத்துகிறது. தொந்தரவு செய்கிறது.

பாலியத்திலிருந்து இன்றுவரை, பக்கத்து வீட்டில் வளர்ந்து வரும் அவனில் விழுந்த பார்வையை அவளால் அகற்ற முடியவில்லை.

சில காலமாக, அவனைப் பற்றி ஊர் பேசும் அபவாதங்களை அவள் கேட்ட போதும் அவற்றை அவள் அதிகம் நம்பவில்லை. சில சில்மிஷங்களையும் சேட்டைகளையும் அவன் அரங்கேற்றிய போதும், கைக்கு அடக்கமாகவே அவன் வளர்ந்து வந்தான். அவனது தாய் உயிரோடு இருந்த போதும், பின்னர் காலமாகி

13401 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமலான போதும் தறிகெட்டுத் திரிந்த அவனை ஓரளவு நிதானப்படுத்தி, வழிநடத்தியதெல்லாம் இவளுடைய ஆச்சி தான்.

மீசை அரும்பி, திடகாத்திரமாக அவன் - நல்லது கெட்டது கொண்ட கலவையாக - நிமிர்ந்த போது, இயல்பாக அவனது பார்வையில் தழையும் ஆதுரமும் கனிவும், ஓடிவந்து உதவும் தன்மையும் தடைபட்ட சந்தர்ப்பம் ஏதும் இல்லை என்றுதான் அவளுக்குத் தோன்றியது.

“மங்களம்.!” என்று அவன் அழைக்கும் போது அதில் கரைந்து வழியும் காதலின் சொத சொதப்பை அவள் நன்றாகவே தெரிந்து வைத்திருந்தாள். அப்பொழுதெல்லாம்... ‘இவன் எனக்கு... எனக்கு, மட்டுமே பிறந்தவன்,’ என அவள் நினைத்துக் கொள்வாள்.

அவனது நினைவுகளில் இருந்து விடுபட்ட அவள், எழுந்து பாயையும் தலையணையையும் சுருட்டிப் பக்கமாக வைத்துவிட்டு, வெளியே வந்தாள்.

இருள் அகலவில்லை. சாம்பலாய்ப் படர்ந்து கிடந்தது. செல்லாச்சி வளவுக்கு மேற்காக அடர்ந்து கிடந்த பனை வடலி களுக்குள் மறைந்தவள், காலைக் கடனை முடித்து வந்து, கைகால் அலம்பிக் கொண்டாள்.

ஆட்டுக் கொட்டிலில் ஆடு கத்திக்கொண்டிருந்தது. குட்டியின் குரலும் சன்னமாக ஒலித்தது. கொட்டிலின் பக்கமாக நகர்ந்தவள், அதனைக் கூட்டிச் சுத்தம் செய்தாள்.

தாவாரத்தில் வெட்டிக் குவித்துக் கிடந்த முள் முருங்கை, பாற் கிழுவை அலக்குகள் சிலவற்றை எடுத்து, ஆட்டுக்கும் குட்டிக்கும் போட்டாள். ஆடும் குட்டியும் பரபரப்புடன் குழையில் விழுந்து, மொசு மொசுப்பதை ஒருகணம் ரசித்தவள், கொட்டிலை விட்டு வெளியே வந்தாள்.

வீட்டையும் அடுப்படியையும் பெருக்கிச் சுத்தம் செய்தவள்; முற்றத்தையும் நீர் தெளித்துக்கூட்டினாள்.

சிறு குடிசைதான் அவளது இல்லிடம். அதைச் செம்மண் கலந்த சாணத்தால் மெழுகி அழகுபடுத்தியிருந்தாள்.

வீட்டுக்குக் கிழக்காக, தனித்து அடுப்படி இருந்தது. அதுவும் ஓலைக் குடில் தான்.

வீட்டுக்கு வடகிழக்காகக் கிணறு. கட்டுக் கிணறு. மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறை கண்டது. அது உட் பூச்சு உடைந்து ஒறுவாய் விழுந்து கிடந்தது.

'ஆச்சி அப்பு, பின்னர் ஐயா அம்மா, இப்பொழுது சகட்டு மேனிக்கு நான்; அதுவும் தனியனாய். ஆச்சிதான் என்னைத் தவிக்க விட்டிட்டுத் தை மாதக் கடைசியில போய்ச் சேர்ந்திட்டா'

'ஆச்சி போய் இப்ப ஆறு மாதம் ஆகுது... அவ மட்டும் இல்லையென்றால் என்ரை இந்த இருபது வருஷச் சீவியம் நாறலெடுத்திருக்கும். என்னை மட்டுமா. சிவலிங்கத்தையும் ஒரளவு குப்பை கொட்டாமல் பார்த்துக் கொண்டது அவ தான்...'

ஆச்சியின் நினைவுகளில் கனிந்து தோயாதிருக்க அவளால் முடிவதில்லை. நினைவுகளோடு, விம்மலும் பொருமலும் கூடவே அவளுக்கு வந்துவிடும்.

அவளது அம்மா, அவள் பிறந்த கையோடு - துவாலைத் துணி கழுவ முன்னரே போய் விட்டாள். ஐயாவும் இல்லை என்ற நிலையில், ஆச்சி தான் அவளுக்கு அப்பொழுது எல்லாம் என்ற நிலை.

தாயத் தின்னியான அவளை ஆச்சி தான் தூசி, துரும்பு படாமல், பொத்திப் பொத்தி வளர்த்தாள்.

இவள் பிறந்தது தைமாதச் சரிவில். அடுத்து வந்த மாசியில் பனி மூசிப் பெய்தது. இவள் பனிக்குளிரில்நடுங்குவதைக் கண்ட ஆச்சி, தனது மார்புச் சேலையில் பொதித்து, அவளது வெத வெதப்பான சரீரம் தந்து, இவளுக்கு உயிரளித்தாள்.

ஆட்டுப்பால் தான் அவளுக்கு ஆதாரமாய் இருந்தது. உயிர்ப்பசையையும் தசையையும் பூசியது அது தான்.

அன்று தொட்டு இன்றுவரை ஆட்டுப் பாலென்றால் அவளுக்கு உயிர். அந்தநினைப்பில் அவளுக்கு எல்லாமே மறந்து போகும். வரும் போதும் போகும் போதும் பேணி பேணியாய்ப் பாலை மண்டுவாள். அதுதான் அவளது முதல் வேலையாக இருக்கும்.

வேலை முடிந்து, ஆட்டுப்பாலைப் பெரிய செம்பொன்றில் தளும்பத் தளும்பக் கறந்து நிமிர்ந்தவள், படலையடியில் ஏதோ சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். சிவலிங்கம் நிற்பது தெரிந்தது. பார்த்ததும் கூச்சப்பட்டவளாய்த் தனது மார்புச் சேலையை இழுத்து விட்டுக் கொண்டாள்.

பிறேசியர் அணியாத மார்பு கொள கொளத்துக் கிடந்தது.

அவன் கண்களைப் பரவ விட்டான். அவளது மார்பையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறித்துப் பார்ப்பதில் அவனது கண்கள் நிலைத்தன.

'வடுவா. என்ன பார்வை இது? என்ரை கண்களைப் பார். கண்களில் வழியும் காதலைப் பார். இல்லை, என்ரை முகத்தைப் பார்; அதில் உறைந்து போய்க் கிடக்கும் பரிதவிப்பையும், பிரியத்தையும் பார். அதையெல்லாம் விட்டிட்டு இதென்ன கள்ளத்தனம். காவாலி... காவாலி...'

நுனிநாக்கில் வந்து குறுகுறுத்த வார்த்தைகளைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

உணர்ச்சிகள் சமனப்பட, தன் நிலை உணர்ந்த சிவலிங்கம் அவளைப் பார்த்துச் சொன்னான்:

"திருநா காலையில கிடாயடிச்சவன். நல்ல பங்கு... அதில உனக்கும் கொண்டு வந்திருக்கிறன்." கூறியவன், பனையோலைக் குடலையில் இருந்த இறைச்சியை அவளிடம் தந்தான்.

வாங்கிக் கொண்டவள்:

"சமைச்சு வைக்கிறன் மதியம் வா சாப்பிட..."

"இல்லை. இண்டைக்கு என்ரை சமையல். மெண்டிஸ் ஸ்பெசலும் இருக்கு. வரதனையும் யோகனையும் சாப்பிடக் கூப்பிட்டிருக்கிறன்."

"சரிசரிஉன்ரை விருப்பம். இரு தேத்தண்ணி யாவது குடிச்சிட்டுப் போ. ஆட்டுப்பாலிருக்கு..."

சுண்டக் காச்சிய பாலில், ஆட்டு மொச்சை அடிக்காமல் இருக்க, இஞ்சி தட்டிப் போட்டு, சுடச் சுடத் தேநீர் கொண்டு வந்தவளைப் பார்த்து, அவன் சொன்னான்:

"முத்தருக்கு நவக்கையில மண்ணடிக்க வேணும்... வண்டில் கட்ட நேரமாச்சுது. நான் போக வேணும். மாடுகளும் இரண்டு தூர் வைக்கல் கடிச்சுப் போட்டு நிக்குதுகள். புண்ணாக்குத் தண்ணி இன்னும் காட்டேல்லை."

அவனது பேச்சுக்கு "ம்..." சொன்னவள், இவனை ஒருநாள் இழுத்து வைத்துக் கொண்டு, ஊரில அவனைப் பற்றிக் கதைக்கிற கதையெல்லாம் உண்மைதானா? என்று கேட்க வேணும் என நினைத்துக் கொண்டாள்.

நிமிர்ந்து நின்று நெடுமாலாய்த் தோற்றம் தரும் அவனையும், அவன் தேநீர் அருந்தும் அழகையும் ஓரப்பார்வையால் பருகினாள்.

281264

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசித்தாள்.

சாறம் மட்டும் கட்டியிருந்த அவனது மேலுடம்பு இளவெய்யிலில் பளபளத்தது. திமில் விடைத்த அவனது செங்காரி நாம்பன் மாதிரி அவன் இருந்தான். மார்பில் காடாய்ச்சடைத்துக் கிடந்த முரட்டு மயிர்கள் உரச உரச அவனை ஆரத்தழுவ அவள் அப்பொழுது ஆர்வங் கொண்டாள்.

'இந்த அடக்கமற்ற தவிப்பு இப்பொழுது எதற்கு.? இதென்ன கட்டுப்பாடு ஏதுமில்லாத தேவடியாள்தனம்.'

அவள் தன்னைத் தானே திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டாள்.

'அவன் மீதான காமமும் காதலும் ஏன் இப்படி அடர்த்தி கொண்டு சதிராட வேண்டும். இது வேண்டாமே. நாலு பேர் நொள்ளை சொல்லிற மாதிரி எதுவும் நடக்காமல் இருப்பதே நல்லது...'

அதிக அளவு மன உளைச்சலுக்கு உட்பட்ட அவள் - சற்றுப் பயந்தவளாய், அவன் தந்த பேணியை வாங்கியபடி வேகமாக வீட்டி னுள்ளே சென்றாள்.

அன்று முழுவதுமே அவனது நினைவுகள் தந்த அழுத்தங் களால் அவள்மிகுதியும் குழம்பிப் போய்க் கிடந்தாள்.

●

அவனை அவள் அறிந்த கொண்ட போது அவளுக்கு வயது மூன்று. அவனுக்கு ஆறு.

ஆச்சி வீட்டுப் பக்கம் வந்த சிவலிங்கம், மங்களத்தைக் கண்டதும் - இறுக்கமாகப் பற்றி, சற்று முரட்டுத்தனமாக அவளைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டான். தூக்கும் போது விழி பிதுங்கிப் போன அவன், "குண்டுப் பூசனி. குண்டுப்பூசனி" என்று முனகினான். அந்த முனகலைப் புரிந்து கொள்ளும் பக்குவம் இல்லாத அவள் - அவன் ஏதோ தன்னுடன் செல்லம் கொஞ்சுவதாக நினைத்துக் கபடமேது மில்லாது சிரித்தாள். அந்தச் சிரிப்பில் கிறங்கிய அவன், அவளை வாரி எடுத்து, வாஞ்சையுடன் உச்சி முகர்ந்து, கன்னங்களில் முத்தமிட்டான். அதில் ஆசை அழியாத அன்பு இருந்தது.

"எல்லாம் உனக்குத்தான்ரா. உந்தக் கரு வாச்சி வேசையை நீயே கட்டிக்கொள்ளன். கொட்டில் வீடுதான் எண்டாலும், வளவு இருக்கு. அதோட பத்துப் பரப்பு நெற்காணி இருக்கு. இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருக்கும் சோறு போடும். தவற விட்டிடாத. விட்டால் ஆரன் வந்து தட்டிக் கொண்டு போயிடுவாங்கள்…”

அப்பக்கமாக வரும் ஆச்சியின் வேத மந்திரம் இது.

அவளது பேச்சைக் கேட்கும் போதெல்லாம் புரிந்தும் புரியாததுமான வெக்கம் அவனை அடர்த்தியாக வந்து மூடிக் கொள்ளும்.

ஆட்டுப்பாலுடன் வந்த ஆச்சியிடமிருந்து, போச்சியை வாங்கி, மங்களத்துக்கு பாலை அவனே ஊட்டி விட்டான்.

பால் குடித்ததும் தத்தக்க, பித்தக்க என்று தள்ளாடி நடந்த மங்களம் - அவனது கையைப் பிடித்தபடி, ஆட்டுக் கொட்டில் வரை அழைத்துப் போனாள். ஆடுகளோடும், அவனோடும் சற்று விளையாடினால்தான் அவளுக்குப் பத்தியப்படும். இல்லாவிட்டால் அன்றைய தினம் முழுவதும் அவள் திடீர்திடீரென அழுது அமைதி இழந்து தவிப்பாள்.

“நட்டா முட்டி, எடேய் நட்டாமுட்டி இஞ்ச வாடா.” இப்படித்தான் ஆச்சி அவனைக் கூப்பிடுவாள். ஆச்சி அழைப்பது போல ஒருவகையில் அவன் நட்டா முட்டிதான். அத்துடன் அவனது திருட்டு வேலைகளும், தில்லுமுல்லுகளும் சொல்லி மாளாது. ஊர்ப் பெட்டையளுக்கு அவன் சிம்ம சொப்பனம். மீசை அரும்பாத அந்த வயதிலும் அவர்களைத் தொட்டுப் பார்க்க அவன் ஆசைப்பட்டான். ஊரில் மட்டுமல்ல, அயலட்டையிலும் அவன் ஆளுகைக்கு உட் படாத இடங்களிலும் அவனது திருகுதாளங்கள் சளைக்காது விகாசம் கொள்ளும்.

அவனது சின்னதான சேட்டைகளும், திருட்டுகளும் அவனுக்குக் கெட்ட பெயர் வாங்கித் தரப் போதுமானவையாக இருந்தன.

ஒரு சமயம், ஆச்சியிடம் வந்த அவன் - ஒரு சாக்குப் பையில் வைத்துப் பத்துத் தேங்காய் வரை தந்தான். அதை உள்ளே எடுத்து வைத்த ஆச்சி, ‘ஆர் வீட்டுத் தோட்டத்தில றாஞ்சினானோ..?’ என நினைப்பதற்கு முன்பாகவே முற்றத்தில் முகத்தாரின் குரல் கேட்டது.

“சிவலிங்கம் வந்தவனா..?”

அவரது விசாரிப்பில் கடுமை தொனித்தது.

“வளவில பறிச்சுப் போட்ட தேங்காயில பதினைஞ்சைக் காணேல்லை. அந்த அறுதலி மோன் தான் எடுத்திருக்கிறான்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகணம் திடுக்கிட்ட ஆச்சி, சிவலிங்கம் தந்த தேங்காய் களைப் பத்திரப்படுத்தி விட்ட நிம்மதியுடன் சொன்னாள்:

“செல்லாச்சி வளவிலதான் நிப்பான்... போய்ப் பாருங்க.”

தொய்வுத் தொந்தரவுள்ள அவர், மூச்சு இரைக்க இரைக்க அவனைத் தேடிப் போனார்.

அவர் போவதைப் பரிதாபமாகப் பார்ப்பதைத் தவிர ஆச்சியால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

இன்னொரு சமயம் - இரவு பத்துப் பதினொரு மணியிருக்கும். சிவலிங்கத்தின் குரல் படலையடியில் கேட்டது. வெளியே வந்த ஆச்சி, திக்பிரமை பிடித்தவள் போல் நின்றாள்.

அவள் முன்னால் சிவலிங்கம் - தூக்க முடியாத கப்பல் வாழைக்குலையுடன் நின்றான். பார்த்தவுடன் கனகர் வீட்டுத் தோட்டத்துக் குலை என்பது ஆச்சிக்குத் தெரிந்து விட்டது.

விளக்கு மாற்றை எடுத்துக்கொண்டு ஓடி வந்தாள்.

“எங்க கை வைக்கிறது. எங்கை விடுகிறது எண்டு கூட உனக்குத் தெரியாதா? கனகு என்ரை தம்பி... தம்பியடா... அவனிட்டக் களவெடுத்து, நான்... நான் தின்னேலுமா? நீயே கொண்டு போ... கொண்டு போய் முழுவதையும் விழுங்கு...”

அவளது குரலில் இழைந்த குரோதம் அவனை நடுங்க வைத்தது.

வாழைக்குலையைத் தூக்கிக் கொண்டு ஓடும்போது அவன் விந்தி விந்தி நடந்தான். அதைப் பார்த்த கிழவிக்குத் திகிலாய் இருந்தது. துக்கம் தொண்டையில் திரண்டு அவளை இம்சைப் படுத்தியது.

‘என்ன இது..? பொடியனுக்குக் காலில முள்ளுக்கிள்ளுக் குத்தியிருக்குமோ...!’

பதைபதைப்புடன் ஆச்சி அவனையே பார்த்தபடி நின்றாள்.

காலையில் ஆச்சி முழிப்புக் கண்டு எழுந்த போது மேற்குத் திண்ணையில், மங்களத்துடன் சிவலிங்கம் இருப்பதைக் கண்டாள். அவனது வலது காலைத் தனது மடியில் தூக்கி வைத்துக் கொண்டு, பின் ஒன்றினால் அவனது காலைக் குத்திக் கிளறிக் கொண்டிருந்தாள்.

“பொறு. கொஞ்சம் பொறடா. இதோ இந்தா. இந்தா வந்திட்டுது” கூறியவள், மழுங்கி முறிந்து போன மாதுளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளொன்றை எடுத்து, அவனது கையில் வைத்தாள்.

ஆச்சி அதனை எட்டிப் பார்த்தாள். முள் சற்றுப் பெரிதாக இருந்தது. அவனது காலில் முள் இருந்த இடத்திலிருந்து இரத்தம் வடிந்தது. உள்ளே எழுந்து சென்ற மங்களம், பழந்துணி யோடும், சூடாக்கிய உப்புக் கட்டிகளோடும் வந்தாள். வந்தவள், அவனது காலில் உப்பை வைத்துக் கட்டி விட்டாள்.

நெகிழ்ச்சியுடன் அவளைப் பார்த்தான். அவளது கண்களில் நீர்...!

'இவளுக்கு. இந்தப் பெட்டைக்கு. என்னில இவ்வளவு விருப்பமா...? பார்ப்பது, சிரிப்பது, பேசுவது, அன்பை அருவியாய்ச் சொரிவது என்று இவளுக்கு எல்லாமே எப்படி முடிகிறது?'

தனது மன அணைப்பில் எப்பொழுதும் மங்களமே இருப்பதான நினைப்புடன் எழுந்து, படலையைத் திறந்து நடந்து போனான்.

லீவு நாட்களில் சிலுந்தாப் பக்கம் இருவரும் போவார்கள். அவர்களது கைகளில்நார்க் கடகம் இருக்கும்; எருப் பொறுக்கப் போவதென்பது ஒரு சாட்டு மட்டுமே! சிலுந்தாப் பக்கம் போகக் கூடாது என்று ஆச்சி படித்துப் படித்துச் சொன்னாலும் அதை மதிக்காத அலட்சியமே அவர்களிடம் இருந்தது.

போகும் வழியில், அவர்களது இடைத் தங்கல் பெரிய பனந்தோட்டம் தான். தோட்டத்தின் மேற்காகப் பற்றிப் படர்ந்து கிடக்கும் புல்லாந்திச் செடிகளில் இருந்து அவள்தான் அவனுக்குப் பழம் பறித்துத் தருவாள். அவனைப் பிடுங்க விடமாட்டாள். அவள் பறித்துத்தர, அவன் சாப்பிடுவதையே அவள் பெரிதும் விரும்பினாள்.

தோட்டத்தில் கிழக்குச்சாய்வில் உள்ள நாக தாளிப் பற்றைகளின் நடுவில், சிறு சிறு மரங்கள் இருந்தன. மரங்களின் கிளைகளில் தொங்கிக் கிடக்கும் தூக்கணாங்குருவிக் கூடுகள்! பற்றை களை நீக்கி, லாவகமாய் உள்ளே சென்ற அவன், கூடுகள் இருக்கும் கிளைகளை, இவளுக்குச் சாய்த்துக் காட்டினான். கூடுகளில் முட்டைகளும், இறகு முளைக்காத குஞ்சுகளும் இருந்தன. குஞ்சுகள் தலை தூக்கி ஆடியபடி அவர்களிடம் உணவு கேட்டன. முட்டை களை கையில் எடுத்துக்கொண்ட அவன், அவள் எதிர்பார்க்காத சமயம், அருவருப்பு ஏதுமில்லாமல் அவற்றை உடைத்து, வாயில் ஊற்றிக் கொண்டான்.

அதைப் பார்த்துத் திடுக்கிட்ட அவள், "பாவ புண்ணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாத நாத்தலன்... நாத்தலன்...” என்று திட்டியபடி அவனை இழுத்துக் கொண்டு மேலே நடந்து போவாள்.

நெடுவல் செல்லத்துரையருடைய தோட்டப் பக்கம் வந்தவர்கள், சில வெள்ளரிப் பிஞ்சுகளைப் பறித்துக் கடித்தபடி, சிலுந்தாக்குளத்தை நோக்கி நடந்தார்கள்.

மாரி மழைக்குப் பின் சிலுந்தா நிரம்பித் தள தளத்தபடி கிடந்தது.

ஆலடிக்குண்டில் இறங்கியவன், சள்ளை மீனின் சாகசத்துடன் நீந்தினான்.

அவளை நீந்த வருமாறு அவன் அழைத்த போதும் அவள் சட்டை நனைந்து விடும் என மறுத்தாள். குளத்தில் இறங்காத அவள், கரையில் தென்கிழக்கு மூலையில் நின்ற ஆலமரத்தின் விழுதுகளைப் பற்றிப் பிடித்து ஊஞ்சல் ஆடினாள்.

நீரில் மிதந்த சிவலிங்கம் பலவிதமான வித்தைகளை அவளுக்குக் காண்பித்தான்.

நீரில் சுழி ஒடுவது. மூச்சைப் பிடித்தபடி, அவள் பதட்டப் படும் வரை நீரில் அமிழ்ந் திருப்பது. நிமிர்ந்த நிலையில் நீந்துவது. கவிழ்ந்து கிடந்து மிதப்பது. கால்களால் வலிக்காது, கைகளை மட்டும் துடுப்பாக்கி நீந்துவது என்று அவனது சாகசங்கள் நீடித்தன.

அவனையே வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்த அவளுக்கு, அலுப்புத் தட்டியிருக்க வேண்டும். அவள் அவனைப் பார்த்துத் திடீரெனக் கூறினாள்:

“சரியா நேரம் போச்சுது. நீந்தினது போதும் வா... வாடா வீட்ட போவம்.”

அவளது பேச்சைக் கேட்ட உடன், அவன் கரையேறினான். எருக் கடகங்களை எடுத்துக் கொண்டவர்கள், வீடு நோக்கி நடந்தார்கள்.

●

சிறு வயதில் லபித்த - அவனுடனான அந்த நட்பும், பிரியமும் அவள் வயதுக்கு வந்து குமரானது முதல், கலைந்து போகவே செய்தது. இருந்த போதும், அவர்களுக்கிடையிலான அந்தப்பந்தம் அறுந்து விடக் கூடாது என்பதில் அவள் அதிக அக்கறை எடுத்துக் கொண்டாள். அவனைக் காணும் சந்தர்ப்பங்களிலெல்லாம் இணக்கமாக, அவனை இழுத்து வைத்துக் கொண்டு, கதைப் பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தவறுவதில்லை. பொதுவாக அந்தக் கதைப்பெல்லாம் ஒரு வகையில் அவனைச் சீண்டுவதாகவே அமைந்து இருக்கும்.

"என்ன சிவா, உன்னைப் பற்றி ஊரிலை சாடை மாடையாய் ஏதேதோ கதையடி படுகுது. அது உண்மையா...? உந்த ஊர் மேயிற புத்திய விடன்ரா. அப்படி இருந்தாத் தான் நீ என்னைத் தொட முடியும். தொட்டுத் தாலி கட்ட முடியும்."

அவளது அந்தப் பேச்சுக்கு அவனிடமிருந்து எதுவிதமான எதிர்வினையும் வராது. மௌனமாகப் பார்த்து, சிரித்துவிட்டுப் போய்விடுவான். அவன் போவதற்கு, ஒதுங்கி வழிவிட்டு நிற்கும் அவளுக்கு மனதில் குமையும் ஏதேதோ நினைவுகள்.

'பருவத்தில் இந்த உடம்பு பாடாய்த் தான் படுத்துகிறது. உறைந்து போய்க் கிடக்கும் பாலுணர்வைத் தளர்த்துவதற்கு ஏதோ ஒரு துணை தேவையாய் இருக்கிறது. அதுதான் அவனை... அவனைக் கட்டுக்களை மீறிய காளையாக அலைய விடுகிறதோ...? நெறி பிறழ்ந்து அலையும் அவனுக்குத் துணையாக, சுகம் தரும் மருந்தாக நான் ஏன் இருக்கக் கூடாது? அப்படி எல்லாம் என்னால் இருக்க முடியுமா? அவனைச் சடங்கு செய்தால் எல்லாம் சரியாகி விடும். நினைத்த உடன் இதெல்லாம் சரி வருமா? சடங்கு செய்ய கால நேரம் வேணுமே. அதுக்கு முன்னர் அவனோடு அப்பிடி இப்பிடி இருந்தாலென்ன... குடியா முழுகி விடும்.'

பலவிதமான குழப்பங்களில் அவளது மனம் உழன்றது. அந்தக் குழப்பங்களிலிருந்து விடுபட அவள் மிகவும் பிரயத்தனப் பட்டாள். 'அதற்கான ஒரே வழிதன்னைத் தானே அவனுக்குத் தருவது தானோ...?' என நினைத்தாள்.

'சமூகம் - அதனடியான கூச்சம் என்றெல்லாம் இனியும் ஆருக்காக அலட்டிக் கொள்ள வேண்டும். அதென்ன...? தமிழ்ப் பாடத்தில் பத்திலோ பதினொண்டிலோ படித்தது. கந்தர்வ விவாகமா. அது மாதிரி இவனுடன் கொள்கின்ற இந்த உறவும் இருந்து விட்டுப் போகட்டுமே...!'

அந்த நம்பிக்கைகள் தந்த துணிவுடன் அந்தத் தவிர்க்க முடியாத பொழுதை எதிர்பார்த்தவளாய் அவள் காலத்தைத் தொலைத்த படி இருந்தாள்.

●

அவன் மீதான ஆசையின் ஊறலிப்புடன் மிதந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களத்துக்கு, அவனை உடனே பார்க்க வேண்டும் பார்த்துப் பேச வேண்டும் என்று இருந்தது.

அன்று சனிக்கிழமை. சனி நீராடி, பக்கத்திலிருந்த பட்ட வேம்பு வயிரவர் கோயில் வரை போய் வந்தாள். வீடு திரும்பும் போது, வழியில் புதறனில் பூச்சி மருந்து விசிறிக்கொண்டு நின்ற சிவலிங்கத்தைக் கண்டாள். அவளைக் கண்டதும் - அவன் தனது பற்கள் அனைத்தும் பளிர் என்று தெரியச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் தன்னை இழந்த அவள், நெருக்கமாக வந்து, அவனை அணைப்பது போலப் பார்த்தாள்.

"மத்தியானம் சாப்பிட வா. சமைச்சு வைக்கிறன்."

எதிர்பாராத அந்த அழைப்பு அவனை ஆச்சரியத்திலாழ்த்தி யது. அவள் அவனை பார்ப்பதற்கே கூச்சங் கொண்டவள் போலப் பாவனை பண்ணியவளாய் நிலத்தில் ஏதோ தேடினாள்.

'இது என்ன புது விண்ணாணமாய் இருக்கிறது.?' என நினைத்தவன் அவளைப் பார்த்துக் கூறினான்:

"இன்னும் மூண்டு வயல் தான் கிடக்குது மருந்து தெளிக்க. தெளிச்சுப் போட்டு வாறன்." அவனும் நெருக்கத்தில் வந்துதான் இதனைச் சொன்னான்.

மருந்து மணத்தை மீறி வந்த அவனது வியர்வை நாற்றம் அவளுக்குப் பிடித்திருந்தது.

"நல்லா வேர்த்துக் கொட்டுது. தலைத் துண்டை எடுத்துத் துடை" பக்குவம் சொன்னவள், தனது வீட்டுப் பக்கமாக நகர்ந்தாள்.

வீடு வந்த கையுடன், உலை வைத்து, மொட் டைக் கறுப்பன் புழுங்கலைச் சலித்தெடுத்துப் பானையில் இட்டாள்.

"என்ன கறி... புளி..."

அதில் அவளுக்கு எதுவித குழப்பமும் இருக்க வில்லை. கத்தரிக்காய்ப் பால்கறி. உள்ளியும் மிளகும் அதிக அளவில் போட்டு கொத்தமல்லி இரசம்; அதில் சுவைக்கட்டுமே என்று, துண்டுத் தக்காளிப்பழமும் சேர்த்துக் கொண்டாள். அறக் கீரைப் பச்சடி. எல்லாவற்றையும் ஒருவகை ரசிப் புடன் சமைத்து இறக்கினாள்.

கொல்லைப் பக்கமாகப் போனவள், அரிசி மணிகள் சில சிதறி, "ப்பா. ப்பா." என்று தனது கோழிகளைக் கூப்பிட்டாள். பறந்து வந்த கோழிகளில் - நடுவில் நின்ற சாவல்களில் - விடலை பார்த்துப் பிடித்துக் கொண்டாள். சாவலின் கழுத்தை முறித்தவள், பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற வேம்பில் அதை இருமுறை அடித்தாள். சாவல் இறந்ததை உறுதிப்படுத்திக் கொண்டவள், அதன் கழுத் துக்குக் கயிறு போட்டு இறக்கைகளை உரித்தாள். இறைச்சியைச் சுத்தம் செய்து சட்டியை நிரப் பினாள்.

இறைச்சியை அடுப்படிக்கு எடுத்து வந்தவள், அளவாக உப்பு, தூள், பால் எல்லாம் இட்டுச் சமைத்தாள். இறைச்சி மணம் கொண்டு, கொதித்து வந்த பொழுது, முதற் பால் கலந்தவள், வாயில் இட்டு ருசி பார்த்தாள். ரம்பையும், இரண்டலக்குக் கறிவேப்பிலையும் சேர்த்தவள், எண்ணெய் பிறந்து வந்ததும் கறியை இறக்கி வைத்தாள்.

உள்ளறைக்கு வந்தவள், ஆடைகளை உருவி எறிந்து விட்டுப்பாவாடையுடன் கிணத்தடிக்குச் சென்று, மீளவும் குளித்தாள். குளித்து விட்டு வரும்போது ராணி சோப் வாசம் அவளைச் சூழ மணத்தது. புதிதாக ஒரு சேலையை எடுத்து உடுத்திக் கொண்டாள். பிறேசியர் போடாமல் சட்டை போட்டுப் பின் குத்திக் கொண்டாள். வீட்டில் நிற்கும் போது பிறேசியர் அணியாமல் விடுவது அவளது இயல்பாகி விட்டது.

வெளியே வந்தவள், சாக்குக் கட்டிலில் சரிந்தாள். அயற்சியாக இருந்ததால் சற்றுக் கண் ணயர்ந்தாள்.

வெம்மையான மூச்சுக் காற்றின் ஸ்பரிச சுகம். திடுக்கிட்டு விழித்தவள், முகத்துக்கு அருகாக முகம் வைத்து, அவளையே விழுங்கி விடுவது போல் பார்த்தபடி நின்ற சிவலிங்கத்தைக் கவனித்தாள். அவளுக்குக் கூச்சமாக இருந்தது. திடீரென எழுந்து கொண்டவள், திண்ணையில் இருந்த செம்பை எடுத்து முகம் அலம்பிக் கொண்டாள்.

உள் திண்ணைக்கு வந்த சிவலிங்கம் தான் கொண்டு வந்த, கைப்பையிலிருந்த மென்டிஸ் ஸ்பெசலை எடுத்து வெளியே வைத்தான்.

"ம்... இது வேறயா...?" கேட்டவள், ஒரு சிறிய கண்ணாடிக் கிளாஸை எடுத்து அவனருகாக வைத்தாள். அத்துடன் ஒரு பீலிசு நிறைய கோழி இறைச்சித் துண்டுகளையும் கொண்டு வந்து வைத்தாள்.

சாராயத்தை கிளாஸில் வார்த்தவன், மிகவும் நிதானமாக உதட்டருகில் வைத்து, உதடுகள் பிரியாதவாகில், சிறிது சிறிதாக அருந்தினான். சாராயத்துக்குத் தண்ணீரோ சோடாவோ எதுவும் அவன் கலந்து கொள்ளவில்லை. இடைக் கிடை இறைச்சித்துண்டு களைக் கடித்துச் சுவைத் தவன், கண்களைச் சிமிட்டியபடி, "நாட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழியா...? அசலா இருக்கு பெட்டை. கைப்பதமும் ம்... ம்... அப்படியே தூக்கலா இருக்கு...!" என்று குதூகலித்தான்.

அவனுக்கு மப்புச் சிறிது ஏறியிருந்தது. மப்பு மயக்கத்தில் அடிக்கடி சிரித்துக் கொண்டான். அவளை அருகாக அழைத்து இருத்திக் கொண்டவன், இன்னொரு கிளாஸில் சிறிதளவு சாராயம் வார்த்து, கொஞ்சம் தண்ணீரும் கலந்து அவளுக்குத் தந்தான். அதை வாங்குவதற்கு ஒருகணம் தயங்கியவள், ஒரு மரியாதை கருதி வாங்கி, அதில் மேலும் நீர் சேர்த்து வாயில் ஊற்றிக் கொண்டாள்.

அவளது கிளாஸை மீளவும் நிரப்ப முயற்சித்த போது அவனைத் தடுத்தவள், "போதும். போதுமடா. நான் என்ன குடிகாரியா?" என்று குழைந்தாள்.

சற்று நெருக்கமாக வந்தவிட்ட அவளது கரங் களைப் பற்றியவன் - கண் கலங்கிய நிலையில், ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பது போல - அவளைப் பார்த்து ஏதேதோ உளறினான்:

"என்னை மன்னிச்சிடு மங்களம்.! என்னை இந்தப் பெட்டைப் பொறுக்கியை. ஊரில மதிக்கிறவள் நீ மட்டும்தான்." தொண்டை கரகரப்பு அடைய, சிறிது நேரம் மௌனமாக இருந்தவன், மீளவும் பேசத் தொடங்கினான்:

"உன்ரை ஆச்சி செத்துப் போனதால, எனக்கு ஆதரவா இருந்த ஒரு சீவனும் போயிற்றுது. நீயும் குமரானதும் பட்டும் படாமலும் தான் நடந்தை. கிட்ட நெருங்க முடியாத ஒரு தகிப்பு. நெருப்புக் கோளமாத் தான் நான் உன்னைப் பார்த்தன்."

"அப்படி இல்லை... உன் மேல இருந்த பட்சத்தை எனக்குத் காட்டத் தெரியேல்லை. அதோட, உன்ரை ஊர் மேயிற இந்திரன் புத்தியும் எனக்குப் பிடிக்கேல்லை. உன்னைப் பற்றிச் செய்திகள் என்ரை காதில ஏறுக்கு மாறாத் தான் விழுகுது. நீ போய்வாற பெண்டு கள் மாதிரிப் பதிவிரதையா என்னாலை இருக்க முடியேல்லை."

"நீ சொல்லிறதெல்லாம் உண்மை. என்ரை ஊர் மேயிற இந்தப் புத்தியை செருப்பால தான் அடிக்க வேணும். நீ தூரப்படாமல் இருந்திருந்தால், இந்தத் தறுதலைத்தனம் என்னளவில வராமல் இருந்திருக்கும். தனிச்சுப் போன எனக்கு ஆதரவா இருந்ததுகளிட்ட கொஞ்சம் அநுசரணையா இருந்திட்டன்."

"அநுசரணையா இருந்தனியோ..?" அவளது குரலில் நிரம்பிய ஏளனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பகவதி. செல்லற்ற பகவதி இடைக்கிடை தன்னைத் தந்தது மட்டுமில்லை, சமைச்சு வயிறாறச் சோறும் போடுவாள். அப்படி யொண்டும் ஒட்டுதலான உறவல்ல அது. எல்லாமே காஞ்ச மாடு கம்பில விழுந்த கதை தான். சிவசம்பன்ரை வடிவாம்பிகை பத்தோ இருபதோ காசு கையுக்கை வைச்சாத் தான் கிட்ட வருவாள். சாப்பிட வழிவகையில்லாத பெட்டை எண்டதால விழுந்திட்டாள். நாமுத்தன்ரை மகளும் சடங்கு முடிச்சு, புருஷனை விட்டிட்டு வீட்டோட இருக்கிறாள். அவளின்ரை தயவும் இடை சுகம் உண்டு."

"இதெல்லாம் ஒருவகையில உன்னால தான்... ஆச்சி சொன்னது போல இந்தக் கருவாச்சியை நான் கட்டியிருந்தால் உதெல்லாம் நடந்திருக்காது. இது விஷயமா உன்னோட பேச எனக்கும் தைரியம் வரேல்லை... கொஞ்சம் பயமாக்கூட இருந்தது. இப்பவும் பயமாய்த் தான் இருக்குது. இந்தத் தூரமும் விலகலும் இல்லாமல் இருந் திருக்கலாம்!"

கூச்ச நாச்சம் ஏதுமில்லாமல் தன்னைப் பற்றியும் தனது தலை தடுமாறிய காமத்தைப் பற்றியும் உடைத்து உடைத்து அவன் பேசுவதை, குறுக்கீடு ஏதும் இல்லாமல் அவள் கேட்டுக் கொண்டி ருந்தாள். அவன் தொடர்ந்து பேசினான்:

"இப்ப, எல்லாமே திடீரென ஒரு முடிவுக்கு வந்த மாதிரி இருக்குது... கள்ளப்பட்ட மனசில விழுந்த கீறல் கொஞ்சம் கொஞ்சமா நிரவிவாற மாதிரி இருக்கு..."

"இல்ல... நீ சொல்லிறது பொய். சுரி சேத்திலை விழுந்தவன் லேசில தப்பேலாது... தம்பி வந்ததா நான் கேள்விப்படேல்லை."

"என்ன... என்ன உன்ரை பேச்சு, பூடகமாயிருக்கு."

"இதில என்னபூடகம், எல்லாம் ஊரறிஞ்சது தான். புதிசா. கரம்பன் ஸ்ரானிஸ்லாஸ் மாஸ்ரரின்ரை மகள் ஸ்ரெலா ரீச்சரில உன்ரை கண் விழுந்திருக்குதாம்..."

"விசர்க்கதை... ஆர் உனக்கு இதைச் சொன்னது."

அவனது குரலின் பதகளிப்பு பாவனையாக இருந்தது.

"யோகன்தான் சொன்னவன்..."

"உந்தக் கதை காவிச் சொண்டு உரஞ்சிற புத்தி அவனிட்டை யும் இருக்கெண்டு எனக்குத் தெரியாமல் போச்சு..."

"சரி சரி... விடு. உன்னை நான் முழுசா நம்பிறன். ஆர் என்ன சொன்னாலும் இனி எல்லாமே உன்னோட தான்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்ல நாள் பார்த்து... உன்ரை கழுத்தில தாலி தளதளக்க... நாலு பேர் மதிக்க நாம தலை தூக்கி வாழ வேணும்... இந்த ஆசை எனக்கு மனசோட கிடக்குது மங்களம்..."

"எனக்கு அந்த ஆசை இல்லையா சிவா...! எனக்கும் இருக்கு..." என்றவள் ஏதோ தீவிரமான யோசனையில் மனசைத் தழைய விட்டாள்.

'இவனிடம் எத்தனை குறைகள்... அதே நேரத்தில் நெஞ்சைத் தொட்டுப் பூஞ்சிறகாய் வருடும் நிறைகளும் மனசுக்கு ஆறுதல் தருவ தாய்... குறைகள் புறமொதுங்க, நிறைகளோடு கூடிய இந்த மனிதனைத் தானே நான் நேசிக் கிறேன். விளையும் பயிர் அது முளை கொள்ளும் மண்ணின் இயல்புகளுக்கு ஏற்பத் தானே அதன் பண்புகளை வரித்துக் கொள்ளுகிறது. அதுபோல, பாலையாய் தகிக்கும் இந்தச் சூழலில் அபூர்வமாய் முளை வெடித்த நெருங்சியின் மஞ்சள் சிறுமலர் அல்லவா இவன்! முட்கள் சூழ உள்ள இந்த மலர்தான் எனக்குப் பிடித்திருக்கிறது... நம்மைப் பார்த்து முகம் சுழித்துக் கொள்ளும் சனங்களைப் பற்றி நான் கவலைப்பட வேண்டுமா என்ன...? கரடு முரடான இந்த மனிதனிடம் ஏதோ ஒன்று இருக்கிறது. அந்தப் பட்டுப் பகுதியை கண்டறிந்து புளகிப்பது தான் இனி என் வேலையா...?'

பல வகையில் கிளர்ச்சியடைந்த அவள், அவனருகா வந்து, அவனை இழுத்து அணைத்துக் கொண்டாள்.

முரட்டுத்தனமான அவனது தலை முடியால் கவரப்பட்டவள், தனது கரங்களினால் அதைக் கோதி விட்டபடி கூறினாள்:

"சரி... சரி குடிச்சது போதும்... எழும்பு... எழும்பிச் சாப்பிட வா..."

அதற்கு "ம்..." சொன்னவன், அவளுடன் அடுப்படி வரை வந்தான். மொட்டைக்கறுப்பன் அரிசிச் சோறும் கோழிக்கறியும் அவனுக்கு ருசித்தது. ரசிப்புடன் உண்டவன், அவள் சாப்பிடும்வரை உடனிருந்தான்.

எல்லாம் ஆனதும். சிகரெட் ஒன்றைப் பற்றியபடி வெளித் திண்ணைக்கு வந்தான்.

அடுப்படியில் சகலதையும் ஒதுக்கி வைத்த மங்களம் அவனரு காக வந்து உட்கார்ந்து கொண்டாள்.

தயக்கம் ஏதுமில்லாமல் அவனது கரங்களை எடுத்துத் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளில் பொதித்துக் கொண்டாள். அப்பொழுது அவனது கரங்கள் லேசாக நடுங்குவதைக் கண்டவள்: 'ஏன்... எதற்கு இதெல்லாம்...' என்பது போல அவனைப் பார்த்தாள்.

"ஒண்டுமில்லை... உன்னைத் தொட எனக்குப் பயமாயிருக்கு. சுத்தம் ஏதுமில்லாதவன் உன்னை எப்படி... எப்படித் தொடேலும்?"

"விசர்... உனக்குச் சரியான விசர்... பழசையெல்லாம் மனசில போட்டுக் குழம்பாதை..." கூறியவள், இன்னும் நெருக்கமாய் வந்த அவனை அணைத்துக் கொண்டாள்.

சில காலமாகத் தூரத்திலேயே பார்த்துப் பரவசப்படுவதும் திருப்திப்படுவதுமாக இருந்து வந்த அவளுக்கு, இந்த நெருக்கம் மிகுந்த மனத்திருப்தியைத் தந்துது. உணர்ச்சிவசப்பட்டவள், நெகிழ்ச்சியுடன் அவனை அணைத்து அவனது நெற்றியில் முத்தமிட்டாள்.

"எனக்கு நீ வேணும்... முழுசா வேணும்..." பிதற்றியவள். அவனது உதடுகளை லேசாக விரல்களால் வருடினாள்.

இருவரும் எழுந்து உள்ளறைக்குச் சென்றார்கள். குளிர்ச்சி யான தரையில், ஆடை நெகிழ்ந்த நிலையில் அவளைப் பார்த்த அவன்:

'இவவின்ரை உடம்பு என்ன மாதிரிப் புதுப் பூப்போல... பட்டுப்போல இருக்கு...' நினைத்தவன், அவளை இழுத்து, அவளது இடதுகாதை உதடுகளால் கவ்வினான். பின்னர், கழுத்திலும் கண்களிலும் முத்தமிட்டான்.

அவள்தான் மீளவும் அவனை நாடி, உதடுகளில் முத்த மிட்டாள். அந்த நீண்ட அழுத்தமான முத்தம் அவனைத் திணற வைத்தது. அப்பொழுது அவர்கள் காமத்தின் கனிவையும், குறுகுறுப்பையும் புதிது புதிதாக எதை எதையோ உணர்த்தி விரியும் அதன் அழகையும் உணர்ந்து, மெய் மறந்து இணைந்து கிடந்தார்கள்.

"இது எனக்குக் கடவுளைக் கும்பிடிற மாதிரி இருக்கு சிவா...!"

அவளது பேச்சைக் கேட்டுச் சிரித்தவன்:

"ம்...ம்... என்னைப் போல துர்த்தேவதைகளும் சில வேளைகளில் கடவுளைப் போலத் தான் தெரிவார்கள்...!" முனகியவன், அவளது உடல் காண்பித்த மெய்ப்பாடுகளையும், உடல் மொழியையும் பல கோணங்களில் பார்த்து ரசித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தப் பெட்டைக்கு என்னில இவ்வளவு விருப்பமா...? என்னில தோய்ந்து தோய்ந்து மறுகும் இவள்தான்... எனக்கு... எனக்கு வேணும். வாழும் நாள் முழுவதும் வெள்ளை மனதோட... சுகமோ, துக்கமோ... எல்லாவற்றிலும் கலந்து நின்று கரையக் கூடிய இவள்... இவள் எவ்வளவு இனிமையானவள்?' நினைவுகளில் திளைத்தான்.

ஆடைகள் முழுமையாக நீங்கிய நிலையில் அவனோடு கிடந்த அவளை வாரி எடுத்தவன், ஆசைதீரும்வரை தன் பங்குக்கு முத்த மிட்டான். தனது உதடுகளால் அவளது உதடுகளை வருடியவன், சற்றுக் கீழிறங்கி அவளது மலர்ந்து கிடந்த மார்பிலும் முத்த மிட்டான். அதேசமயம் அவளது பிருஷ்டத்தை இரு கரங்களாலும் ஏந்தியவன், அவளை முயங்க ஆரம்பித்தான் அந்த முயக்கம் நீண்ட நேரம் நீடித்தது.

அது ஆண்மையின் விஸ்வரூபம்.... அதன் தரிசனம்... அவளை மெய் சிலிர்க்க வைத்தது.

இருவரும் கலவியின் உச்சத்தை அடைந்து, நெகிழ்ந்து, புரண்டு படுத்தார்கள்.

"இந்த ஜென்மத்துக்கு இது போதும்... போதுமடா சிவா..." அவளது பரிவு ததும்பும் குரல் அவனது காதில் விழுந்தது. அதைக் கேட்டதும் உடல் சிலிர்த்தவன், அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டான்.

அன்றுமட்டுமல்ல, அடுத்து வந்த நாட்களிலும் அவர்களிரு வரும் சந்தித்துக் கொண்டார்கள். அந்தச் சந்திப்புகள் அவளுக்கு வாழ்க்கை மீதான அழுத்தமான ஒரு நம்பிக்கையைத் தந்தது.

●

சிவலிங்கம் திருந்திவிட்டான் என்று தான் சொல்ல வேண்டும். எந்தப் பெண்ணுடனும் அவனது சகவாசம் இல்லாமலே ஆகி விட்டது. கரம்பன் ஸ்ரானிஸ்லாஸ் மாஸ்ரரின்ரை மகள் ஸ்ரெலாவில் இருந்த மையலும் இச்சைகளும் அவனை விட்டுத் தூர விலகின.

நல்ல நாள் பார்த்து மங்களத்தின் கழுத்தில் தாலி கட்டும் நினைப்பே அவனை முழுமையாக ஆக்கிரமித்திருந்தது. அந்த நினைப்புடனேயே மங்களமும் இருந்தாள்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
27 JAN 2021
மாநகர சபை
யாழ்ப்பாணம்

KOHA
JPL

134011

## ஆசிரியரது சிறுகதைத் தொகுதிகள்

*மாற்றம் - 1980 ஜூன்*

*உலா - 1992 ஜனவரி*
யாழ்.இலக்கிய வட்டம்
அகில இலங்கை சுதந்திர இலக்கிய அமைப்பு
வடகீழ் மாகாணசபையின் சாகித்திய அமைப்பு
இலங்கை சாகித்திய மண்டலம்
ஆகியவற்றின் பரிசில்களைப் பெற்றது.

*சட்டநாதன் கதைகள் - 1996 ஜூலை*

*புதியவர்கள் - 2006 நவம்பர்*
நாவேந்தன் விருது பெற்ற நூல்.

*முக்கூடல் - 2010 பெப்ரவரி*
வடக்குமாகாண சபையின் சாகித்திய அமைப்பு
இலங்கை சாகித்திய மண்டலம்
தமிழியல்
ஆகியவற்றின் பரிசில்களைப் பெற்றது.

*பொழிவு 2016 வைகாசி*
அரச இலக்கிய விருதுக்குத் தெரிவு செய்யப்பட்ட நூல்களில் ஒன்று.

*தஞ்சம்- 2018 ஆனி*
வடக்குமாகாண சபையின் சாகித்திய அமைப்பின் பரிசில் பெற்றது.
அத்துடன் அரச இலக்கிய விருதுக்குத் தெரிவு செய்யப்பட்ட நூல்களில் ஒன்று.

## நாவல்

உயிரில் கலந்த வாசம் - *2019 ஆடி*


## ஆசிரியரது கவிதைத் தொகுதி

*நீரின் நிறம் - 2017 ஆடி*
வடமாகாண சபை சாகித்திய விருது பெற்றது.

*துயரம் தரும் அழகு - 2019 வைகாசி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர் பெண்கள் மீது மதிப்புக்கொண்டவர் அவர்களது அக
மனப்போராட்டங்களை உணர்வுபூர்வ மாக வெளிப்படுத்தக்
கூடியவர். கனவுமெய்ப்பட வேண்டும், செல்லும் திசை, கனவும் பெ-
ாழுதுகள், தனியன்கள், தீர்மானமாய் முதலான சிறுகதைகளில்
பெண்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், எதிர்பார்ப்புகள்
துல்லியமாகப் பதிவு பெற்றுள்ளன. இவரது பெண்பாத்திரங்கள்
அகத்தடைகள் எதுவுமின்றி தம் காதலை, காமத்தை வெளிப் படுத்-
துபவர்கள். தமது வாழ்க்கை தொடர்பாகத் தீர்மானமெடுக்கும் தற்று-
ணிவுமிக்கவர்கள். தனியன்கள் சிறுகதையில் வரும் மங்களம் என்ற
பாத்திரத்தை இதற்கு வகைமாதிரியாகக் குறிப்பிடலாம்.

– ந.குகபரன்

ISBN 978-955-0958-38-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org